மனோஹர்
கிருஷ்ணகுமாரி
குமுதினி
விமலா
பீரு மகமது
நந்தாராம்
தென்னிந்தியாவின்
தலை சிறந்த நடிகர்
நாகய்யா
முற்றிலும் மாறுபட்ட பாத்திரத்தில் நடிக்கும்
நியூ இரா
ப்ரொடக்ஷன்ஸாரின்
முதல் சித்திரம்
விடுதலை
நியூ இரா தயாரிப்பு........ டைரக்ஷன்...ராம்நாத்
மற்றும் பல பிரசித்தி பெற்ற நக்ஷத்திரங்களுடன்..
வசனம்..........வேலவன்
சங்கீதம்... லக்ஷ்மண் ரகுநாத்
ஸ்டூடியோ..... பிலிம் சென்டர்
விவரங்களுக்கு:-
நியூ இரா ப்ரொடக்ஷன்ஸ்... சென்னை-26.

டிஸம்பர் 19உ முதல்
சென்னை - பாரகன், கிரௌன், சரஸ்வதி மூன்று தியேட்
டர்களிலும், மற்றும் தமிழ் நாடெங்கும் நடைபெறுகிறது.
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்
லக்ஷ்மி
தமிழ்
கண்ணாம்பா • வனஜா • எம். ஸரோஜா • ஸி. கே. சரஸ்வதி
மனேஹர் • எல். நாராயண ராவ் • பிரண்ட் ராமசாமி • சந்திரபாபு
டி. வி. சேதுராமன் நடித்தது
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

53/1-54

வருகிறது

ராஜி

என் கண்மணி...

ஜெமினி
சித்திரம்

படம் 12

காட்சி 5

பேசும் படம்

★ ஜனவரி 1954 ★

1.	'பேசும் படம்' பேசுகிறது	...
2.	ஸ்டுடியோ விஜயம்	...
3.	செய்திச் சுருள்	... 21
4.	செய்திப் படங்கள்	... 28
5.	பின்னணிக்குயில்	... 36
6.	சந்திரஹாரம்—இருவர்ணப்பட அநுபந்தம்	... 37
7.	என். என். கண்ணப்பா— வாழ்க்கைச் சித்திரம்	... 45
8.	அவன்?—திரைக்கதை, வசனம்	... 57
9.	ப்ளாஸா டாக்கிஸ்	... 61
10.	கேள்வி—பதில்	...
11.	நான் ரஸித்த காட்சி	... 68
12.	தபால் பெட்டி	... 75
13.	கற்கோட்டை—படக் காட்சிகள்	... 77
14.	வாழ்க சினிமா!	... 85
15.	1953-வருஷத்திய வெளியீடுகள்	... 87
16.	'பேசும் படம்' டைரி	... 9

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

'பேசும் படம்' பேசுகிறது

கலர் லேபரடரி

சென்ற மாதம் இந்திய சர்க்காரின் செய்தி, ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர் சென்னைக்கு வந்திருந்த போது, தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையும், தென்னிந்திய ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் சங்கமும் அவருக்கு வரவேற்புகள் அளித்து, சில நல்ல யோசனைகளையும் தெரிவித்தன.

இந்தியப் படங்களின் ஏற்றுமதி, தமாஷா வரி, வெளி நாட்டுப் பட விநியோகஸ்தர்களிட மிருந்து லாபத்தில் பங்கு கோரல் முதலிய பல விஷயங்களுடன், இந்தியாவிலேயே கலர் லேபரடரி அமைக்கும் விஷயமாகவும் கேஸ்கருடன் வர்த்தக சபை ஆலோசனை செய்தது.

இந்தியாவில் கலர் லேபரடரி தேவை யென்றும், அதை இந்திய சர்க்காரே தங்கள் செலவிலும், பொறுப்பிலும் அமைத்துத் தரவேண்டும் என்றும் ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் பிலிம் பெடரேஷன் தின விழாவில் ராஜாஜி முன்னிலையிலேயே கூறியிருக்கிறார். ஸ்ரீ வாஸன் சென்ற மாதம்கூடத் தனது இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

உலக சினிமாத் தொழிலில் முதலிடம் வகிப்பது அமெரிக்கா. அதற்கு உள்ள பொருளாதார விஞ்ஞான வசதிகளில் நூறில் ஒரு பங்குகூட இல்லாத நம் இந்தியா, உலக சினிமாத் தொழிலில் எப்படியோ இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஹாலிவுட் படங்கள் எல்லாமே கலர் படங்களாக வெளி வருகின்றன. இதர மேல் நாட்டுப் படங்களும் கலரில் வெளியிடப் படுகின்றன.

நம் இந்தியப் படங்கள் மட்டும் இனியும் கருப்பு-வெள்ளை என்ற ஒரே ரீதியாக வெளி வந்து கொண்டிருந்தால் நம் சினிமாத் தொழில் உலகத்தின் இரண்டாவது ஸ்தானத்திலிருந்து இறுதி ஸ்தானத்திற்குப் போய்விட அதிக காலம் ஆகாது.

இந்தியாவின் இயற்கை யமைப்பும், கலாச்சாரப் பண்பாடும் வர்ணப் படங்களுக்கு மிகவும் ஏற்ற சூழ்நிலையுடன் கூடியவை என்பதை உலகம் ஒப்புக் கொள்ளுகிறது. ஆனால் கலர் லேபரடரி ஒன்றுகூட இந்தியாவில் இல்லை. எந்தத் தனிப்பட்ட முதலாளியோ, ஸ்தாபனமோ இந்த கலர் லேபரடரியை இந்தியாவில் நிர்மாணிக்கும் நிலையில் இல்லை. ஏராளமான மூல தனமும், அனுபவம் நிறைந்த நிபுணர்களும் தேவைப்படும் இந்த முயற்சியை இந்திய சர்க்கார்தான் ஏற்று நடத்த இயலும்.

இந்திய சினிமாத் தொழிலின் தற்கால நிலையை கவனத்தில் கொண்டு, வாஸன் குறிப்பிட்டது போல, சென்னை, பம்பாய், கல்கத்தா மூன்று நகரங்களிலும் மூன்று கலர் லேபரடரிகளை இந்திய சர்க்கார் நிர்மாணித்துத் தந்து, நிர்வகித்து வந்தால் இந்திய சினிமாத் தொழில் உலகில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

தொழில் முன்னேற்றம், வருவாய், வேலை யின்மையைப் போக்கும் வசதி, வெளி நாட்டு மார்க்கெட்டில் அதிகமான ஆதரவு, தாய் நாட்டிற்கொரு பெருமை இவ்வளவையும் தரும் கலர் லேபரடரியை உடனே நிர்மாணிக்க இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறோம்.

சந்திரஹாரம்—ஒரு திரைக் காவியம்

''ஔவையார்'' திரையிடப் பட்டபோது அதை ஒரு சிறந்த திரை இலக்கியம் என்று குறிப்பிட்டிருந்தோம்.

அந்த வரிசையில் இப்போது விஜயாவின் தெலுங்கு சந்திர ஹாரத்தை ஒரு திரைக் காவியம் என்று பாராட்டுகிறோம்.

எளிய நடையிலே, இனிய கருத்துக்களைப் புகுத்தி, இன்பத் தாய்மொழியில் புனையப்படும் எழுத்துச் சித்திரத்தைத் தான் கவிதை என்கிறோம். இத்தகையனவற்றில் சிறந்தவைகளை காவியம் எனவும், மகாகாவியம் எனவும் போற்றிப் பாராட்டு கிறோம்.

இதே போலத்தான் சந்திரஹாரத்தை ஒரு திரைக் காவியம் என்று குறிப்பிடுகிறோம்.

படத்திலே ஒவ்வொரு அங்குலத்திலும் கவிதை நயம் ததும்புகிறது. காவிய பாணி தளர் நடை போடுகிறது. கவிதா ரஸம் பருகுவது போன்ற ஒரு ஸ்வானுபவ உணர்ச்சி மேலிடு கிறது படம் முழுவதும். விரசமான காட்சிகளோ, வசனங்களோ, பாடல்களோ கிடையாது சந்திரஹாரத்திலே. அலுப்பு சலிப்பில் லாமல், அருவருப்புத் தட்டாமல் விருவிருப்புடன் ஓடுகின்றன கதையின் சம்பவங்களும், காட்சிக் கோர்வைகளும்.

உன்னதமான படப்பிடிப்பு, உயரிய கட்டுக்கோப்பு, உணர்ச்சி நிறைந்த பாடல்கள், உச்சரிப்பு சுத்தமான வசனங் கள் ஆகியவைகளுடன் தெளிவான ஒளி, ஒலிப் பதிவுகளும், பிரம்மாண்டமான கலைமணங்கமழும் காட்சி ஜோடனைகளும் சந்திரஹாரத்தை மிகச் சிறந்த படமாக ஆக்கிவிட்டன.

இப்படத்தின் பிரதான பாகங்களில் தோன்றும் என். டி. ராமராவ், எஸ். வி. ரங்கராவ், ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி முதலி யோர் அற்புதமாக நடித்து, தங்கள் திறமை முழுவதையும் வெளிக்காட்டி யிருக்கிறார்கள். ரேலங்கி, ஜோகா ராவ் கோஷ்டி யினர் ஆபாசமற்ற ஹாஸ்யத்தின் மூலம் படத்தின் தரத்தை உயர்த்தி யிருக்கின்றனர்.

தெலுங்குப் படத்தைப் பற்றிய நமது இந்த அபிப்பிராயம் தமிழ் சந்திரஹாரத்துக்கும் பொருந்தும் என்று நம்புகிறோம்; பொருந்த வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

ஸ்டூடியோ விஜயம்

நமது விசேஷ காமிரா நிபுணர் ஸ்டூடியோக்களைச் சுற்றி வருகிறார்

சென்னையிலே இப்பொழுது பல கலை விழாக்கள் நடைபெற்று வருகின்றன. சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலே காங்கிரஸ் பொருட்காட்சி சாலை அமோகமான முறையில் நடைபெற்று வருகிறது. மற்றொரு புறம் பார்க்பேர் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இவை தவிர பல பிரத்தியேக சபைகளின் சங்கீத, நடன கலை விழாக்களும் சென்னையில் நடைபெற்று வருகின்றன.

இத்தனை மகத்துவங்களுக்கிடையே சென்னையில் உலவிக் கொண்டிருந்த நான் சென்ற மாத இறுதியில் நெப்டியூனுக்குள் நுழைந்தேன்.

''வாருங்க ஸார், அப்படி பம்பாய்க்குப் போய்விட்டு வரலாம்'' என்று நெப்டியூனில் நுழைந்த என் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு அழைத்தார் ஸ்ரீதர். 'ரத்தபாசம்' கதாசிரியர் ஸ்ரீதரைத்தான் குறிப்பிடுகிறேன்.

''எனக்கு பம்பாய்க்கு வரவேண்டும் என்று கொள்ளை ஆசைதான். அதுவும் தாங்களாகவே வலிய வந்து கூப்பிடும் போது டிக்கெட் வாங்காமல் ஓசியிலேயே இந்தப் பிரயாணத்தை முடித்துக் கொள்ளலாம். ஆனால் சென்னையில் நடைபெறும் இத்தனை கலைவிழாக்களையும் விட்டு

'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' படத்திற்கான பாடல் ஒத்திகை பார்க்கப்படுகிறது. பந்துலு, ப. நீலகண்டன், சங்கீத டைரக்டர் லிங்கப்பா ஆகியோர் நின்றுகொண்டு இதைக் கவனிக்கிறார்கள்.





கணேசனும், சகபாடிகளும் தோன்றும் இக்கட்டம் யுனிடிபிக்சர்ஸ் தயாரிப்பில் வருகிறது. ஜிப்பாவுடன் இருப்பவர்தான் டைரக்டர் நாராயணமூர்த்தி. அவருக்கு வலப்புறம் காமிரா ராமசாமியும், ஸவுண்ட் கோவிந்தசாமியும் இருக்கிறார்கள்.

விட்டா? அது சரி, நான் ஸ்டூடியோக்களைச் சுற்ற வேண்டுமே! இல்லாவிட்டால் ரஸிகர்கள் பிய்த்து வாங்கி விடுவார்களே'' என்று நான் வர இயலாமையைக் குறித்து வருத்தப்பட்டேன்.

''ஓய்! எனக்கு மட்டும் என்ன வேலை இல்லையா? வாரும் பம்பாய்க்குப் போவோம் நீர் கண்டிப்பாக வந்துதான் ஆகவேண்டும்'' என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே போய் ரத்தபாசம்' ஸெட்டில் நிறுத்தினார் ஸ்ரீதர்.

''இது என்னய்யா, கண்கட்டு வித்தையாயிருக்கே நாம் பம்பாய் வந்திருக்கும் லட்சணமா இது'' என்று அவரைக் கேட்டேன் ஸ்ரீதர் சிரித்தார், விழுந்து விழுந்து சிரித்தார்

''ரத்தபாசம் கதையிலே இந்த 'ஸெட்' பம்பாயிலே இருக்கிறதாக சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே நாம் இப்போது இருப்பதும் பம்பாய் தானே?'' என்று கேட்டார் ஸ்ரீதர்.

ரகு ஒரு சைக்கிள் வியாபாரி. அவனுக்கு சென்னையில் மட்டுமல்ல, பம்பாயிலும் ஒரு சைக்கிள் கடை இருந்தது. சைக்கிள் கடை என்றால் பஞ்சர் ஒட்டுவது, முதலியன அல்ல. புத்தம் புது சைக்கிள்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைப்பது; அவற்றை மெருகு கெடாமல் விற்றுத் தள்ளுவது—இதுதான் ரகு நடத்திய கம்பெனிகளின் வேலை.

ரகுவின் பம்பாய் கம்பெனியின் மானேஜராக வேலை பார்த்து வருகிறான் மது. அவன் ஒரு வஞ்சகப் புலி. அடுத்தவன் செழுமையுடன் வாழ்வதை அவன் கண் காணப் பொறுக்காது மதுவின் ஆசைக் கிழத்தி மனோரமா. அவள் ஒரு மோசக்காரி மட்டுமல்ல. மமதைக் காரியும் கூட. அவளது மையலில்

விழுந்த மது, மது உண்ட மந்தியைப் போல் மயங்கிக் கிடக்கிருன்.

ரகு தனது சென்னைக் கம்பெனியை விற்கும் விஷயமாகப் பம்பாய் வருகிருன். வந்த இடத்தில் அவனுக்கு பல விசித்திர அனுபவங்கள் ஏற்படுகின்றன. அவனது பர்ஸ் 'பிக் பாக்கெட்' அடிக்கப்படுகிறது. இந்த சாமர்த்தியமான வேலையைச் செய்தவன் ராஜா என்பவன்.

மனோரமாவைக் கொண்டு, ரகுவை மயக்கி, அவனது சொத்துக்களைக் கைப்பற்ற வேண்டும் என்று திட்டமிடுகிருன் மது. மதுவின் இந்த தித்திக்கும் யோசனைக்கு மனோரமாவும் மகிழ்ச்சியுடன் சம்மதிக்கிருள். ரகு மனோரமாவின் வீட்டிலேயே தங்க ஏற்பாடாகிறது

"இந்த மனோராமாவின் பம்பாய் பங்களாவில் தான் நாம் இருக்கிரேரும்!" என்று சொல்லிவிட்டு கடகடவென்று சிரித்தார் ஸ்ரீதர். விஷயம் புரிந்து போனதால் அவருடன் சேர்ந்து கொண்டு நானும் சிரித்தேன.

"இப்பொழுது கதையை மேலும் கேளுங்கள். அப்பொழுது தான் நடக்கப்போகும் சம்பவம் உங்களுக்குப் புரியும்" என்ருர் ஸ்ரீதர். ஆகவே நீங்களும் கவனிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

"ரகுவின் பர்ஸை பிக்பாக்கெட் அடித்த ராஜா ஆவலுடன் பர்ஸைத் திறந்து பார்க்கிருன். பணத்தை பர்ஸில் கண்ட போது ஏற்படும் ஆவலை விட அவனது ஆவல் பன்மடங்கு அதிகமாகிறது. இதற்குக் காரணமாக இருந்தது அந்தப் பர்ஸில் இருந்த விஸிடடிங் கார்டுதான். அந்த கார்டின் மூலம்தான் பிக் பாக்கெட் அடித்தது தன் சோதரனி மே என்பதை அவன் தெரிந்து கொள்கிருன். விஸிட்டிங் கார்டில் இருந்த விலாசத்தின் மூலம் சோதரனின் இருப்பிட தெரிந்து கொண்டு அங்கு வருகிருன் இனி நீங்களே ப ப் பிடிப்

நம்பியார், எஸ். வரலக்ஷ்மி தோன்றும் காட்சி அசோகாவின் படத்தில். முன்னலை உட்கார்ந்திருப்பவர்தான் கே. வி. ஆர். ஆச்சார்யா. பின்னல பி. எஸ். ரங்கா கோவிந்தராஜன், எம். கே. ஆர் நம்பியார் மூவரையும் பார்க்கலாம்.





கலாமண்டலம் மாதவன் 'சொர்க்கவாச'லுக்கான இந்த கோஷ்டி நடனத்தை டைரக்ட் செய்கிருர்.

பைப் பார்க்கப் போகிறீர்கள். என் விளக்கம் எதற்கு?'' என்று சொல்லிய ஸ்ரீதரை நோக்கி 'சரி' என்பதாக தலையை அசைத்தேன்.

ராஜா ஒரு நிஜாருடன், கருப்பு பனியன் ஒன்றை அணிந்து கொண்டு அந்த வீட்டின் நடு நாயகமாக விளங்கிய ஹாலில் நின்றிருந்தான். அவனது கண்கள் அந்த ஹாலேயும, சுற்று வட்டத்திலுள்ள அறைகளேயும் ஊடுருவிப்பார்த்து நோட்டம் போட்டுக் கொண்டிருந்தன. அப்பொழுது அவன் கண்களில் ஒரு பர்ஸ் தென்படுகிறது.

அதே சமயம் ரகு அங்கே வருகிருன். ரகு-ராஜா இருவரிடையேயும் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.

ரகு: உன் பெயர்?

ராஜா: ராஜா (இது அவன் உண்மைப் பெயரல்ல).

ரகு: சொந்த ஊர்?

ராஜா: நான் இருக்குமிடம், சுற்றுமிடம். எல்லாம் என் சொந்த ஊர் தான்.

ரகு கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் தாறுமாருகப் பதில் சொல்லி வருகிருன் ராஜா. அவனது இளமைப் பருவத்தைப் பற்றி ரகு கேட்டபோது ''இறந்த காலத்தைப் பற்றி நான் சிந்திப்பதே இல்லே'' என்று ஒரே போடாகப் போடுகிருன் ராஜா.

ராஜாதான் தன் தம்பி என்பது ரகுவிற்குத் தெரிந்துவிடுகிறது. அவனது நிலைமை இப்பொழுது தர்ம சங்கடமாகி விடுகிறது.

அதற்குக் காரணம் இது. ரகு சென்னேயில் விற்பதாக இருந்த கம்பெனியை வாங்க வந்தவர்கள் அப்பொழுது உள்ளே கம்பெனி விவகாரங்களேயும், பத்திரங்களேயும் பரிசோதித்து வந்தார்கள். கம்பெனி ரகுவின் பெயருக்கு மட்டுமின்றி அவனது சகோதரன் ரவிக்கும்

எழுதி வைக்கப் பட்டிருந்ததைக் கண்ட 'வாங்க வந்த வியாபாரிகள்' சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ள ரகுவை அழைக்கின்றனர்.

ரகுவும் அவர்களிடம் விரைகிறான். அவர்கள் இந்தப் பிரச்னையைக்கிளப்பி விட்டபோது ரகுவின் மூச்சே ஒரு கணம் நின்றுவிடுகிறது. அவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அவன் மனதில் ஒரே சூறாவளி.

வந்த வியாபாரிகள் வற்புறுத்தவே தன் சகோதரன் இறந்துவிட்டான் என்பதாகச் சொல்லி விடுகிறான் ரகு. பத்திரத்திலும் கையெழுத்திட்டு விடுகிறான்.

தான் இறந்து விட்டதாக ரகு அவர்களிடம் சொன்னது ஹாலில் நின்று கொண்டிருந்த ராஜாவின் காதில் விழுந்து விடுகிறது. இந்தப் பச்சைப் பொய்யைப் பொறுக்கும் சக்தி அவனிடம் இல்லை. ஆகவே விரக்தியுடன் வெளியேறி விடுகிறான்.

ராஜா வெளியேறிய சில நிமிஷங்கள் சென்று அங்கு வந்த ரகு, அவன் அங்கு இல்லாததைக் கண்டு திடுக்கிடுகிறான். அதே சமயம் மனோரமா அவனிடம் வந்து, "நான் இங்கு என் மணிபர்ஸை வைத்து விட்டுப் போயிருந்தேனே. பார்த்தீர்களா?" என்று கேட்கிறாள்.

ரகுவிடம் அவள் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மது ராஜாவைப் பிடித்துக் கொண்டு அங்கு வருகிறான். அவன் கையில் மனோரமாவின் பர்ஸ் கனஜோராகக் காட்சியளிக்கிறது.

தன் சகோதரன் திருட்டும் கையுமாக அகப்பட்டு விட்டதைக் கண்ட ரகு தானே அதை அவனிடம் கொடுத்ததாகச் சொல்கிறான்.

பின்னர் ராஜாவைப் பார்த்து "தனது அன்பளிப்பாக இதை வைத்துக் கொள்ளும்படி" கேட்கிறான் ரகு.

"எனது தொழிலுக்கு அன்பளிப்பு தேவையில்லை. நானும் பிச்சைக்காரனல்ல" என்று சொல்லி விட்டு, பர்ஸை வீசி எறிந்து விட்டு வெளியேறி விடுகிறான் ராஜா.

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த ரகு, மனமொடிந்த நிலையில் மாடிப்படி ஏறி தன் அறைக்கு விரைகிறான்.

அன்றைய தினம் இந்த அளவு வரையில் மட்டுமே படப்பிடிப்பு நடைபெற்றது.

ராஜா (ரவி)வாக டி. கே. ஷண்முகமும், பகவதி ரகுவாகவும் இப்படத்தில் தோன்றுகிறார்கள். மது என்ற வில்லன் பாத்திரத்திலே அதன் 'பேடண்ட்' நடிகரான பாலய்யா வருகிறார். மனோரமாவாக வித்யாவதி நடித்து வருகிறார்.

ஜுபிடர்-ஔவை கூட்டுத்தயாரிப்பான ரத்தபாசம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. தமிழில மட்டுமே தயாராகி வரும் இந்தப்படத்தை ஆர். எஸ். மணி டைரக்ட் செய்து வருகிறார்.

அசோகாவின் செட்டில் வரலக்ஷ்மி, நம்பியார், துரைசாமி

'ஒரு நாள்' கூத்துக்காக பண்டரியைக் கட்டிப் போடுகிறுர் உதவி டைரக்டர்

அன்று நெப்டியூனுக்கு நான் சென்ற சமயம் யுனிடியின் புதுப் படமும் சுடப்பட்டுவந்தது

இந்த யூனிடி பிக்சர்ஸ் ஆசாமிகள் வேறுயாருமில்லை நெப்டியூனின் பிரதான டெக்னிஷியன்களான கோவிந்தசாமி (ஸவுண்ட), ராமசாமி (காமிரா), சுந்தரம் ஆகியோரும், ஜி. உமாபதியும் சேர்ந்து இந்த படக் கம்பெனியை நிறுவியிருக்கிறுர்கள். ஸி.யெச். நாராயணமூர்த்தி இவர்களது படத்தை டைரக்ட் செய்கிறுர்.

நான் சென்ற சமயம் சிவாஜி கணேசன் சம்பந்தப்பட்ட ஒரு கல்லூரிக் காட்சி சுடப்பட்டது

கணேசன் தன் சகபாடிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறுன். சுந்தர் என்பது அவரது கதா பாத்திரத்தின் பெயர்.

சுந்தரம் விளையாடுவதற்குப் பதில் நேரமாகி விட்டதே என்று பறக்கிறுன். அவன் நேரமாகி விட்டதே என்று பறப்பதற்குக் காரணமாயிருந்தது அவனது காதலி அவனை அன்று மாலை சந்திக்கும்படி கூறியிருந்தது தான்.

தபால் மூலம் இலவசக் கல்வி போதனை

புதிய வகுப்புகள் ஆரம்பம் 23-1-54

தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்த ஆண், பெண் இருபாலரும் 1. மெட்ரிகுலேஷன், 2 S. S. L. C. 3. தமிழ் வித்வான், 4 E. S. L. C. (8-ம் வகுப்பு), 5 புக்கீப்பிங், 6. கைத்தறி நெசவு. 7 ஹோமியோபதி டாக்டர், 8. ஹிந்தி (54-ஆகஸ்ட்) 9. பேஸிக் ஆங்கிலம் முதலிய 1954-55-ம் வருட சர்க்கார் பரீட்சைகளுக்கு, M. A., B. A., L. T., B. A. வித்வான், டாக்டர் ஆசிரியர்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட பாடங்களைத் தபால் மூலம் கட்டணமின்றி இலவசமாக அனுப்பி பயிற்சி அளிக்கப்படும். மேலும், பரீட்சையின் வெற்றிக்கும், தவருது பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும் என்பதற்கும் உத்திரவாதப் பத்திரம் அளிக்கப்படும் ஆகவே, முழு விபரங்களுக்கு உடன் 2 ஒரு அணு ஸ்டாம்புடன் எழுதி சேர்ந்துக் கொள்ளவும். குறிப்பு :-சொந்த அச்சகத்துடன் (Press) விளங்கும் நமது இன்ஸ்டிடியூட் சென்ற ஈராண்டுகளாக பல்லாயிர மாணவர்கட்கு இலவசக் கல்வி பணியாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷி வந்தியம் P.O, (via) திருக்கோவிலூர், S. A. Dt.

'தோடு தொங்கலு' என்ற தனது படத்தில் என். டி. ராமராவ் இப்படி வருகிறார்.

நான் பார்த்த காட்சியின் விளக்கத்தைத்தான் மேலே கொடுத்திருக்கிறேன். கணேசனின் கல்லூரிக் காதலியாக இந்தப் படத்திலும் பத்மினி வருகிறார். மற்றும் நாகய்யா, சஹஸ்ரநாமம், கே. ராமசாமி, துரைசாமி முதலியோர் இதில் நடிக்கிறார்கள்.

யூனிடி படத்திற்கான இக்கதையை 'ரத்தபாசம்' ஸ்ரீதர் எழுதியிருக்கிறார். அவரும், ஜி. உமாபதியும் இப்படத்திற்கு வசனமெழுதி யிருக்கிறார்கள்.

'படத்திற்கு இன்னும் பெயரிடப்படவில்லை' என்பதாக ஸவுண்ட் கோவிந்தசாமி என்னிடம் தெரிவித்தார்.

* * *

'என்னை கற்கோட்டை செட்டில் பார்க்கலாம்' என்று சொன்ன கெம்பராஜைப் பார்க்க நான் வாஹினிக்குச் சென்ற போது, கோட்டை யொன்றில் பார்ப்பதற்குப் பதில், பாதாளச் சிறை யொன்றில், கைதியின் கோலத்தில் அவரைப் பார்த்தேன்.

''உயிர் அங்கு தனியாக
உடல் இங்கு தனியாக
நடுவே வீசுதே சதி
ஓயாத புயலாக''

என்று மனமுருகி அவர் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்ட போது தான் அவரது துக்ககரமான நிலைமையைப் பற்றியும் ஓரளவு அறிய முடிந்தது.

'கற்கோட்டைக்காகத்தான் இதெல்லாம்' என்று கெம்பராஜ் சொன்னதும்தான் எனக்கும் சற்று நிம்மதி ஏற்பட்டது.

கற்கோட்டை முடிவடைய இன்னும் ஒரே காட்சிதான் பாக்கியாம். படம் விரைவிலேயே வெளிவந்து விடும் என்பதற்கு இதுவே போதாதா?

கற்கோட்டையை கெம்பராஜ் கன்னடத்திலும் தயாரித்து வருகிறார். இந்த இரண்டு படங்களிலும் அவர் நடிப்பதோடு, டைரக்ட் செய்தும் வருகிறார்.

சாரங்கபாணி, பந்துலு, கிருஷ்ண குமாரி, வேதா முதலியோர் நடிக்கும் 'கற்கோட்டை' வாஹினியில் தயாராகி வருகிறது.

*   *   *

ரேவதியில் எஸ். வரலக்ஷ்மியை நான் சந்தித்தேன். "எங்கே இப்படி வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"அசோகா ஷூட்டிங் இருக்கிறது!" என்றார் அவர்.

"பலே பேஷ்! எனக்கும், என் காமிராவுக்கும் அப்பொழுது இங்கு கொஞ்சம் வேலையிருக்கிறது என்று சொல்லுங்கள்" என்று சொல்லி விட்டு ஸெட்டினுள் நுழைந்தேன்.

ஸெட்டிலே நம்பியார், துரைசாமி இருவரும் இருந்தார்கள். டைரக்டர்கள் கே. வி. ஆர். ஆச்சார்யா, எம். கே. ஆர். நம்பியார், காமிரா ரங்கா ஆகியோர் காமிரா கோணத்தை அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

பாலு ஒரு மிராசுதார் மகன். அவனது தங்கை வஸந்தா. விமலா என்ற ஒரு பெண்ணை பாலு நேசிக்கிறான்.

ஒரு நாள் மாலை பாலு தன் வீட்டில் அலங்காரமாக உட்கார்ந்து கொண்டு விமலாவுக்காகக் காத்திருக்கிறான். விமலாவுடன் சினிமாவுக்குப் போக அவன் திட்டமிட்டிருந்தான்:



கற்கோட்டையில் அடைபட்டிருக்கும் கைதிக்கு (கெம்பராஜ்) காப்பி கிடைப்பதானால் நாமும் அதில் அடைபடத் தயார்தான்!

வினாடி நிமிஷமாக மறைந்து, நிமிஷம் மணியாக மாறி நாள் கரைந்து கொண்டு வந்தது. ஆனால் விமலாவோ இன்னும் வந்தபாடில்லை. அந்தச் சமயமாக வாயில் கதவு தட்டப்படுகிறது.

"விமலாதான் வந்து விட்டாளோ?' என்ற ஆர்வத்தினால் பாலு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, தன் உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு எழுந்து நிற்கிறான்.

வஸந்தா ஓடிப் போய் கதவைத் திறக்கிறாள். ஆனால் அங்கே பாலு ஆவலுடன் எதிர்பார்த்த விமலா வரவில்லை. அதற்குப் பதில் தர்மலிங்கம் பிள்ளை என்ற அவளது தகப்பனார்தான் நின்றிருந்தார்.

வஸந்தாவுக்கு ஒரே சிரிப்பு பொத்துக் கொண்டு வருகிறது. பாலுவுக்கோ மூச்சே நின்றுவிடும் போலாகி விடுகிறது. அவனுக்கு உலகமே தலைகீழாகச் சுழன்றது. அந்தச்



ஏவி. எம். ஸ்டூடியோ வில் நிர்வாகி ஜி. ஆர். 'பிஸி'யாக இருந்தார்.

சுழற்சியிலேயே ஒரு சுற்று சுற்றி, அருகி லிருந்த நாற்காலியில் 'தொப்'பென்று விழு கிறான் பாலு.

பாலுவிடம் விரைந்த வஸந்தா "என்ன அண்ணே? ஏன் உட் கார்ந்துட்டே?" என்று கிண்டலாகக் கேட்ட வாறு, அவன் தோள் களைப் பிடித்துஉலுப்பிக் கொண்டிருந்தாள்.

அதே சமயம் தர்ம லிங்கம் பிள்ளையும் கைஜாடை காட்டி அவளை அழைக்கவே வாசற்பக்கம் செல்ல ஆரம்பித்தாள் வஸந்தா.

'மனோஹரா' ஸெட் டில் டைரக்டர் பிர ஸாத், ராஜகுமாரி, எஸ். ஏ. நடராஜன்.

கீழே கிடந்த தொப்பி யைத் தூக்கி பாலுவின் மடியில் வீசிஎறிகிறாள். ஏமாற்றம் கோபமாக மாறி உட்கார்ந்திருந்த பாலு தொப்பியை அவள் மீதே விட்டெறி கிறான்.

பின்னர் விஷயம் ஒரு சமாதான சூழ்நிலைக்கு வந்ததும் வஸந்தா பாலு விடம் மெள்ள பேச்சு வார்த்தைகளை ஆரம் பிக்கிறாள்.



சிவாஜி கணேசனோடு கை குலுக்குபவர் திராவிடநாடு அரங் கண்ணல். இடுப் பிலே கை வைத்திருப் பவர்தான் மனோஹரா நிர்வாகியான 'மாப் பிள்ளை'.



கேரள சகோதரிகளில் சிறியவரான லீலாவுக்கு 'சொர்க்கவாசல்' நடனத்திற்காக மேக்-அப் நடக்கிறது.

"என்ன அண்ணே!"

"இன்னிக்கு யார் முகத்திலே விழிச் சேனே?"

"யார் முகத்திலும் இல்லே. உன் முகத்திலேயே தான் விழிச்சிருக்கே. நீதான் தினமும் எழுந்ததும் கண்ணாடியிலே பார்த்துக்கற வழக்கமாச்சே!

"................"

"ஆமாம்! எங்கே இப்படி?"

"இதை யெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தா நான் சினிமாவுக்குப் போன மாதிரிதான்...!"

"ஓ! அப்படிச் சொல்லு!" என்று சொன்ன வசந்தாவை முறைத்துப் பார்க்கிறான் பாலு. இந்தச் சம்பவம் தான் நான் சென்ற சமயம் படமாக்கப்பட்டது.

வரலக்ஷ்மியும்-எம். என். நம்பியாரும் இதில் பாலு-வசந்தா பாத்திரங்களை ஏற்று நடித்து வருகிறார்கள். துரைசாமி தர்மலிங்கம் பிள்ளையாக வருகிறார். ரஞ்சன் இந்தப் படத்தின் பிரதான பாகத்தில் நடிக்கிறார்.

அசோகாவின் இந்தப் படம் தமிழில் மட்டுமே தயாராகி வருகிறது.

ஏவி. எம்மிலே நுழைந்து. ஒரு செட்டில் காலடி வைத்த நான் ஒரு கணம் திடுக்கிட்டு ஸ்தம்பித்து நின்று விட்டேன்.

அங்கே பண்டரிபாய் . ஒரு சேர்பாவில் கட்டுண்டு கிடந்தார். அவரது முகம் பீதியால், ஓரே பயங்கரமாகக் காட்சியளித்தது.

ஆகாயத்திலே போர் விமானங்கள் போவது போன்ற பயங்கர சப்தமும், அதைத் தொடர்ந்து குண்டுகள் வெடிக்கும் ஒலிகளும் வருகின்றன,

"இந்த அக்ரமங்கள் உங்களைச் சும்மா விடாது...சட்டத்திற்கும் சமூகத்திற்கும் நீங்கள் தப்பி விடலாம். ஆனால் ஆண்டவன் பார்வையிலிருந்து நீங்கள் தப்பவே முடியாது" என்று இரைந்து கூறிக் கொண்டிருந்தார் பண்டரிபாய்.

இந்தக் கூத்தெல்லாம் எதற்கோ? என்று நான் நினைத்தபோது "வெரி குட்! ஓகே" என்று எஸ். பாலசந்தர் கூறினபோதுதான் இதெல்லாம் "ஒரு நாள்" படத்திற்கான கூத்து போலும்! என்று நினைத்துக் கொண்டே வெளியே வந்தேன்.

* * *

ஏவி. எம்.மிலே இன்னொரு புறம் 'பெண்' தமிழ். தெலுங்கு. படத்திற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மற்றொரு புறம் 'செல்லப் பிள்ளை'க்கான வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

'பெண்' தமிழ்ப் படம் வளரும் நிதானத்திலிருந்து அது வருகிற தமிழ் புது வருஷதினத்தன்று வெளியாகும் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

நின் கண்ணொளி கண்டால் மின்னலும் நாணுதோ ?
தண் மதிமுகம்கண்டால் செந்தாமரை கோணுதோ ?

''ஜாதக''த்தில் சூர்யகலா.

மூவர்ணப் படங்களில் அடுத்த இரு பக்கங்களில்
காக்ஷியளிப்பவர்கள் காந்தா - சாவித்திரி
'சந்திரஹார'த்தில்.



துடியிடை மின்னற்கொடி யருகிருக்க
'துளிவிஷம்' பருகினும் தேனமுதாகும்.

கிருஷ்ணகுமாரி — கே. ஆர். ராமசாமி

செய்திச் சுருள்

சந்திரஹாரம்

பொங்கல் பரிசாக விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான சந்திரஹாரம் வெளிவர விருக்கிறது. பல லட்சம் பொருட் செலவில், பல நக்ஷத்திர நடிகர்களைக் கொண்டு, பல வருஷ முயற்சியின் பேரில் உருவாகியிருக்கிறது இப்படம். தயாரிப்பாளர்கள் நாகிரெட்டியும், சக்ரபாணியும் சந்திரஹாரத்தை ஒரு சிறந்த படமாக உருவாக்கியிருக்கிறார்கள். பாமர பண்டித ரஞ்சகமாக சந்திரஹாரம் இருக்குமாம். என். டி. ராமராவ், ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி, ரங்கராவ், ரேலங்கி முதலியோர் நடிக்கும் இந்தப் படத்தை காமேஸ்வரராவ் டைரக்ட் செய்திருக்கிறார். பிரமிக்கத்தக்க, மயிர்க்கூச்செறியும் பல சம்பவங்கள் கொண்ட இப்படக் கதையை சிறந்த முறையில் கையாண்டிருக்கிறார் காமேஸ்வரராவ். புத்தாண்டில் பொங்கல் புனித தினத்தன்று வெளிவரும் இப்படத்தில் கண்கவர் காட்சி ஜோடனையும், காதுக்கினிமையான கீதமும், நேத்திரானந்தமான நடனங்களும் பிரத்தியேக அம்சங்களாக இருக்கும். சந்திரஹாரம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் தயாராகி யிருக்கிறது. புது வருஷத்தில் வெளிவர விருக்கும் பிரம்மாண்டமான தயாரிப்பில் சந்திர ஹாரம் தலை சிறந்து விளங்கும் என்று கூறலாம்.

விடுதலை

டைரக்டர் ராம்நாத்தின் கண்காணிப்பில் உருவாகி யிருக்கும் நியூ எரா புரொடக்ஷன்ஸ் 'விடுதலை' பிப்ரவரி மாதம் ஸ்டுடியோ வாழ்க்கையினின்றும் விடுதலை பெற்றுவிடும் என்று தெரிகிறது. நாகய்யா தன் திரைப்பட அனுபவத்தில் இதுவரை ஏற்று நடிக்காத ஒரு புதுமாதிரியான வேஷத்தில் விடுதலையில் வருகிறார். வெளிக்கு வேஷம் போட்டு, உள்ளமெல்லாம் விஷச் சிந்தனையிலேயே உழலும் ஒரு வக்கீலாக வருகிறார் அவர். மனோஹர், மோஹன், நந்தாராம், பீர்முகமது, கிருஷ்ணகுமாரி, குமுதினி, விமலா முதலியோர் நாகய்யாவுடன் இப்படத்தில் தோன்றுகிறார்கள். வேலவன் கதை வசன மெழுதியிருக்கும் இப்படம் பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் தமிழ், ஹிந்தி பாஷைகளில் தயாராகி வருகிறது. நியூ எராவின் அடுத்த படத்திற்கான கதை வசனத்தை 'மனிதன்' சோமசுந்தரம் எழுதி வருகிறார். இந்தப்படம் சேகரின் டைரக்ஷனில் உருவாகும் என்று தெரிகிறது.

லக்ஷ்மி

ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் ஜெமினியில் தயாரித்திருக்கும் லக்ஷ்மி சென்ற மாதம் 19-ம் தேதியன்று தமிழ் நாடெங்கும் திரையிடப்பட்டு விட்டது. வாழ்க்கையில சர்வ சகஜமாக ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைச் சித்தரிக்கிறது லக்ஷ்மி. படத்தில் லக்ஷ்மி என்னும் ஆதர்ச ஸ்திரீயாக கண்ணாம்பா வருகிறார். வனஜா, மனோஹர் இருவரும் முதல் தடவையாக இப்படத்தில் காதல் ஜோடியாக நடித்திருக்கிறார்கள். எல. நாராயணராவ், சந்திரபாபு, ஸி.வீ.வி. பந்துலு, எம். சரோஜா, ஸி. கே. சரஸ்வதி முதலானோரும் 'லக்ஷ்மி'யில

செடிகள் மலரைப் புஷ்பித்தால், மலர்கள் இந்த மங்கையைப் புஷ்பித்தனவோ? - ''கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி''யில் பப்பி.

தங்கள் திறமைகளை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.' எஸ். டி. எஸ். யோகியின் வசனங்கள் படத்தின் தனிச் சிறப்பாக விளங்குகின்றன.

இல்லற ஜோதி

இப்பொழுது ஸ்ரீரஞ்சனி 'ஸீஸன்' ஆரம்பமாகி விட்டது. சந்திரஹாரத்தைத் தொடர்ந்து வெளிவரவிருக்கும் ஜெமினியின் படத்தில் அடுத்தபடியாக நாம் அவரைச் சந்திக்கப் போகிறோம். தமிழ்ப் புது வருஷ தினத்தன்று மாடர்ன் தியேட்டர்ஸ் வெள்ளித்திரைக்கு அனுப்பவிருக்கும் இல்லற ஜோதியிலும் அவரை நாம் பார்க்கப் போகிறோம். இல்லற ஜோதி டி. ஆர். சுந்தரத்தின் டைரக்ஷனில் உருவாகி வருகிறது. ஸ்ரீரஞ்சனி சிவாஜி கணேசன், பத்மினி, தங்கவேலு ஆகியோர் இப்படத்தின் பிரதான நடிகர்கள். பெயருக்கேற்ப, 'இல்லற ஜோதி' நம் பெண்களின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். பத்மினி சம்பந்தப்பட்ட காட்சிகள் தற்போது சுடப்பட்டு வருகின்றன.

பொன் வயல்

''ஜனவரி மாதம் இறுதிக்குள் பொன் வயல் வெளி வந்து விடும்'' என்பதாக வாஹினியின் பரந்த புல்வெளியில் உட்கார்ந்தவாறு என்னிடம் பதில் தெரிவித்தார் டைரக்டர் ஏ. டி. கே. தமிழ் நாட்டின தலை சிறந்த கதாசிரியர் எனக் கருதப்படும் 'கல்கி'யின் 'பொய்மான் கரடு' கதை தான் பொன் வயலாக வந்திருக்கிறது. கிராமத்துக் காதலர்களாக வரும் அஞ்சலிதேவி - டி. ஆர். ராமச்சந்திரன் இருவரும் இப்படத்தில் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்களாம். சாரங்கபாணியின் பிரத்தியேக ஹாஸ்யமும், மைனாவதியின் மயக்கு நடிப்பும், பொன் வயலை ரஸிகர்களின் நினைவிலிருந்து எளிதில் அகற்றுதாம். வாஹினியில் உருவாகியிருக்கும் பொன் வயல் ஜெயந்தி புரொடக்ஷன்ஸாரின் முதல் தயாரிப்பு. 'பங்காரு பூமி' என்ற பெயரில் இதே படம் தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ், ஆந்திர ரஸிகர்களிடையே பொன் வயல் மகத்தான ஆதரவைப் பெறும் என்பதில் சந்தேகமேயில்லை. ஏனெனில் ரஸிக ரஞ்சகமான சம்பவங்கள்; ஹாஸ்யம் மிளிரும் வசனம் எல்லாம் இந்த வயலிலே அமோகமாக இருக்கின்றன!

நம் குழந்தை

நரசுவில், கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் டைரக்ஷனில் தயாராவதாக இருந்த 'நம் குழந்தை' படம்

தற்போது வாஹினியில் மழலை மொழி பேச ஆரம்பித்திருக்கிறது. வீனஸார்–ஓம் கூட்டுத் தயாரிப்பான இப்படத்தில் எஸ். வரலக்ஷ்மி, மனோஹர் இருவரும் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்கள். சென்ற மாத மத்தியில் இதன் படப்பிடிப்பு ஆரம்பமாகியது.

கூண்டுக் கிளி

சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், பி. எஸ். சரோஜா, கே. சாரங்கபாணி ஆகியோரைப் பிரதம நடிகர்களாகக் கொண்ட ஆர். ஆர். பிக்சர்ஸாரின் படம் ரேவதியில் தயாராகி வருகிறது. 'கூண்டுக் கிளி' என்பதாக இப்படத்திற்குப் பெயர் தரப்பட்டிருக்கிறது. ராமண்ணா டைரக்ட் செய்யும் இப்படம் ஒரு சமூக சித்திரமாகும்.

அசோகா பிக்சர்ஸ்

சென்றமாத மத்தியிலிருந்து அசோகா பிக்சர்ஸாரின் படப்பிடிப்பும் ரேவதியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இப்படத்திற்கு இன்னும் பெயரிடப்படவில்லை. வடநாடு சென்ற ரஞ்சனை, தமிழ்ப் படங்களிலே மீண்டும் இழுத்துப் போட்ட பெருமை அசோகாவினுடையது தான். இந்தப் படத்தில் அவர், எஸ். வரலக்ஷ்மி, நம்பியார், விமலா, துரைசாமி முதலியோருடன் நடிக்கிறார். கே. வி. ஆர். ஆச்சார்யா, எம். கே. ஆர். நம்பியார் இருவரும் கூட்டாக அமர்ந்து இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறார்கள்.

கள்வனின் காதலி

'கல்கி'யின் தலைசிறந்த நவீனங்களில் ஒன்றாகக் கருதப்படும் 'கள்வனின் காதலி'யை ரேவதி புரொடக்ஷன்ஸார் அடுத்தபடியாக படமாக்கப் போகிறார்கள். 'ரேவதி' வி. எஸ். ராகவன் இந்தப் படத்தை டைரக்ட் செய்யப் போகிறார். எஸ். டி. சுந்தரம் இப்படத்திற்கான வசனங்களை எழுதியிருக்கிறார். சிவாஜி கணேசன், சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர் இப்படத்தில் நடிப்பார்களென்று தெரிகிறது. 'கள்வனின் காதலி' இலக்கிய அளவில் மட்டுமின்றி, நாடக மேடைமீதும் மிகப் பிரசித்தி பெற்றதாகும்.

வருத்தம் தோய்ந்த முகத்துடனிருக்கும் விமலாவைத் தேற்ற ஒரு தோழி இருந்தால் பாதகமில்லை. ஆனால் 'தோழ'னுக்காக அல்லவா அவர் இப்படித் தோன்றுகிறார்?



'ஏட்டிக்குப் போட்டி' என்பது உடையில் மட்டுமல்ல; பார்வையிலும் கூடத்தான்! 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி'யில் கணேசன், ராமச்சந்திரன்.

யுனிடி பிக்சர்ஸ்

நெப்டியூன் ஸ்டுடியோவின் பிரதான டெக்னிஷியன்களில் சிலர், மற்றும் சிலருடனும் சேர்ந்து 'யுனிடி பிக்சர்ஸ்' என்ற படத்தயாரிப்புக் கம்பெனியை ஸ்தாபித்திருக்கின்றனர். இவர்களது முதல் படத்தில் சிவாஜி கணேசன், பத்மினி முதலியோர் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள். படப்பிடிப்பு வி. எச். நாராயணமூர்த்தியின் டைரக்ஷனில் சென்ற மாத மத்தியிலிருந்து நடைபெற்று வருகிறது.

வேண்டாத செல்வம்

ஒய். ஆர். ஸ்வாமியின் டைரக்ஷனில் 'புரொடக்ஷன்–9' என்ற தற்காலிகப் பெயரில் தயாராகி வந்த ரோஹிணியின் படத்திற்கு 'வேண்டாத செல்வம்' என்பதாக பெயர் தரப்பட்டிருக்கிறது. 'லகாசி கோஷ்டா' என்ற மராட்டி ஹாஸ்ய நவீனமொன்றைத் தழுவி தமிழ், தெலுங்கு இருபாஷைகளிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது இப்படம். சௌகார் ஜானகி, ஜமுனா, என். டி. ராமராவ் முதலிய நக்ஷத்திரங்கள் வேண்டாத செல்வத்தில் ஜ்வலிக்கின்றன. படம் அவர்களது சொந்த ஸ்டுடியோவான ரோஹிணியில் தயாராகி வருகிறது.

ஸ்ரீ சுகுமார் புரொடக்ஷன்ஸ்

சென்ற மாதத்திலே ரேவதியில் மற்றொரு புது படத்தின் படப்பிடிப்பும் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நடிகர் டி. ஆர். மகாலிங்கத்தின் சொந்தப்படம்தான் அது. "இதுவரை பத்து பாட்டுகள் பதிவாக்கப்பட்டு விட்டன. சுமார் ஏழாயிரம் அடிகள் படத்தைச் சுட்டு முடித்திருக்கிறேன்" என்று மகாலிங்கம் தெரிவித்தபோது 'நல்ல முன்னேற்றம் தான்' என்று நினைத்துக் கொண்டேன். இப்படத்தில் குமாரி கமலா முதன் முதலாக கதாநாயகியாக, மகாலிங்கத்துடன் நடிக்கிறார். டி. கே. ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு, சௌகார் ஜானகி, கே. சாரங்கபாணி மற்றும் பலரும் நடிக்கிறார்கள். ரகுநாத் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

மறுமலர்ச்சி

அண்ணி, பெற்றதாய் போன்ற புரட்சிகரமான படங்களை வெளியிட்ட பிரகாஷ்ராவ் ஆனந்தா புரொடக்ஷன்ஸாருக்காக, தமது சொந்த ஸ்டுடியோவிலேயே ஒரு படத்தை டைரக்ட் செய்து வருகிறார் என்பதை அறிந்தபோது 'நிச்சயம் இந்தப் படத்திலும் ஏதேனும் புதுக் கருத்துகள் இருக்கும்' என்று எதிர்பார்த்த ரஸிகர்களுக்கு, 'மறுமலர்ச்சி' என்ற படத்தின் பெயரே சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. சமூக

எழுச்சியைப் பிரதிபலிக்கும் ஒரு முற்போக்குப் படமாக இது இருக்குமாம். ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம் இருவரும் இதில் பிரதம பாகங்களை ஏற்று நடிக்கிறார்கள். படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.

புரொடக்ஷன்–4

சியாமளா ஸ்டூடியோவைப் பற்றிய செய்திகளே சிறிதுகாலம் காணப்படாதது கண்டு சினிமா ரஸிகர்கள் வருத்தப்பட்டிருக்கலாம். ஆனால் இத்தனை காலமும் அவர்கள் சும்மாயிருக்க வில்லை என்பது, சமீபத்தில் அவர்கள் தங்கள் புதுப்படமொன்றை ஆரம்பித்த போதுதான் தெரிய வந்தது. ஒரு கல்லூரி மாணவன் எழுதியிருக்கும் கதையை அவர்கள் படமாக்கி வருகிறார்கள். கண்ணப்பன், செருகளத்தூர் சாமா, சரஸ்வதி ஆகியோர் இதுவரை இப்படத்திற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார்கள். டி. ஆர். கோபு இந்த 'புரொடக்ஷன்-4' ஐ டைரக்ட் செய்து வருகிறார். சியாமளாவின் அடுத்த வெளியீடு நிச்சயம் இதுதானாம்!

நீலா புரொடக்ஷன்ஸ்

பிரிய சகியை வெளியிட்ட நீலா புரொடக்ஷன்ஸார் பொன் கதிர் என்ற மலையாள படத்தைத் தயாரித்து, சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் அடுத்தபடியாக இரண்டு படங்களைத் தயாரிக்க திட்டமிட்டிருக்கின்றனர். இவற்றில் 'புரொடக்ஷன்-4' என்பது தமிழ், மலையாளம் இரு பாஷைகளிலும் தயாராகுமாம். மெர்ரிலாண்ட் ஸ்டூடியோவில தயாராக விருக்கும் இப்படத்தை ஸ்டூடியோ உரிமையாளரான பி. சுப்ரமணயமே டைரக்ட் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திக்குரிசி, பிரேம் நஸீர், எஸ். பி. பிள்ளை, பத்மினி முதலிய பிரபல நக்ஷத்திரங்கள் இதில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டியிருக்கிறார்கள்.

எவரெஸ்ட் வெற்றி

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலைச் சிகரத்தை அடைந்த கர்னல் ஹண்ட் கோஷ்டியாருடன் டாம் ஸ்டோபாட் என்ற காமிரா நிபுணரும் சென்று, எவரெஸ்ட் காட்சிகளைப் படம் பிடித்து வந்துள்ளார். இப்படம் பம்பாயிலுள்ள சர்க்கார் செய்திப்பட இலாக்காவின் ஸ்டூடியோவில் தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளில் 'டப்' செய்யப்பட்டு வருகிறது. இந்தப் படம் வெகுவிரைவிலேயே இந்தியா வெங்கும் திரையிடப் படவிருக்கிறது.

கொரியாவிலிருக்கும் நமது துருப்புகளுக்கான தனி ரேடியோ ஸ்டேஷனில பல கச்சேரிகள் நடக்கின்றன.

தணிக்கை அதிகாரிக்கு வரவேற்பு

சென்னை பிராந்தியத்தின் புதிய தணிக்கை அதிகாரியாகப் பதவி ஏற்றிருக்கும் ஜி. டி. சாஸ்திரிக்கு, பிலிம் விசிறிகள் சங்கத்தினர் ஒரு விருந்தளித்தனர். சென்னை சேவா சமாஜ தளத்தில் இந்த வரவேற்பு நடை பெற்றது. ''சாஸ்திரியின் திறமைகளை எடுத்துக் கூறி, சங்கம் அவருக்கு தன்னாலான உதவியை அளிக்க எப்பொழுதும் தயாராக இருக்கும்'' என்பதாக சங்கத் தலைவர் கூறினார். சாஸ்திரியின் நன்றியறிவிப்புக்குப் பின் சங்கக் காரியதரிசி வந்தனோபசாரம் தெரிவித்துக் கொண்டார்.

பாகிஸ்தானில் சுமுக நிலை

பாகிஸ்தான் சர்க்கார் இந்தியப் படங்கள் திரையிடப்படுவதை தடை செய்திருப்பதையொட்டி, ஏற்கனவே பாகிஸ்தான் கிடங்குகளில் உள்ள படங்களை அனுமதிக்காமல் இருந்தது. தற்போது அங்கு சுமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் இந்திய சலனப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவரும் மற்றவர்களும் அங்கு சென்று நிலைமையை நேரடியாக அறிந்து வந்திருக்கின்றனர். இப்பொழுது பாக் சர்க்கார், கிடங்குகளிலிருந்து 57–இந்தியப் படங்களை பாகிஸ்தானில் காட்ட அனுமதித்திருக்கிறது.

திறந்தவெளி தியேட்டர்

சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில நடைபெற்றுவரும் பொருட்காட்சி சாலையில் ஒரு திறந்த வெளி தியேட்டர் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. சென்ற மாதம் 23-ம் தேதி, சென்னை அமைச்சர் பக்தவத்ஸலம் இதைத் திறந்து வைத்தார். 'தியேட்டர் நிர்வாகஸ்தர்களைப் பாராட்டி, 'இம்மாதிரியான திறந்தவெளித் தியேட்டர்கள் கிராமாந்திரப் பகுதிகளில் நிறையத் தோன்றவேண்டும்' என்று கூறினார் மந்திரி.

நிர்வாகஸ்தர்கள் சார்பில் பேசிய என். கிருஷ்ணசாமி, திறந்தவெளி தியேட்டரின் நன்மைகளையும், நம் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு அவை ஏற்றதாக இருப்பதையும் எடுத்துக் காட்டினார். ''இதனால் பெரும்பாலும் சினிமா பரவுவதற்கு வழி ஏற்படு''மென்று அவர் கூறினார். யூகிவாரிஸ" என்ற ஜப்பானியப்படம் அன்றைய தினம் திரையிடப்பட்டது.

கற்கோட்டை

கெம்பராஜ் தயாரித்து, நடித்து வரும் 'கற்கோட்டை' படப்பிடிப்பு முடிவடைந்து வருகிறது. வெகு விரைவிலேயே இப்படத்தை ரஸிகர்கள் திரையிலே காணலாம் என்று நினைக்கிறேன். கிருஷ்ணகுமாரி, வேதா, சாரங்கபாணி, பி. ஆர். பந்துலு முதலியோர் நடித்து வரும் இப்படக் கதை, பிரபல ஆங்கில நாவலாசிரியர் அலெக்ஸாண்டர் டூமாஸின் 'கவுண்ட் ஆப் மாண்டி கிரிஸ்டோ'' என்ற நாவலைத் தழுவியது.

கேஸ்கருக்கு வரவேற்பு

சென்னைக்கு வந்த மத்திய சர்க்கார் செய்தி, ஒலிபரப்பு மந்திரியான டாக்டர் கேஸ்கருக்கு சென்ற மாதம் 21–ம் தேதியன்று ஸ்டூடியோ முதலாளிகள் சங்கம் ஜெமினி ஸ்டூடியோவில் ஒரு வரவேற்பு அளித்தது. ஏவி. எம்.மின் ஹிந்திப் படமான லட்சுமியிலிருந்தும், ஒளவையார், மற்றும் தயாரிப்பிலிருக்கும் ஜெமினியின் படத்திலிருந்தும் சில பகுதிகள் மந்திரிக்கு திரையிட்டுக் காண்பிக்கப்பட்டன.

இந்தியப் படத்தொழிலின் கலை நுணுக்க முன்னேற்றத்திற்கும், தரத்திற்கும், திரையிட்டுக் காட்டப்பட்ட பகுதிகள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்றும், படவுலகம் சர்க்காரைப் பெருமளவில் எதிர்பார்த்து வருவதாகவும் சங்கம் சார்பில், அதன் தலைவர் எஸ். எஸ். வாஸன் எடுத்துரைத்தார்.

மந்திரி பதிலளிக்கையில் தொழில் முன்னேற்றத்திற்கு சர்க்கார் தன்னாலியன்ற உதவிகளைச் செய்யுமென்றும், பரஸ்பரம் தொழிலதிபர்கள்–அரசாங்கம் இருவரிடையும் ஒத்துழைப்பு அவசியமென்றும், இதனால் சமூக வளர்ச்சிக்கு இத்தொழில் உதவ முடியுமென்றும் கூறினார்.

தென் இந்திய நடிகர் சங்கம்

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் முதலாவது ஆண்டு பேரவைக் கூட்டம் சென்ற மாதம் 20-ம் தேதியன்று நடைபெற்றது. 1953-54 வருஷத்தின் நிர்வாகிகள் தேர்தலும் அன்றைய தினம் நடைபெற்றது.

டி. வி. சுந்தரம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பாலய்யா, டி. பாலசுப்ரமண்யம், ஜி. கோவிந்தராஜுலு நாயுடு, எஸ். ஆர். ஜானகி ஆகியோர் உபதலைவர்களாக அமர்ந்திருக்கின்றனர். இவர்கள் தவிர மனோஹர் பொருளாளராகவும், சிவதாணு, எம். ஜீ. ராமச்சந்திரன் இருவரும் பொதுச் செயலாளர்களாகவும் புது வருஷத்தில் சங்கத்தில் தொண்டாற்றுவார்கள். சங்க நடவடிக்கைகளைக் கவனித்துச் செயலாற்ற 21-பேர்கள் கொண்ட 'செயற்குழு' ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

சங்கத்தின் வளர்ச்சி, சங்கம் எதிர்காலத்தில் சக நடிகர்களுக்காகச் செய்ய வேண்டிய தொண்டுகள், மற்றும் பலவற்றையும் தனித்தனியே அன்று பல நடிகர்கள் எடுத்துரைத்தனர்.

விழா முடிவில் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் எம். ஜி. ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

தலைநகரில் கலைவிழா

சென்ற மாத முதல் வாரத்தில் தலைநகரில் ஒரு கலை விழா ஆரம்பமாகி, சுமார் ஒருவார காலம்வரை நடைபெற்றது. இந்தக் கலைவிழாவின் மகத்தான வெற்றியைக் கண்டு நம்மில் யாவரும் பெருமைப் படலாம். ஏனெனில் இந்தக் கலை விழாவில் கலந்து கொண்டவர்கள் அத்தனை பேரும் தென்னிந்தியர்கள்; அதுவும் தென்னிந்தியப் பள்ளிக்கூட மொன்றின் நிதிக்காக நடத்தப்பட்டது.

சென்னை நாடகக் கழகம், சரஸ்வதிகான நிலையம், நடன அகடமி, லலிதா பத்மினி, ராகினி சகோதரிகள் நடனம் கோபிநாத், என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியினர், டி. கே. எஸ். சகோதரர்கள் ஆக சுமார் 60 கலைஞர்கள் இந்தக் கலை விழாவில் பங்கெடுத்துக் கொண்டனர். டில்லி வேவல் தியேட்டரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளுக்கு சீன கலாசார கோஷ்டியின் தலைவரான டிங்-ஸி-லீங், பார்லிமெண்ட் உதவி சபாநாயகர் அனந்தசயனம் அய்யங்கார் மற்றும் பல உயர்தர அரசியல் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

1953 வெளியீடுகள்

'1953-வருஷத்திய வெளியீடுகள்' என்ற தலைப்பில் சென்ற வருஷம் வெளியான படங்களின் ஜாபிதாவை வேறொரு பக்கத்தில் கொடுத்திருக்கிறோம். இவற்றில் அவ்வருஷம் தணிக்கை செய்யப்பட்ட படங்களின் பூரா ஜாபிதாவும் கொடுக்க இயலவில்லை. ஆகவே அப்பகுதியில் விட்டுப்போன சென்ற வருஷம் தணிக்கை செய்யப்பட்ட படங்களைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

வேலைக்காரன், லோகநீதி, பொன்கதிர் மூன்றும் சென்ற வருஷம் வெளிவந்த மலையாளப் படங்கள். பிரேமலேகலு (அவன்—தெலுங்குப் பதிப்பு) ஜகன்மோகினி, புட்டில்லு, அபேக்ஷா, பக்க இண்டி அம்மாயி ஆகிய தெலுங்குப் படங்கள் அப்பகுதியில் விடுபட்டுப் போனவை. இவை தவிர, யாத்ரிக் என்ற வங்கப் படமும், ஜெமினி ஔவையாரும் தெலுங்கு விளக்கவுரைகளுடன் சென்ற வருஷம் வெளிவந்திருக்கின்றன.

வெளியீடுகள் ஜாபிதாவில குறிப்பிட்டிருக்கும் (ஜாதகம்) ஜாதகபலன், மங்கள கௌரி ஆகிய இரண்டு படங்களைத் தவிர மற்றும் ஆறு கன்னடப் படங்கள் சென்ற வருஷம் வெளியாகி யிருக்கின்றன. சத்திய சோதனையின் கன்னடப் பதிப்பான குணசாகரி, தல்லவி, ஸ்ரீகிருஷ்ண, மசளபாக்கிய லக்ஷ்மி, கவசகுண்டலம், சஞ்சலகுமாரி ஆகியவைகளே அவை.

வெயீடுகள் பகுதி முற்றிலும் பூர்த்தி பெறுவதற்கு மற்றும் இரண்டு படங்கள் இருக்கின்றன. ஜெமினி ஆங்கில விளக்க உரையுடன் வெளியிட்டிருக்கும் சந்திரலேகா ஒன்று: தமிழ் விளக்க உரையுடன் திரையிடப்பட்ட 'செக்ரட்டரி' என்ற தெலுங்குப் படம் மற்றொன்று.

சென்ற மாதம் 4-ம் தேதியன்று சென்னை சினிமா விசிறிகள் சங்கத்தினர், பிராந்திய தணிக்கை அதிகாரியான ஜீ. டி. சாஸ்திரிக்கு தேநீர் விருந்துடன் ஒரு பாராட்டுக்கூட்டம் நடத்தினர். சங்கத்தலைவரான வி. ஸி. கோபாலரத்னம் முதலியோரைப் படத்தில் பார்க்கலாம்.

ரேவதி புரொடக்ஷன்ஸின் முதல் தயாரிப்பான 'மனிதனும் மிருகமும்' என்ற படத்தை விவசாய மந்திரி பக்தவத்சலம் கண்டு களித்தார்.

டேல்லியில் நடைபெற்ற கலைவிழாவில் கலந்து கொண்டவர்கள். மேலே சீன கலாசாரக் குழுவின் தலைவருடனும், கீழே கட்ஜுவுடனும் நம் கோஷ்டியினர் காட்சி யளிக்கின்றனர்.



எஸ். டி. சுப்புலக்ஷ்மியை நாராயணசாமி தேற்றி. ஆசி கூறுவது கிருஷ்ணகுமாரியும், கே. ஆர். ராமசாமியும் சந்தோஷமாக இருப்பதற்குத்தான் என்பது "துளிவிஷம்" பார்த்தால் தெரியும்.

கோலாகலமான இந்த கோஷ்டி நடனமும். கே. பி. ஜே. சுந்தராம்பாளின் குறும்புப் பார்வையும், அங்கமுத்துவின் அங்கசேஷ்டையும் 'வீரசுந்தரி'க்காகத்தான்.

ஸி. கே. சரஸ்வதி நாராயணரர்வை 'கிடுகிடு' வென்று ஆட்டி வைப்பதைத் தான், கிணற்றடியில் மனோஹரிடம் வனஜா கூறுகிறாரோ?– 'லக்ஷ்மி'யில்.



சந்திரபாபு சாப்பிடுவதை சரோஜா பதறிப் பார்ப்பதும், வனஜா, கண்ணம்பாவைத் தேற்றுவதும் 'லக்ஷ்மி'யில் இரு முக்கிய கட்டங்கள்.

மேலே இருக்கும் கலாக்ஷேத்ரம் காட்சியும், கீழே எஸ்.பி. பிள்ளை முதலியோர் தோன்றும் நடனக் காட்சியும் ஈஸ்வர் புரொடக்ஷன்ஸ் 'மனச்சாட்சி' படத்தில் வருகின்றன.



களிப்பு மிகுதியால் மலர்ந்த முகத்துடனிருக்கும் கணேசன், பண்டரிபாய் இருவரும் சூர்யகலாவின் கலக்கத்திற்குச் சம்பந்தப்பட்டிருக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? ஏவி. எம். 'ஒரு நாள்' படத்தில்.

பி. ஏ. பெரியநாயகி

ஏவி. எம். செட்டியார் ''சபாபதி'' யைத் தயாரித்தபோது அதிலே கல்யாணியில் ஒரு பாட்டு பாடினார் பெரியநாயகி. அதன் காரணமாக செட்டியாரின் மகத்தான வெற்றிப் படமான ''ஸ்ரீ வள்ளி''யில் பெரிய நாயகி குரல் கொடுக்கும்படியான அவசியம் ஏற்பட்டது. மகாலிங்கம் அப்போது பிரமாதமாகப் பாடினார். அவரது சாரீரத்தில் ரவை ஜாதிகள் பிரமாதமாக இருந்தன. தொட்ட இடத்திலெல்லாம் பிர்க்கா பேசியது. அனேகர் கிட்டப்பாவின் இசைத் தட்டு என்று கூறினார்களே தவிர மகாலிங்கம்தான் பாடினார் என்பதைக் கூட நம்பவில்லை. அவ்வளவு பிரமாதமான பாட்டுக்கு எதிராகப் பாட ஒரு சரியான பாடகி வேண்டியிருந்தது. அப்போது குமாரியாக இருந்த ருக்மணிக்குச் சரியாகப் பாட வராது. ஆகவே குரல் இரவல் வாங்குவதென்று தீர்மானிக்கப்பட்டு, மகாலிங்கத்துக்கு சரியாகப் பாட வேண்டுமென்பதற்காக பெரியநாயகி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

'ஸ்ரீ வள்ளி' படம் திரையிடப் பட்டதும தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் 'சிந்தை யறிந்துவாடி' 'வேலன் வருவாரோடி', தூது செல்வாய் மயிலே' போன்ற பல வள்ளி திருமண பாடல்களும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டன. அந்தப் படத்தின் மகத்தான வெற்றிக்குக் காரணமே அதிலிருந்த பாடல்கள்தான்.

ஸ்ரீ வள்ளிக்குப் பிறகு பெரியநாயகிக்கு ரஸிக உலகம் அளித்த வரவேற்பு சொல்லத் தரமன்று. அத்தோடு பின்னணி கலைக்கேவும் வரவேற்பு இருந்தது. அடுத்தபடியாக பெரியநாயகிக்குப் புகழளித்த படம் ஸிட்டடெல் ''ஞான சௌந்தரி'' யாகும். எம். வி. ராஜம்மாவும் டி. ஆர். மகாலிங்கமும் பிரதம பாகங்களில் நடித்த இப்படத்தில் ராஜம்மாவுக்கு குரல் கொடுத்தார் பெரியநாயகி. ஞானசௌந்தரியும் தயாரிப்பாளர்களுக்குப் புகழும் பணமும் வாரிக் கொடுத்தது. 'கன்னியே மாமரி'' போன்ற ஞானசௌந்தரி பாடல்கள் எல்லோராலும் பாடப் பட்டன. கிருஷ்ணபக்தி, வனசுந்தரி முதலிய படங்களிலும் பெரியநாயகி வெளுத்துக் கட்டியிருந்தார். கிருஷ்ண பக்தியில் அவர் கர்நாடக சங்கீதத்தை மிகத் திறமையுடன் கையாண்டிருந்தார். வன சுந்தரியில் பெரியநாயகியின் குறத்தி பாடலுக்குப் பிரமாதமான வரவேற்பிருந்தது.

பிறகு வந்த வெற்றிப் படங்களான காஞ்சனை, பொன்னி, ஏழை படும் பாடு, மருமகள் முதலியவைகளில் பெரியநாயகியின் பின்னணியும் அவைகளின் அந்த வெற்றிக்கு முக்கிய காரணங்களாயிருந்தன. 'ஏழை படும்பாடு' படத்தில் ''ஆசைக் கிளியே'' ''கனிவுடன திரும்பியே பாரும்'' முதலிய பாடல்களை இன்று கூடப் பலர் முணுமுணுக்கின்றனர்.

பின்னணி என்ற வார்த்தை உச்சரிக்கப்படும் போதெல்லாம் பெரியநாயகியின் ஞாபகம்தான் யாருக்கும் வரும். அவ்வளவு தூரம் அக்கலைக்கு மவுசைத் தேடி தந்துவிட்டார் அவர். தமிழ்ப் படங்கள் சிலவற்றில் பெரியநாயகி நடித்திருக்கிறார். அவைகளில் அவரது தோற்றமும் நடிப்பும் எப்படியிருந்தன என்பதைக் கவனிப்பதற்கு முன் அவரது பாடல்கள்தான் கருத்தை யிழுத்து விட்டனவே!

பெரியநாயகி பின்னணியில் மகத்தான புகழைப் பெற்றவர் என்றாலும் அவர் கர்நாடக சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. இசைக்குயில் பெரியநாயகிக்கு அற்புதமான சாரீர வசதிகளிருக்கின்றன. கணீரென்று ஒலிக்கும் அந்தச் சாரீரம் மூன்று ஸ்தாயிகளிலும் பிர்க்காப் பொழியும் வசதியுள்ளது. ஒரோரு சமயம் கொஞ்சம் உரத்துப் பாடினாலும் ரம்மியமான கீதம் அவருடையது. இந்த இசைக் குயில் இரு நடனமணிகளைத் தயார் செய்திருக்கிறது. சாயி, சுப்புலக்ஷ்மி என்ற அந்த நடனமணிகளுக்கு பெரியநாயகிதான் பதம் பாடுகிறா.

விஜயாவின்
சந்திரஹாரம்
படக்காட்சிகள்
PSR

செய்கிறபடி
செய்தால்
எதுவும் சோ
பிக்கத் தான்
செய்யும் என்
பதை விஜயா
புரொடக்

ஷ ன் ஸ ா ரின் "சந்திர
ரம்", நிருபிக்கும்.

பிரபல நக்ஷத்திரங்க
ளான என். டி. ராமராவ்,
ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி,
எஸ். வி. ர ங் க ர ா வ்,

ரேலங்கி, சூர்யகாந்தம், மீனுக்ஷி முதலியோர் சிறப்பாக நடித்திருக்கும இப்படத்தை கே. காமேஸ்வரராவ் மிகுந்த சிரத்தையுடன் டைரக்ட் செய்திருக்கிருர். தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாராகியுள்ளது இப்படம்.



விஜயாவின் இரட்டையர்களான நாகிரெட்டி – சக்ரபாணி தயாரிப்பு இந்த "சந்திரஹாரம்"

என். என். கண்ணப்பா

நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியைப் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. சில நடிகர்களின் வாழ்க்கை வரலாறுகளை வெளியிடும்போது அவர்கள் தாங்கள் நவாபின் சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்ளவில்லை. சிலர் அதைப்பற்றி எழுதவுமில்லை. கே. சாரங்கபாணி ஒருவர்தான் நவாபின் கம்பெனி நடிகர் என்றே பலரும் நினைத்திருப்பார்கள். இப்போது அந்த சிஷ்ய கோடிகளின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே போகிறது.

இன்றைய பட உலக பிரபல கலைஞர்களான கே. சாரங்கபாணி, எஸ். ஏ. நடராஜன், எம். என். நம்பியார், டி. கே. கோவிந்தன், டி. கே. கல்யாணம், எஸ். எம். குமரேசன், என். என். கிருஷ்ணன், என். என். கண்ணப்பா, டி. கே. கிருஷ்ணசாமி, எஸ். டி. சுந்தரம், கோவிந்தராஜுலு நாயுடு, சுப்பய்யா நாயுடு ஆகியோர் நவாபின் பண்ணையிலிருந்து வந்தவர்கள் என்பதை விளக்க வேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, நவாபின் கம்பெனியில் கட்டுப்பாடுகள் மிகவும் அதிகம். அதனால் பல இடங்களிலும் வேலைசெய்ய நடிகர்களால் முடியவில்லை. உலகினருக்கு அறிமுகமாகாமலிருந்தனர். இரண்டாவது, இன்றைய மேற்கண்ட கலைஞர்கள் கம்பெனியிலிருந்து விலகிய பின்னரே பட உலகில் புகுந்தனர் என்பதுதான். ஆகவே இவர்கள் நவாபின் சிஷ்யர்கள் என்பது அதிகம் தெரியாமலிருந்து விட்டது.

நவாபின் சிஷ்யர்

வாழ்க்கைச் சித்திரம்

களில் அவருடன் சேர்ந்தாற்போல் சுமார் பன்னிரண்டு வருஷங்கள் இருந்து, பல பாத்திரங்களையும் ஏற்றுத் திறமையுடன் நடித்து, குருவின் ஆசையையும் அன்பையும் பெற்றவர்தான், புகழேணியில் ஏறிக் கொண்டிருக்கும் என். என். கண்ணப்பா. ஆமாம், அவர் உங்களில் பலர் நினைப்பதுபோல் எம். என். கண்ணப்பா அல்ல. அவரது ஊர் நஞ்சைய கவுண்டன் புதூர். அவர் தகப்பனார் நஞ்சப்ப கவுண்டர். ஆகவே ஊர், தகப்பனார் பெயர்களைக் குறிக்கும் என். என். என்பதைத்தான் அவரது பெயருக்கு முன்னால் கூற வேண்டும்.

தேவகி படத்தில் முதன் முதலாக கண்ணப்பாவைச் சந்தித்தவர்கள், அவரது அனுபவக் குறைவைக் கண்டு ஓரளவு அதிருப்தி கொண்டாலும் அவரது ஓரிரு சிறப்பியல்புகளைக் கொண்டு மதிப்பிட்டு, முன்னணிக்கு வரக்கூடிய ஒரு நடிகர் என்று தீர்மானித்தார்கள். கண்ணப்பா அதனால்தான் அந்த ஒரு படத்தின் மூலமே 'தேவகி' புகழ் கண்ணப்பா வாகி விட்டார். இந்தப் பெருமையெல்லாம் மக்களையும் அவர்களுக்கு அவரைத் துணிந்து அறிமுகப்படுத்திய டி. ஆர். சுந்தரத்தையும் தான் சேரும்.

கோயமுத்தூர் ஜில்லாவில் நஞ்சய்ய கவுண்டன் புதூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. கோயமுத்தூருக்குச் சுமார் நாலைந்து மைல்கள் தூரத்திலிருக்கிறது இந்த அழகிய கிராமம். அங்கே நஞ்சப்ப கவுண்டர் என்ற ஒரு விவசாயி இருந்தார். கிரணம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சுப்பம்மாளை அவர் மணந்து கொண்டு, காலத்திற்கும் தெய்வத்திற்கும் பயந்து நேர்மையுடன் வாழ்ந்து வந்தார். அவர்களுக்குப் பிறந்த நான்கு குழந்தைகளில் முதலாமவர்தான் கண்ணப்பா

1922-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 1-ம் தேதி கிரணம் கிராமத்தில் பிறந்தார் கண்ணப்பா.

நமது சென்னை மந்திரி களம் வி. ஸி. பழனிசாமி கவுண்டரின் சொந்த ஊரான வெள்ளக் கிணறு என்ற இடத்தில்தான் கண்ணபபா பள்ளியில் படித்தார். மந்திரியின் சகோதரர் காலஞ்சென்ற வி. ஸி. வெள்ளியங்கிரி கவுண்டர்தான் கண்ணப்பாவின் குடும்பத்திற்கு மகத்தான ஆதரவு தந்து காப்பாற்றி வநதார். அதன் காரணமாகத் தான் கண்ணப்பா பள்ளியில் சம்பளமே கட்டாமல் படிக்க முடிந்தது. அதே காரணத்தால்தான் சில பிள்ளைகளைப் போல பள்ளிச் சம்பளத்துடன் பீய்த்துக் கொள்ளவும் முடியாமலிருந்தது! ஐந்தாவது வயதில் பள்ளியில் சேர்ந்த கண்ணப்பா குடும்பத்தின் வறுமை நிலையறிந்து அக்கறையுடன் படித்து வந்தார். எட்டாவது வகுப்பு வரை மட்டமடிக்காமல் படிததுத் தேறினார் அவர். அவரது எட்டாவது வயதிலேயே அவரது தகப்பனார் காலமாகி விட்டார். பதின்மூன்று வயதுவரை தட்டுத் தடுமாறிய பின் அவர் வாழ்வில சூரியன் உதயமாயிற்று என்றே சொல்ல வேண்டும். பள்ளியில் அவர் படிக்கும்போது முகுந்தராம் என்ற அவரது பள்ளி ஆசிரியர், கண்ணப்பாவின் சாரீர வசதிகளையும் சங்கீதத்தில் அவருக்கிருந்த ஆசையையும் கண்டு, தனியாக எதுவும் எதிர்பாராமல் அக்கறையுடன் சங்கீதம் சொல்லிக் கொடுத்து வந்தார். தெரிந்தவர்கள் வீட்டிலும் பள்ளியிலும் பாடுவார் கண்ணப்பா.

அப்போது மது விலக்குப் பிரசாரம் தீவிரமாக நடைபெற்ற சமயம். முன்பு ராஜாஜி மந்திரி சபையில் அமைச்சராகப் பணியாற்றிய காலஞ்சென்ற ராமநாதனும், கோவை ஸி. பி. சுப்பய்யாவின் சகோதரர் ஸி. பி. விஸ்வநாத முதலியாரும் அப்போது மதுவிலக்கு பிரசாரம் செய்ய வெள்ளக் கிணறு கிராமத்திற்கு வந்தனர். சிறு பையன், நன்றாகப் பாடுகிறான் என்று அவ்வூர் கவுண்டர்கள் கூறவே விஸ்வநாத முதலியார் கண்ணப்பாவை ஆரம்ப கீதம் பாடச் சொன்னார். அப்போதெல்லாம் யாராவது பாடாவிட்டால் கூட்டம் சேராது. ஆகவே வந்தே மாதரம் கீதத்தை கணீரென்று பாடிக் கூட்டத்தைச் சேர்த்தார் கண்ணப்பா!

நவாப் ராஜமாணிக்கம் விஸ்வநாத முதலியாரின் நண்பர் கணீரென்று பாடிய கண்ணப்பாவின் பாட்டைக் கேட்ட வுடனேயே ராஜமாணிக்கம் கம்பெனியில் அவரைச் சேர்க்கும் யோசனைதான் விஸ்வநாத முதலியாருக்குத் தோன்றியது. அதையே உள்ளூர் பிரமுகர்களிடம் கூறி அவர்களுடையவும் குடும்பத்தாருடையவும சம்மதத்தைக் கேட்டு, கண்ணப்பா நவாபின் கம்பெனியில் சேருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். ஒரு நாள் விஸ்வநாத முதலியாரின் ஜவுளிக் கடைக்கு வந்தார் கண்

ணப்பா. அப்போது கே. சாரங்க பாணி அதே கடைக்கு வந்திருந்தார். கண்ணப்பாவுக்கு பெற்றோர் இட்ட பெயர் வேறு சாரங்கபாணி அவர் நாடகக் கம்பெனியில் சேரப் போவதை யறிந்து அவருக்கு கண்ணப்பா என்று பெயரிட்டார் அதுதான் அவரது இயற்கைப் பெயராகி விட்டது. கலையுலகிற்குத் தந்தையாக வந்து பெயரிட்ட அதே சாரங்கபாணி, மனிதனும் மிருகமும் படத்திலும் தந்தையாக வருவது பொருத்தமாக இல்லையா?

சாரங்கபாணி வந்த அன்றே கண்ணப்பாவை அழைத்து வரும்படி சென்னையி லிருந்த நவாபிடமிருந்து விஸ்வநாத முதலியாருக்குக் கடிதம் வந்தது. உடனே சென்னைக்குக் கிளம்பிவிட்டார் அவர். கண்ணப்பாவின் செலவுகளை ஏற்று அவருடன் வி. பி. அம்மாசைக் கவுண்டரும் வந்தார். 20-10-1937-ல் சென்னையில் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியில் நடிகராகச் சேர்ந்தார் கண்ணப்பா.

கம்பெனியில் சேர்ந்த உடனேயே கண்ணப்பாவுக்கு நடிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சுமார் இரண்டு மாதங்கள் வரையில் சாபபிட்டு விட்டுச் சும்மா இருந்தார். கம்பெனியின் சட்ட திட்டங்களையும் நடிப்பைப் பற்றியும் இந்த இரண்டு மாதங்களில் நன்கறிந்து கொண்டார் கண்ணப்பா.

முதன் முதலாக, கம்பெனியில் சேர்ந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு. ஏசுநாதர் நாடகத்தில கண்ணப்பாவுக்கு ஒரு சிறு ஸ்திரீ பார்ட் கொடுக்கப்பட்டது. சென்னையில் கம்பெனி இரண்டு வருஷ காலம் தங்கியிருந்தது. அந்த இடைக்காலத்திற்குள் கண்ணப்பா கம்பெனியின் பிரதான நடிகராகி விட்டார். எக்ஸ்ட்ராவாக ஆரம்பித்து அயன் ஸ்திரீ பார்ட், அயன் ராஜ பார்ட்டுகளில் தோன்றி திறமை மிக்க நடிகர் என்று பாராடடபபட்டார். ஹாஸ்ய பாகங்களில் அவர் நடித்ததில்லை. சரத்சந்திரரின் 'பிரேமகுமாரி'யில் தேஜஸ்வினி என்ற ஸ்திரீ பார்ட்டில் தேஜஸோடு காட்சியளிப்பார்! ராஜபக்தியில் அவர்தான் மிருநாளினி. சதி அனுஸூயாவில் சரஸ்வதி. இன்பசாகரனிலும் அயன் "இஸ்திரி" பார்ட் தான்! கிருஷ்ணலீலாவில் கிருஷ்ணனாக நடித்தார் கண்ணப்பா. சென்னையில் அவருக்கு — அவர் பெயரை மக்கள் தெரிந்து கொள்ளாவிட்டாலும்— நல்ல பெயர்.

திருப்தி ஏற்படவில்லை. பொன்முடிக்கு அடுத்தபடியாக மந்திரிகுமாரியைத் தயாரிக்கத்தான் அப்போது ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. பார்த்திபன் வேஷத்திற்கென்று கண்ணப்பாவை ஏற்பாடு செய்ய சுந்தரம் தீர்மானித்தார். டங்கன் தீர்மானிக்கவில்லை. ஆபீஸார் டங்கனின் விருப்பப்படி கண்ணப்பாவை அனுப்பி விட்டார்கள். கண்ணப்பாவுக்கு அப்போது உடல் நலக் குறைவாக இருந்தது. அவர் ஒரு ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டியிருந்தது. ஆகையினால் சந்தர்ப்பம் கிடைக்காது என்று தீர்மானித்து மனமொடிந்து போன அவர் நேரே கோவைக்குச் சென்று ஆபரேஷன் செய்து கொண்டார். ஆனால் அங்கே அவர் சென்ற நான்காம் நாள் அவருக்கு சுந்தரத்திடமிருந்து தந்தி வந்தது. பார்த்திபன் வேஷத்திற்கு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டதாயும் உடனடியாக வருமாறும் அழைப்பு வந்தது.

அதிருஷ்டம் ஒதுங்கிப் போய் விட்டதைக் கண்டு மனம் வருந்தினாலும், ஆறுமாத காலம் ஒய்வெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டு அடுத்த படத்திற்கு அவசியம் வருவதாகப் பணிவுடன் சுந்தரத்திற்கு எழுதினார் கண்ணப்பா. அந்த பார்த்திபன் பாத்திரத்தில் தான் பிறகு நவாப் கம்பெனி நடிகரான எஸ். ஏ. நடராஜன் நடித்தார். ஆறுமாதம் முடிவதற்கும் மந்திரிகுமாரி முடிவதற்கும் சரியாயிருந்தது. சொன்னபடி டி. ஆர். சுந்தரம் உடனே வருமாறு கண்ணப்பாவுக்கு எழுதினார். கணபதி பிக்சர்ஸின் 'தேவகி' படம் அப்போது தயாரிக்க ஏற்பாடு நடந்தது. சேலத்திற்கு வந்தார் கண்ணப்பா. படத்தில் நடிக்க ஆரம்பித்த சுமார் ஒரு மாத காலம் வரை அவருக்கு காமிராக் கூச்சம் தெளியவில்லை. கம்பெனியில் ஒரே மாதிரி சுமார் பனிரண்டு வருஷம் நடித்த பின் தனது போக்கை மாற்றிக் கொள்ள அவர் மிகவும் சிரமப்பட்டார். சுமார் பத்துமாத காலம் தேவகிக்காக சேலத்தில் தங்கினார் அவர். தேவகியில் சில இடங்களில் அவரிடம் சற்று தடுமாற்றமும் நாடக பாணியும் காணப்பட்டாலும் மொத்தத்தில் அவரைப்பற்றி ரஸிகர்களுக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. வி. என். ஜானகி, பாலசந்தர், மாதுரி தேவி, டி. பாலசுப்ரமணியம், சிவதாணு, எஸ். ஆர். ஜானகி முதலிய பலர் நடித்த அந்தப் படத்தை ஆர். எஸ். மணி டைரக்ட் செய்தார். அந்த



படம் கணபதி பிக்சர்ஸாருக்கு ஒரு வெற்றி என்றே குறிப்பிட வேண்டும்.



தேவகியில் நடித்து முடிந்ததும் கண்ணப்பா கிராமத்துக்குச் சென்று விட்டார். அந்த விஷயத்தில்தான் அவரை விதி சதி செய்து விட்டது. 'படத்தில் நடித்து விட்டோம். இனி தானகவே சந்தர்ப்பங்கள் வந்து குவியும்' என்று தவருக எண்ணி விட்டார் அவர். அத்துடன் அதற்கு முக்கியமான ஓரிரு காரணங்களும் இருந்தன. மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து விலகிய வேணு என்பவர் சங்கீதா பிக்சர்ஸ் என்ற கம்பெனியைச் சிலருடன் கூட்டாக ஆரம்பித்தார். அவர்கள் ஜூபிடரின் கூட்டுறவோடு 'ஜமீன்தார்' படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தனர். கண்ணப்பாவுக்கு நிச்சயம் ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதாக அவர்கள் கூறினர்கள். அதே சமயம் பக்ஷிராஜாவின் 'காஞ்சன'விலும் அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போலிருந்தது. இதையும் மனதில் கொண்டு ஊரிலேயே தங்கிவிட்டார் அவர்.

ஆனல் நாம் நினைப்பதுபோல் எல்லாம் நடக்குமா? சந்தர்ப்பங்களை எதிர்பார்த்த கண்ணப்பா மனமுடைந்து போய் விட்டார். அப்போது அதாவது சுமார் 1951-ம் வருஷ முடிவில் எஸ். ஏ. நடராஜனின் திருமணத்திற்கு அவர் பழநிக்குச் சென்றார். விழுப்புரத்தில் அப்போது நாடகக் கம்பெனி யொன்றை நடத்தி வந்தவரும் 'நால்வர்' மூலம் புகழ்பெற்றவருமான ஏ. பி. நாகராஜனும் அன்று திருமணத்திற்கு வந்திருந்தார். படத்திற்குச் சந்தர்ப்பம் வரும்வரை தன்னுடன் கம்பெனி நாடகங்களில் நடிக்கும்படி கண்ணப்பாவை அழைத்தார் அவர். ஊருக்குச் சென்று நேரே விழுப்புரம் வந்தார் கண்ணப்பா. பணம், கொள்ளைக்காரன் முதலிய நாடகங்களில் அவர் நடித்தார். சுமார் இரண்டுமாதங்கள் அப்படி இருந்த பின் மீண்டும் யோசித்தார். படவுலகை நம்பி நவாப் கம்பெனியை விட்டு விலகிய பின் மீண்டும் இப்படி நாடகமாடிக் கொண்டிருப்பதில் பலனில்லை என்று தீர்மானித்தார்.

ஆகவே ஊருக்குச் சென்று கொஞ்சம் பணம் சேகரித்துக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தார். சென்னைக்கு தேவகியில் நடித்த உடனேயே வந்திருந்தால் பல சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கும் என்பதையும் அவர் உணர்ந்தார்.

சென்னையில, நவாப் கம்பெனி நடிகராக இருந்த எஸ். டி. சுந்தரத்தைச் சந்தித்து தன் நிலையை விவரமாக எடுத்துக் கூறினர் அப்போது ரேவதி புரொடக்ஷன்ஸார் சுந்தரம் எழுதிய "மனிதனும் மிருகமும்" கதையைப் படமாக்க ஏற்பாடு செய்து வந்தனர். தன் நண்பருக்கு எப்படியும் சந்தர்ப்பம் பெற்றுத்தரும் உறுதியோடு அவரை ரேவதிக்கு அழைத்துச் சென்றார் சுந்தரம். அதிருஷ்டம் இருவருக்கும் இருந்தது. மனிதனும் மிருகமும் கதாநாயகன் சுந்தரமாக நடிக்க கண்ணப்பா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். அவருக்கெதிராக வாணியின் பாத்திரத்தில் நடிக்க ஜி. சகுந்தலா ஒப்பந்தம் செய்யப்பட்டார். சுமார் இரண்டு மாதங்கள் ஷூட்டிங் நடைபெற்றது. பிறகு ஷூட்டிங் தற்காலிகமாக

திருத்தி வைக்கப்பட்டது. ஆகவே எஸ். டி. சுந்தரத்துடன் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். சென்னையில் 'என் கதை' என்ற நாடகத்தில் பல சினிமா நக்ஷத்திரங்களுடன் நடித்தார். அத்துடன் செங்கற்பட்டு, விருத்தாசலம் முதலிய இடங்களில் பணம், கொள்ளைக்காரன் நாடகங்களில் ஸ்பெஷல் நடிகராக நடித்தார். ஏ. பி. நாகராஜனுடன்தான் அவர் மேற்படி நாடகங்களில் நடித்தார்.

ஏதோ ஒரு மாதிரியாகக் காலக்ஷேபம் நடந்து வந்தது. ஆனால் திடீரென்று அதுவும் போயிற்று. படமும் பாதியில் நின்றது. நாடகங்களும் கிடைக்கவில்லை. மயிலை பரிபூர்ண வினாயகர் கோயில் தெருவில் பட்டினியோடு பரிதவித்தார் கண்ணப்பா. ஊருக்குத் திரும்பிப் போகத் தீர்மானித்தார். ஆனால் வழி ஏற்படவில்லை. மனம் வெதும்பி காபிக்குக் கூட வழியில்லாத போது மனமாற ஆண்டவனை வேண்டினார். 'நீயே கதி' என்று வினாயகனை வேண்டிய போது பரிபூர்ண வினாயகனின் பரிபூர்ண அருள் அவருக்குக் கிடைத்தது. ஜம்பு புரொடக்ஷன் ஸாரின் கார் வந்து வாசலில் நின்றது. ரா. வெங்கடாசலம் கண்ணப்பாவைப் பற்றி அறிந்திருந்தார். அவரது சிபாரிசின்பேரில் டைரக்டர் எம். வி. ராமன் 'மனைவியின் மகன்' படத்தில் நடிக்க கண்ணப்பாவுக்குச் சந்தர்ப்பமளிக்கத் தீர்மானித்தே அழைத்திருந்தார். அன்றே அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டு கையில் அட்வான்ஸும் வாங்கி விட்டார். "காலையிலே காபிக்கு வழியில்லை. மாலையிலே கைநிறையக் காசு. நமக்கு அவனருள் இருக்கிறது. அவனை நம்பினால் ஆகாததொன்றில்லை. ஆண்டவன் அவசரப்படாமல் நம்மை நிதானமாக இருக்கும்படிச் சொல்லுகிறான்" என்ற முடிவுக்கு வந்தார் கண்ணப்பா.

'மனைவியின் மக'னில் நடிக்க ஒப்பந்தமான ஒரே மாதத்திற்குள் சங்கீதா பிக்சர்ஸார் 'நால்வர்' படத்திற்கு கண்ணப்பாவை ஒப்பந்தம் செய்தனர். மற்றும் இரண்டு மாதத்திற்குள் 'மனிதனும் மிருகமும்' படத்திற்கும் அழைப்பு வந்தது. மாதுரிதேவி இப்போது கதாநாயகியாக நடித்தார். இடையிடையே மனோரதம், நள்ளிரவில் நடந்தது, என் கதை, கவியின் கனவு, எழுத்தாளன் நாடகங்களிலும் நடித்தார். ஆக நிதி நிலைமை ஓரளவு சீர்ப்பட்டு அதிருஷ்ட லோகம் கண்களுக்குத் தெரிந்தது. நால்வர் படம் சாதாரண நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டதானாலும் ஒரு நல்ல படம் என்ற பாராட்டைப் பெற்றது. கண்ணப்பா அதில் நன்றாக நடித்திருக்கிறார். அவரது திறமைக்கு ஓரளவு எடுத்துக்காட்டாக இருக்கிறது இப்படம். "சென்ஸாரின் வெட்டுதலுக்குள்ளான பாகங்கள் இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். நான் நடித்து முதலில் பார்த்த பாகம் இருந்தால் மக்களிடையே நான் மகத்தான வரவேற்பைப் பெற்றிருப்பேன்" என்கிறார் அவர். மனிதனும் மிருகமும் படம் கே. வேம்பு—எஸ். டி. சுந்தரம் இருவராலும் டைரக்ட் செய்யப்பட்டது. கதாநாயகன் சுந்தரமாக வந்து, (ஓரிரு இடங்கள் தவிர) கனகச்சிதமாக நடித்திருக்கிறார் கண்ணப்பா. அவர் நடித்து கடைசியாக வெளி வந்த படம் மனிதனும் மிருகமும் தான்.

எஸ். ஏ. நடராஜனுடன் கண்ணப்பா 'எழுத்தாளன்' என்ற நாடகத்தில் நடித்தார். அப்போது சியாமளா பிக்சர்ஸ் செட்டியார் பார்த்தார். அவருக்கு கண்ணப்பாவிடம் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. அவர் 'அறிஞன்' என்ற படத்தில் நடிக்க அவரை ஒப்பந்தம் செய்தார். கண்ணப்பா, செருகளத்தூர் சாமா, டி. கே. ராமச்சந்திரன், சரஸ்வதி (ஜெமினியின் 'மூன்று பிள்ளைகள்' படத்தில் கண்ணாம்பாவின் குமாரியாக நடித்த அதே சரஸ்வதி தான் இவர்) இவர்கள் நடிக்கும் இப்படம் சியாமளா ஸ்டூடியோவில் வளருகிறது. டி. ஆர். கோபு இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறார். ஜம்பு புரொடக்ஷன்ஸாரின் 'மனைவியின் மகன்' படத்தில் அவர் எம். வி. ராஜம்மாவின் கணவராகத் தோன்றுகிறார். அவரோடு ராஜம்மா தவிர வைஜயந்திமாலா, எஸ். வி. சஹஸ்ரநாமம் முதலியோர் நடித்து வருகின்றனர். எம். வி. ராமன் இதன் டைரக்டர்.

'நாடக உலகையும் பட உலகையும் சேர்த்துத்தான் நம்பலாமே தவிர ஏதாவது ஒன்றைமட்டும் நம்புவது கூடாது. இது என் அனுபவ பூர்வமான உண்மை. சில நடிகர்கள் பட உலகிலேயே இருந்துவிட்டு நாடகங்களுக்கு லாயக்கில்லாமலும் பட உலகில சந்தர்ப்பம் பெறாமலும் தவிக்கிறார்கள்' என்கிறார் அவர்.

கண்ணப்பா இதுவரை தான் நடித்த படங்களில் நால்வர்தான் தனக்குப் பிடித்திருந்தது என்கிறார். இந்த சீஸனில் பல நாடகங்களில் அவருக்கு வேலை உண்டு. 3, 17–ம்தேதிகளில் அவரது நாடகங்கள் இருக்கின்றன. இவ்விதழ் வெளியாகும்போது ஏதாவதொன்றில் நடித்திருக்கவும் கூடும்.

பட உலகில் எத்தனையோ நடிக நடிகையர் புகழோடு தோன்றி புகழ் மங்கிப் போய் விட்டார்கள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சீஸன் இருந்திருக்கிறது. ஆனால் அசைக்க முடியாத நிகரில்லாக் கோவலர்களாக உள்ள கே. சாரங்கபாணி, டி. எஸ். பாலய்யா, நாகய்யா போன்றவர்களைப்போல யாவருக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்பதே கண்ணப்பாவின் ஆசை. அவர்கள் பாகங்கள் சலிப்பைத் தருவதில்லை. ஒரே நிதானத்துடன் அவர்களைப் போல எல்லாக் கலைஞர்களும் இருக்க வேண்டும் எனற அவரது மனப்பூர்வமான அபிப்பிராயம் வரவேற்கத்தக்கதே. தமிழ்ப்பட உலகில் பாலய்யா, சாரங்கபாணி, எம். கே. ராதா, டி ஆர். ராஜகுமாரி இவர்களை அவருக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. மூறையே வில்லன், ஹாஸ்யம், கதாநாயகன், கதாநாயகி பாத்திரங்களில் அவர்களுக்கு ஈடு அவாகள்தான் என்கிறார் அவர். ஆந்திர நடிகர்களில் நாகய்யா, நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, எஸ். வரலக்ஷ்மி ஆகியோரிடம் அவருக்கு கௌரவம் உண்டு.

அன்புத்தாய்

நமது தற்போதைய டைரக்டர்களில் – அதாவது அவர் நடித்துள்ள படங்களில் சந்தித்தவர்களில் எம். வி ராமனைப்பற்றி அவர் மிகவும் சிலாகித்துப் பேசுகிறார். நடிகர்களைத் தட்டிக் கொடுத்து, அவர்களை அனுசரித்து தமாஷாகவே வேலை வாங்குவதில் ராமன் சிறப்புற்று விளங்குகிறார். அவரிடம்தான் நடிகர்கள் எதையும் தைரியமாகக் கேட்டு குற்றம் நீக்கி குணம் கொள்ள முடிகிறது என்கிறார் கண்ணப்பா. பாட்டுக்காக அவர் கலையுலகில் புகுந்தார். ஆனால் பட வுலகில் அவர் வாயை மட்டும் தான் அசைக்க முடிகிறது!

நாடகங்களுக்கான விஷயங்களிலே பெரும்பாலும் பொழுது போக்குகிறார் கண்ணப்பா. நூல் நூற்பதில் அவருக்கு இன்னும் ஆசையிருக்கிறது. ஆங்கிலம் சுமாராக வரும். சம்ஸ்கிருதமும் மலையாளமும் எழுதப் படிக்கத் தெரியும் அவருக்கு. ஹிந்தியில் பிராதமிக் பரீட்சையில் 83சத விகிதம் மார்க்குகளுடன் பாஸ் செய திருக்கிறார்! ஆகவே அவரை ஹிந்தி எதிர்ப்பாளர் என்று யாரும் நினைத்துவிட முடியாது! இதெல்லாம் நவாப் கம்பெனியில் இருந்த போது பயின்றவை.

"கலைஞனுக்கு கட்சி மனப்பான்மை இருக்கக்கூடாது. அவன் கலை, தொழில் இவற்றை மட்டுமே பெரிதாகக் கருத வேண்டும். ஒரு வேடிக்கை. நான் நால்வரில் நடித்ததைக் கண்ட கம்யூனிஸ்ட்காரர்கள் ஓரிருவர் என்னிடம் வந்து என்னைப் பாராட்டிவிட்டுத் தங்கள் கட்சியில் சேரும்படிக்கூறினார்கள். "நான் எந்தக் கட்சியையும் சேராதவன். கலைக் கட்சி எல்லோருக்கும் பொதுவானது" என்று சொல்லி அனுப்பினேன்" என்கிறார் கண்ணப்பா. கண்ணப்பாவின் குடும்பம் தெய்வபக்தி மிக்கது. அவரது குலதெய்வம் பத்ரகாளி அம்மன். தினமும் பூஜை புனஸ்காரங்கள் செய்ய அவர் தவறுவது கிடையாது.

கண்ணப்பாவுடன் கூடப் பிறந்தவர்கள் மூன்று பேர். அவருக்கடுத்தபடியாக இரு சகோதரிகள் உண்டு. இருவரும் மணமாகி கணவன்மாருடன் வசிக்கிறார்கள். கடைசி சகோ

அருமை மனைவியுடன்

தரார் அய்யாசாமி ஊரில் தங்கியிருக்கிறார். கண்ணப்பா சென்ற ஜூன் மாதம் 17-ம் தேதி பொள்ளாச்சியைச் சேர்ந்த தங்கமான குணமுள்ள தங்கம் என்ற பெண்ணை மணந்தார். அவர்கள் ஏற்கனவே உறவினர்கள். மனைவி தங்கம் எஸ். எஸ், எல். ஸி. படித்தவர், டைப்ரைடிங் தெரியும். கணவனுக்கு உறுதுணையாகவுள்ள இந்த 'சக்தி' விருந்தாளிகளை நன்கு வரவேற்று உபசரிக்கிறார்.

"நடிகர்கள் சிக்கன வாழ்வு வாழ வேண்டும். சிலர் ஓஹோ என்று அட்டகாசம் செய்து விட்டுத் தற்போது இருப்பிடம் தெரியாமலிருப்பது என் போன்றவர்களை வேதனைக்குள்ளாக்குகிறது. மக்கள் வேடிக்கை பார்ப்பார்களே என்பதற்காக நம்மை ஒரே சிதம்பர ரகசியமாக்கிக் கொள்ளக் கூடாது. பணம் வரும்போது பிரமாதமாகவும் இல்லாதபோது ரொம்பவும் சாதாரணமாகவும் இல்லாமல் ஒரே சீரான வாழ்க்கையை நடத்த வேண்டும்" என்றெல்லாம் கூறுகிறார் கண்ணப்பா.

தான் இந்த நிலையிலிருப்பதற்குக் காரணமாயிருந்த வெள்ளியங்கிரி கவுண்டரின் குடும்பத்தாரிடம் அளவு கடந்த பக்தியும் விசுவாசமும் அவர் கொண்டிருக்கிறார்.

"எனக்கு வயதுக்குத் தகுந்த கதாபாத்திரம் இன்னும் கிடைக்கவில்லை. ஓரளவு என்னிடம் குறையிருக்கிறது. அவ்வப்போது ரஸிகர்கள் கூறுவது போலவும் எழுதுவது போலவும் அவைகளைத் திருத்திக்கொண்டு வருகிறேன். என் நாடக காலத்தை நான் படக்காலமாக மாற்ற இப்போதுதான் என்னால் முடிகிறது" என்று மனம் விட்டுச் சொல்லும் இவரைப் போன்ற நடிகர்கள் ஓரிருவர்தான் இருக்கின்றனர்.

ஆசையும் அனுபவமும் கொண்ட என். என். கண்ணப்பாவைப் போன்றவர்களுக்குப் படவுலகம் ஆதரவுதரும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

— எஸ். வி. ஸம்பத்குமார்.

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயாஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாய் விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, ஆட்டப் பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள். பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் தூரமாகும். நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாக-சந்தோஷமாகக் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3—0—0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3—15—0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவற மாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்குக் காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனாம்! ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள். விவரங்களுக்கு எழுதவும். எமது விலாசம்:

Principal

The Bengal Mesmerism House (P.P.M.)

NAKODER (PB)

ஆர்.கே.பிலிம்ஸ்

★ அவன்? ★

திரைக்கதை — வசனம்

திவான்பகதூர் கோபால்தாஸ், தன் ஒரே மைந்தன் ராஜுவின் மீது தன் உயிரையே வைத்திருந்தார். அவரது அன்பின் அரவணைப்பிலே ராஜு திக்கு முக்காடிப் போனான் என்றால் மிகையல்ல.

கோபால் தாஸ் ஒரு காண்டிராக்டர். சரஸ்வதி அணைக்கட்டை காண்டிராக்டு எடுத்திருந்த அவர், அதன் நிர்வாக என்ஜினியராக ராஜுவை அனுப்புகிறார்.

ராஜு ஒரு அபூர்வ மனிதன். சிந்தனைச் செல்வன். இயற்கை யன்னையின் சிருஷ்டி விளையாட்டின் பரிபூரண இன்பத்தைக்காண இச்சைப் படுபவன். கலாரஸிகனான அவன், கவிஞனாக மாறுவதற்குப் பதில் கல்லைக் கொண்டு, கட்டிடம் எழுப்பும் கண்டிராக்டராக மாறிவிட்டான். சரஸ்வதி அணைக்கட்டு இயற்கை அன்னையின் புன்முறுவலின் அழகைப் பிரதிபலிக்கும் அழகான மலைப் பிரதேசத்தில் அமைந்திருந்தது. இந்த அழகிய பிரதேசத்தைக் கண்ட அவன் கலையுள்ளம், மடை திறந்த அணைக்கட்டின் பாய்ச்சலைப் போல் பாய்ந்தோடியது. கலையார்வமற்ற 'புலிகேசி'களுக்கு கொடிய வனமாகப்பட்ட அந்த இடம் வனப்பு மிகுந்த இந்திரலோகமாகக் கலைஞன் ராஜுக்குத் தோன்றியது.

* * *

கோபால்தாஸின் நண்பர் மகள் சந்திரா. ராஜுவின் அன்னை காலமான போது சந்திராவைத் தான் அவனுக்குப் பார்த்திருந்தாள். கோபால்தாசும் சந்திராவையே ராஜுக்கு மணமுடிப்பதென முடிவு செய்கிறார். தந்தையின் நிர்ப்பந்தத்தினால் ராஜு சந்திராவுடன் கடிதத் தொடர்பை ஆரம்பிக்கிறான். தன் உள்ளத்தின் உணர்ச்சியை வார்த்தைகளில் வடித்துச் சந்திராவிற்கு தனது கடிதத்தை எழுதுகிறான் ராஜு. கலைஞனின் உள்ளத்தை உள்ளபடி கண்டு கொள்ளும் திறமையற்ற சந்திராவுக்கு அவனது வார்த்தை ஜாலம் மிக்க கடிதம், விளங்காத தத்துவமாகக் கசந்தது.

சந்திராவின் தங்கை லீலா—சகோதரிக்கு நேர்மாறானவள். ராஜுவின் கடிதம் அவனது உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருந்ததைக் கண்டாள். சந்திராவின் சார்பில் ராஜுக்குப் பதிலெழுதும் பொறுப்பை ஏற்கிறாள்.

ராஜுவின் நண்பனான டாக்டர் கைலாஸ் அவனை அணைக்கட்டில் சந்திக்கிறான்.

ராஜு: கைலாஸ்! மக்களின்

பாத்திரங்கள்

நர்கிஸ்	லீலா
ராஜ்கபூர்	ராஜு
விஜயலக்ஷ்மி	சந்திரா
ப்ரான்	டாக்டர் கைலாஸ்

தமிழ். வசனம்:
எஸ். டி. சுந்தரம்

டைரக்ஷன்;
ராஜா நவாதே

பசியைத் தீர்க்க மலையை உடைத்துக் கொண்டிருக்கிறேன்.

கைலாஸ்: என் கேள்விக்கு பதில் இதுவல்ல ராஜு! கோடீஸ்வரர் மகன் நீ.. நகரத்தில் சுகமாக வாழ்வதை விட்டு. கொடிய மலைப் பிரதேசத்தில் இப்படி எதற்காக ஓயாமல் உழைக்கிறாய்?

ராஜ்: இதை நன்றாகப் பார் கைலாஸ்..! இதுதான் உன் கேள்விக்கேற்ற பதில்...அமைதியில்லாத அந்த பட்டணத்தில் இதைப்போன்ற மலைகளைக் காண முடியுமா...? நீர் நிறைந்த ஏரிகளைப் பார்க்க முடியுமா...? சூரிய ஜோதியின் பூரண அழகைத்தான் ரசிக்க முடியுமா...? உம்...மணமிக்க ரோஜாவை விட்டு முட்களை விரும்பும் சில பைத்தியக்கார மனிதர்களும் உலகில் உண்டு கைலாஸ்...நான் அந்தப் பைத்தியங்களிலே ஒருவன் என்று எண்ணிக் கொள்ளேன்...

(ராஜுவின் தகப்பனார் வருகிறார்)

ராஜ்: அப்பா...!

கோபால்தாஸ்: ராஜு! ஏன் இப்படி இருக்கே? முகமெல்லாம் கருத்திருக்கு...!

ராஜ்: ஏம்பா! இந்த வேஷம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா..?

கோ. தா: நீ என் ஒரே மகன் ராஜு!...நீ எதற்காக இப்படி...?

ராஜ்: புரிந்தது அப்பா! கைலாஸ் கூட இதையேதான் சொல்லிக் கொண்டிருந்தார்.. நெற்றி வியர்வை நிலத்தில்விழ உழைப்பதில்தான் சுகமிருக்கிறது அப்பா...அப்பா! நீங்களும் ஏன் இப்படி உழைக்கக் கூடாது? பாவம் உங்களுக்குக்கூட அஜீர்ணம் உண்டென்று சொலவீர்களே!

கோ. தா: இந்த வைத்தியம் கிழவனுக்கு சரிப்படாது ராஜு! என்னைத்தான் உனக்கு நன்றாகத்தெரியுமே?

ராஜ் அப்பா! நீங்க இப்போ எதுக்காக இங்கெ வந்தீங்க?

கோ. தா: அலகாபாத்திலே ஒரு புது மில்லை விலைக்கு வாங்கியிருக்கேன் ராஜு! உனக்கும் இந்த மலை வாசத்தில் சலிப்பு ஏற்பட்டிருக்கும் இல்லையா?

ராஜ் இல்லையப்பா! நான் இந்த மலைவாசத்தைத்தான் மிகவும்விரும்புகிறேன். இயற்கையின் இன்ப ரஸனையில் என்னையே நான் பறி கொடுக்கிறேன். சுருக்கமாகச் சொன்னால் இந்தக் கானகம் எனது ஸ்வர்க்கபூமி அப்பா...

காட்சி 2

ராஜுவின் கடிதத்திற்கு வேண்டா வெறுப்புடன் பதிலெழுத முயற்சிக்கிறாள் சந்திரா.

லீலா: அக்கா! இன்னுமா லெட்டர் எழுதி முடியல்லே...?

சந்திரா: எழுதவே வரல்லேடி லீலா...

லீலா: இன்னொரு தரம் முயற்சி செய்யறதுதானே? (பத்திரிகையைப் பார்த்துக் கொண்டு) இதெல்லாம் என்னக்கா. ஒரே குப்பை மேடு... ஆமாம்—இதைப் பார்த்தா அப்பா என்ன நினைப்பார்...?

சந்: அதாண்டி கஷ்டமாயிருக்கு... மலேக்காட்டிலே இருக்கற அந்த மாப்பிள்ளை யாரோ...? எப்படியிருப்பானோ...? கூனோ குருடோ? செவிடோ, இல்லெ ஊமையோ..? செவிட்டு மனுஷனாயிருந்தால் நான் சதா சத்தம் போட்டுகிட்டே இருக்கணும்... ஒருவேளை க்ராக்கு பிடிச்சவனாயிருந்தா நான் ஒரு பைத்யக்கார ஆஸ்பத்திரி ஆய்த் தொலைக்கணும்..

லீலா: இதெல்லாம் அப்பா கிட்டெ சொல்றது தானே...?

சந்: ஏதோ அப்பா சொன்னபடி வந்த லெட்டருக்கு ஒரு பதில் எழுதிப் போட்டுட்டா, சிரமம் தொலையுமேன்னு நெனைச்சேன்... இதென்னடான்னா லெட்டர் எழுதறதே ஒரு முடியாத தொல்லையாயிருக்கு...

கடிகாரம் மணி ஆறு என்பதை தன் இன்ப நாதத்தால் எடுத்துக் காட்டுகிறது.

சந்: உம்...மணி ஆறு ஆயிடிச்சு... ஆறு மணிக்கு டென்னிஸ் ஆடணும். ஆறரைக்கு கிளப்புக்குப் போகணும். ஏழுக்கு டான்ஸ் இருக்கு...ஏழரைக்கு டின்னர் பார்ட்டி... எட்டு மணிக்கு இன்னொரு என்கேஜ்மெண்டு... இந்த லெட்டரை யார் எழுதித் தொலைக்கிறது?... அதுவும் முன் பின் தெரியாத ஒரு மனுஷனுக்கு! அவனுக்கோ அழகுள்ளவள் வேண்டாமாம்...... குணமுள்ள எருமை மாடுதான் வேணுமாம்..!

லீலா: என்ன! எருமை மாடா?

சந்: ஆமாம் எருமை மாடுதான்! அதுவும் அறிவுள்ள எருமை மாடு வேணுமாம்.. இதுக்குப் பதிலா அந்த ராஜு ஒரு மரத்தையோ—மண்ணாங்கட்டியையோ கட்டிகிட்டு அழலாம். ....லீலா .....உம்...... எனக்குப் பதிலா இந்த லெட்டரை நீயே எழுதிடறியா...?

லீலா: நானா...! நான் லெட்டர் எழுதறதா?

சந்: ஆமாம் லீலா! உன் அக்காவுக்காக இந்த உபகாரத்தை நீ செய்



யக்கூடாதா? எழுது...கொஞ்சம் எழுதேன்.

லீலா: ஆனல்...

சங்: ஆனல் - போனல்-எல்லாம் வேண்டாம். லெட்டரை நல்லா ஸ்டிராங்கா அழுத்தமா எழுது. இதைப் பார்த்ததுமே அந்த மனுஷன் மூர்ச்சையாயி விழணும். இனிமே பெண்களையே நினைக்கக் கூடாது... அப்படி எழுது.

லீலா: அப்பாவுக்கு இது தெரிஞ்சா?

சங்: அப்பாவுக்கு எப்படி தெரியும் லீலா? இந்த விஷயம் உனக்கும் எனக்கும் மாத்திரந்தானே தெரியும்.

லீலா: நான் என்னக்கா எழுதறது?

சங்: அட என்னடியம்மா இப்படி யோசனை பண்றே? உம் இப்படி எழுதேன். என் முகமெல்லாம் கறுப்பா இருக்கு, அம்மைத் தழும்பா இருக்கு.

லீலா: அம்மைத் தழும்பா!

சங்: ஆமாம்! அது மாத்திரமல்ல, எனக்கு ஒரு கண்ணே இல்லேன்னு எழுது. இருக்கற ஒரு கண்ணிலும் பாதி குருடுன்னு எழுது...

லீலா: குருடா?

சங்: அது மாத்திரமல்ல, ஒரு கால் நொண்டின்னு எழுது.

லீலா: நொண்டியா?

சங்: அத்தோட காச வியாதியாலே கஷ்டப்படறேன்னு எழுது. இருமலாலே எளைச்சு எலும்புக் கூடுன்னு எழுது.

லீலா: இருமலா?

சங்: இதோ அட்ரஸ், இதிலே இருக்கு, சிக்கிரம் எழுது. இருமலைப் பத்தி அவசியம் எழுது, ஆண்களுக்கு இருமல்னுதான் பயம் வரும். வர்ரேன் லீலா.

சிவதாஸ்: மோசம் இந்த டாக்டர். கைலாஸ்-தம்பதிக்கு பிரயோஜனம் இல்லே. மாசமானல் மூன்னூறு ருபாய்க்கு பில் அனுப்பருன். என் மகள் சந்திராவுக்கு இருமல் இருக்குன்னு கண்டுபிடிக்கத் தெரியல்லே...

சிவ. மனைவி: அந்த டாக்டர் கைலாஸ் எங்கே வெளியூர் போயிருக்காரும்.

சிவ: போறதுக்கு முந்தி பத்து பாட்டில் மருந்து அனுப்பிட்டு போறத்துக்கு என்னவாம்? (அவர் சந்திராவைப் பார்த்தபடி) என்னம்மா சந்திரா! உனக்கு இருமலாம்மா...?

சங்: எனக்கில்லெப்பா! லீலாவுக்கு.

சிவ: அதிருக்கட்டும், அந்த லெட்டருக்கு பதில் எழுதியாச்சாம்மா...?

சங்: எழுதிட்டேம்மா. ஆனல் இன்னும் தபால்லெ போடல்லே.

சிவ: எங்கேம்மா அது? என்ன எழுதியிருக்கேன்னு பார்க்கலாம்.

சி. மனைவி: என்னங்க இது..? அந்தக்காலத்திலே நீங்க எனக்கு எழுதின கடிதங்களை வேறு யாருக்காவது காண்பிச்சிருப்பீங்களா?

(102-ம் பக்கம் பார்க்க)

ப்ளாஸா டாக்கீஸ்

சென்னையின் புதிய சினிமா கொட்டகை

பட உலகில் மந்தநிலை என்று பலரும் கூறுகிறார்கள். ஆனால் படத் தொழிலில் பணம் புழங்கிக் கொண்டுதான் இருக்கிறது. படத் தயாரிப்பின் போது செலவு ஏராளமாக ஆகிறது. அதைத் திருப்பி எடுக்க பட முதலாளிகளால் முடியவில்லை. ஏன்? ஒரே சமயம் பல தியேட்டர்களில் படத்தை திரையிடுவதும், சரியான— ஜனப் புழக்கமில்லாத இடங்களில் திரையிடுவதும் தான். சென்னை நகரத்திலே ஸ்டுடியோக்களைப் போல தியேட்டர்களும் நிறைய அவ்வப்போது கட்டப்பட்டுதான் வருகின்றன. சமீபத்தில் தியேட்டர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வந்தாலும் அந்தந்தப் பேட்டைக்காரர்களுக்குத்தான் வசதியளிப்பதாயிருந்தன. ஒன்றிரண்டுதான் முக்கிய இடங்களில் கட்டப் பட்டிருக்கின்றன.

சென்னை நகரின் இதய பீடமாக விளங்கும் மவுண்ட்ரோடில் போஸ்டாபீஸுக்கு எதிரிலும், காஸ்மோபாலிடன் கிளப்புக்குப் பக்கத்திலும் இப்பொழுது சகல வசதிகளுடன் கூடிய ஒரு தியேட்டர் கட்டப்பட்டிருக்கிறது. ப்ளாஸா என்ற பெயருடைய அந்தத் தியேட்டர் இருக்குமிடத்தில்தான் பிரபல வைரம் செட்டியாரின் நாடகங்கள் நடந்தன. சுகுண விலாச சபை அங்குதான் இயங்கி வந்தது. இப்போது அந்த இடத்தில்தான் ப்ளாஸா தியேட்டர் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

ப்ளாஸா டாக்கீஸ் சென்ற ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டது. பிரபல நடிகை பானுமதி இதை அன்று திறந்து வைத்தார். அன்றைய தினம் அவரது முப்பாஷைப் படமான சண்டிராணியின் தமிழ்ப் பதிப்பு அந்தத் தியேட்டரில் திரையிடப்பட்டது. அவரே கதை எழுதி, நடித்து, டைரக்டும் செய்த அந்தப் படம் அவரது ஸ்டுடியோவிலேயே தயாரிக்கப்பட்டது. அத்துடன் தியேட்டர், படம் இரண்டின் ஆரம்ப விழாக்களையும் அவரே நடத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது.

ப்ளாஸா என்ற எழுத்துக்கள் பொறித்த பலகைகளைத் தாண்டி, இருபுறமும் கிராதிகளும் செடிகளும் சுவராக விளங்கும் சுமார் 10 அடி அகலம் கொண்ட பாதையில் ஐம்பது, அறுபது அடி சென்று இடது புறம் திரும்பினால் தியேட்டர் ஜம்மென்று

வெளித்தோற்றம்

நிற்கும். சுற்றுப்புறம் எல்லாம் குளு குளு வென்றிருக்கும். உள்ளேயும் அப்படித்தான்.



வெள்ளித்திரை

நரசராவ் பேட்டை ஜமீன்தார் ஆர். கொண்டல்ராவும் மற்றும் சில பாகஸ்தர்களும் இதன் முதலாளிகள். சென்னையின் மிகப் பிரபல தியேட்டர்கள் சிலவற்றில் மேனேஜராகப் பணியாற்றி மிக்க அனுபவம்பெற்ற டி.வி. நாகராஜன் தற்போது ப்ளாஸாவின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்து வருகிறார். குறிப்பிட்ட பாஷைப் படம்தான் வெளியிடவேண்டும் என்றில்லாது தமிழ், ஹிந்தி எதுவானாலும் திரையிடுவது என்று இருப்பதிலிருந்து அவர் ஒரு 'பிஸினஸ் காரர்' என்று தெரிகிறதல்லவா?

புதிய வெஸ்ட்ரிக்ஸ் புரொஜக்டர்கள் பொருத்தப்பட்ட இத்தியேட்டரில் 864 பேர் வசதியாக உட்கார்ந்து படம் பார்க்க முடியும். எல்லா வகுப்புக்களுக்கும் நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன.



திரையிலிருந்து

வசதியான புது தியேட்டர். புதுப் படங்கள் திரையிடப்படுகின்றன. சென்னையின் இதயபீடத்தில் இருக்கிறது. இன்னும் என்ன? உங்கள் பாடு குஷிதான் போங்கள்!

ந. வரதராஜன், திருவனந்தபுரம்

பெண்களின் மனது ஆண்களுடையதை விட தூய்மையானது என்று சொல்லுகிறார்களே, அது எப்படி?

அவர்கள் அடிக்கடி மனதை மாற்றிக் கொள்வதால் இருக்கலாம்!

தண்ணீருக்கு மதிப்பு கிடையாதா?

பெண்களின் கண்ணீரின் முன் சாம்ராஜ்யங்களே சரிந்து விழுந்திருக்கின்றனவே!

ரஸிகர்கள், டைரக்டர்கள், நடிகர்கள் இவர்களில் ஒரு படம் வெற்றிகரமாகஓட யார் முக்கியம்?

முக்காலியில் எந்தக் கால் மிக முக்கியமானது?

மா. ர. சுந்தரம், வந்தவாசி

ஒருவனை புத்திசாலி என்று எப்படிச் சொல்லலாம்?

பிறர் சொல்வதற்கு முன்தானே தன் வாயை மூடிக்கொள்வதால்!

மட்டமான படங்களினால் என்ன உபயோகம்?

படத் தொழிலின் தரத்தை அளக்க அவை ஒரு மட்டப் பலகையாக உபயோகப்படுகிறதே!

ஜெமினியின் ஹிந்திப்படத்தில் மதுபாலா நடிப்பது உண்மை தானா?

ஆம்.

வே. முருகையா, கந்தாணை

வாழ்க்கை என்பதற்கு விளக்கம் கூற முடியுமா?

கணவன், மனைவி இருவருக்கும் பாதி பாதி சொந்தமானது. அதாவது வாழ்க்கையில் பாதி கணவன்மார்கள், தங்கள் மனைவி சொல்வதை ஒப்புக் கொள்வதில் சரியாகி விடுகிறது; மீதி பாதி கணவன்மார்கள் சொல்வதை மனைவி மறுப்பதன் மூலம் ஈடு செய்யப்பட்டு விடுகிறது!

பெண்களிடையே உள்ள அலாதியான குணம் என்ன?

தாங்களாகவே சுதந்திரம் எடுத்துக் கொண்டு விடுவதுதான்!

அப்துல் மஜீத், யாழ்ப்பாணம்

சினிமா இசைத் தட்டுகள் டப்பா சங்கீதம்; தலைவேதனையை உண்டு பண்ணுகின்றன என்றெல்லாம் சில இந்தியப் பத்திரிகைகள் எழுதுகின்றனவே. ஆனால் ரேடியோ நிலையத்தில் அவை தொடர்ந்து ஒலிபரப்பப் படுவதைக் கேட்டும் கூட எங்களுக்குத் தலைவலி வரவில்லையே. காரணம் என்ன?

"குறிப்பிட்ட இந்த ரேடியோ நிலையத்தில் சினிமாப் பாட்டுக்களுக்கு இடையிடையே தலைவலி மாத்திரைகள் சிலவும் விளம்பரப் படுத்தப் படுவதால் ரஸிகர்கள் தப்பிக்கிறார்கள்" என்று இந்த சில 'இந்தியப் பத்திரிகைகள்' விளக்கம் தரலாமல்லவா?

அழகான பெண்களைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ஆண்களின் முதல் எதிரி!

கோவிந்தராஜன், மணப்பாறை

தமிழ்ப்படவுலகின் சிறந்த நடிகர் அல்லது மட்டமான நடிகர் யார் என்பதை நீங்கள் அவசியம் சொல்லித்தான் ஆகவேண்டும்?

சிறந்த நடிகர் யார் என்பதை நான் சொன்னால் மற்றவர்கள் பொறாமைப்

படலாம்; மட்டமான நடிகரைக் குறிப்பிட்டாலோ அவர் வருத்தப்படலாம். ஆகவே என்னை என்ன செய்யச் சொல்கிறீர்?

நமது திரைப்படவுலகின் 'ஆல் ரவுண்ட்' நடிகர்கள் யார்?

நடிகர்களில் புளிமூட்டை; பெண்களில் அங்கமுத்து!

நடிகைகளின் புன்சிரிப்புக்கும், அரசியல் வாதிகளின் குறு நகைக்கும் என்ன வித்தியாசம்?

ஒரு ஆங்கிலக் கம்பெனியின் 'லிப்ஸ்டிக்' மட்டும்தான்!

ராமச்சந்தர், பெங்களூர்

'பேசும் படம்' பத்திரிகைக்கு என் நண்பர்கள் எல்லோரையும் சந்தாதாராகச் சேரும்படிச் சொல்லிவிட்டேன். இதனால் உங்களுக்கு நன்மைதானே?

எனக்கு இருக்கட்டும். முதலில் உமது பிரதி ஓசிக்குப் போகாமல், கிழியாம லிருக்குமல்லவா? அது யாருக்கு நல்லது? நீர் நல்ல தந்திர சாலிதானய்யா!

மௌனம் என்பது என்ன?

காதலின் முதல் பேச்சு!

நாகரிகம் வர வர எப்படியிருக்கிறது?

பழமைக்குப் புது மெருகு பூசப்பட்டிருப்பது நன்கு தெரிந்து வருகிறது.

வி. கண்ணப்பன், ராயவரம்

பார்க்குகளில் ரேடியோ வைத்திருக்கிறார்களே. பெரும்பாலான ரஸிகர்கள் ரேடியோவைக் கேட்பதாகத் தெரியவில்லை. அதனால் என்ன பிரயோசனம்?

ரேடியோ போடும் இரைச்சலில் அவர்கள் பேசிக் கொள்ளுவது பிறருக்குக் கேட்காமலிருப்பது பெரிய நன்மையாயிற்றே!

படித்த பெண்களின் முக்கிய பொழுது போக்கு எது?

கணவன்மார்களின் அந்தரங்க டைரியைப் படிப்பது!

கே. ஜெகந்நாதன், இலங்கை

காதல் படத்தில் பானுமதி பாடியிருப்பது சொந்தக் குரலிலா?

சொந்தக் குரலில்தான்.

என். மாரியப்பன், பல்லூர்ப்பேட்டை

சில நடிகர்கள் கணவனும் மனைவியுமாக ஒரு படத்தில் நடிப்பதும் மற்றொன்றில் சகோதரனும்-சகோதரியுமாகத் தோன்றுவதற்கும் காரணம் என்ன?

கணவன்-மனைவி வேஷம் போட்டு சண்டை போட்டுக் கொள்வதை திரையுலகில் தவிர்ப்பதற்காக இருக்கலாம்!

ஜி. உலகநாதன், தச்சநல்லூர்

நாகிரெட்டியும் சக்ரபாணியும் சகோதரர்களா அல்லது பங்குதாரர்களா?

இரண்டுமில்லை. படவுலகின் இரண்டாவது இரட்டையர்களான அவர்கள் முதல்தரப் படத் தயாரிப்பாளர்கள்!

கே. எம். சக்ரபாணி, திருத்தணிகை

'பேசும் பட'த்தில் விளம்பரப்படுத்தப்படும் பி. ஏ. ராஜூ செட்டியாரின் விளம்பரத்தில் காணப்படுவது எம். எஸ். சரோஜினி என்று நான் கூறுகிறேன். என் நண்பர் அவர் எஸ். வரலக்ஷ்மி என்கிறார். எது சரி?

உங்களை விட உங்கள் நண்பர் புத்திசாலி!

ராமநாதன், சென்னை

......படக் கம்பெனிக்கு ....நடிகையைப் பார்க்கச் சென்றிருந்தேன். அந்தக் கம்பெனியின் வாயில் காப்போன் என் மீது எப்படி எரிந்து விழுந்தான் தெரியுமா?

நீங்கள் அந்தக் கம்பெனியின் மானேஜரைப் பார்க்கவில்லையெனத் தெரிகிறது. பார்த்திருந்தால் வாயில் காப்போனே தேவலை என்ற அபிப்பிராயம் உமக்கு இருந்திருக்கும். பாவம், வாயில்காப்போன் துரதிருஷ்டசாலி!

மறதிக்கு முக்கிய ஆதாரம் என்ன?

வாங்கிய கடனைக்கொடுக்க மறந்துவிடுவதிலிருந்து ஒருவரது பொருளா

தாரம்தான் இதற்கு முக்கிய காரண மாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மனிதனின் முதல் எதிரி யார்?

அவனேதான்! சுயநலமே அவனைக் கொன்றுவிடுகிறது.

சொல்வது எளிது: செய்வது கடினம் என்கிறார்களே. எப்படி?

விளம்பரம் போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, பணத்தைக் கொடுக்காமல் சில பட முதலாளிகள் ஏமாற்றுவதிலிருந்து இந்த பழமொழி சரிதான் என்று நினைக்கத் தோன்றுகிறது.

வறுமை எப்பொழுது தொலையும்?

ஏழை பணத்தைப் பார்க்கமாட்டான்; பணக்காரன் ஏழையைப் பார்க்கமாட்டான். இந்த நிலைமை தலைகீழாக என்று மாறுமோ அன்றே வறுமைக்கு வலுவான எதிரி உண்டாகிவிடும்!

கண்ணன், போரூர்

நமது நடிகை, நடிகர்கள் மந்திரிகளாக வந்து விட்டால் நிலைமை எப்படியிருக்கும்?

அரசியல் அவியலாகிவிடும்!

எல். சிக்கலிங்கய்யா, கொள்ளேகாலம்

குமாரி ருகமணியும், ஒய். வி. ராவும் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

படவுலகில் நுழைவதற்குப் புது வழியை ஆலோசித்து வருகிறார்கள்.

அலை ஓசை, நாகப்பட்டினம்

நீங்கள் ஜெமினி ஔவையாரைப் புகழ்வதன் மூலம் வாஸனை காக்காய்ப் பிடிக்கிறீர் என்று எண்ணுகிறேன். நீர் என்ன சொல்கிறீர்?

இந்தப் பாவிகள் உலகில் உண்மையும் சில சமயம் பொய்யாகிவிடும் என்பதற்கு உமது சந்தேகம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது!

ஏ. கே. ஜி. சாமி, இராணுவஸ்தன்

அறிவுப் பசி அதிகம் எனக்கு, அதைப் போக்க என்ன வழி?

உமது அறிவுப் பசியின் ஆரம்பமே தவறான பாதையில் சுழல்கிறதே! அதை முதலில் சரிப்படுத்திக் கொள்ளும்.

என். எ. எஸ்., கோட்டக்குப்பம்

தற்போது முன்னணியில் நிற்கும் நடிகை யார்?

தோல்விப் பாதையிலா, வெற்றிப் பாதையிலா என்பதை விளக்கவில்லையே!

ரஸிகன் ஏன் வெளிவருவதில்லை?

கலைஞர்களிடையே கஞ்சத்தனம் குடிபுகுந்து கொண்டுவிட்டதால்!

எஸ். என். ராஜூ, வேப்பேரி

ஜெமினியின் கட்டபொம்மனில் சிவாஜி கணேசன் நடிப்பது உண்மையா?

நடிகர் தேர்தலே அதற்கு இன்னும் ஆரம்பமாகவில்லையே!

எஸ். வேலு ஆசாரி, கொழும்பு

ஔவையார் படப் பாட்டுகள் தனி ரிகார்டுகளாக வெளியிடப்படுமா?

வெளியிடப்படும் என்று நினைக்கிறேன்.

கே. ஆனந்தராவ், பெஜவாடா

ஔவைக்குப் பின் கே. பி. சுந்தராம்பாளை வேறு எந்தப் படத்தில் பார்க்கலாம்?

புகைப்படமாக பத்திரிகைகளில் வரும் படங்களில் அவரைப் பார்க்கலாம்!

டி. எஸ். ராஜாராவ், மதுரை

நாடக அனுபவமில்லாத நடிகர் நடிகையர் பெயர்களைத் தெரிவிக்க முடியுமா?

இதைவிட நடிக்கத் தெரிந்த நடிகர்கள் யார் யார் என்பதைக் கேட்டிருந்தால் சுருக்கமாகப் பதில் கொடுத்திருக்க முடியும்!

ராமகிருஷ்ணன், திண்டுக்கல்

உலகில் பெண்களே இல்லாவிட்டால் எப்படியிருக்கும்?

நாமும் இருந்திருக்க மாட்டோம்!

சத்தியம் என்பது என்ன?

தற்போது கடைச் சரக்காகிவிட்ட ஒரு பொருள்!

நீதி என்பது என்ன ?

சட்டங்களின் முடிவு !

சங்கரன், திண்டிவனம்

வெளிவரும் தமிழ் சினிமாப் படங்களிலெல்லாம் பெரும்பாலான பாட்டுக்கள் ஹிந்தி மெட்டுக்களில் உள்ளனவே, ஏன்?

வேலையின்றியே கூலி கிடைத்தால் நீர் சும்மா விடுவீரோ !

டி. பி. துரை, பண்ருட்டி

ஏ. டி. சபாபதியின் முதல் இரவு என்ன வாயிற்று ?

அதற்குள் பொழுது விடிந்து விட்டது !

ஷா. மதுரை

கிருஷ்ணா பிக்சர்ஸ் விலாசத்தை தெரிவிக்க முடியுமா ?

பெயருடன். தி. நகர். சென்னை–17 என்று எழுதிப் போடும்.

ஆர். ஏ. அப்துல் ரஹ்மான், அத்திக்கடை,

சென்னை பிரதமர் ராஜாஜியின் பதவி நீடித்தால் பட முதலாளிகளுக்கு நன்மையா, தீமையா ?

பட வுலகிற்கு நன்மை !

ஆர். மீனாக்ஷி சுந்தரம், கோனேரிராஜபுரம்

தங்கள் பேசும் படப் போட்டியின் விளம்பரத்தை ஒரு தினசரியில் பார்த்தேன். இது சம்பந்தமான சகல விவரங்களையும் எனக்குத் தெரிவிக்க முடியுமா ?

இம்மாதிரி கேள்வி கேட்டு நமது நேயர்களில் பலர் எழுதி யிருக்கிறார்கள். பேசும் படப் போட்டிருக்கும், "பேசும் பட"த்திற்கும் யாதொரு விதமான சம்பந்தமும் கிடையாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வி. பி. ரங்கன், விநாயகபுரம்

ஒரு பெண் படுக்கை யறையின் பதுமை, மற்றொரு பெண் குடும்ப விளக்கு இவர்களில் நான் யாரை அதிகமாக நேசிப்பது ?

விளக்கின் வெளிச்சத்தில் தான் பதுமையை நன்றாகப் பார்க்க முடியும் !

இந்திய செய்திப் படங்களில் வட இந்திய நிகழ்ச்சிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சந்தர்ப்பம், தென் இந்திய நிகழ்ச்சிகளுக்கு அளிக்கப்படுவதில்லையே, ஏன் ?

இந்தப் புகாரை நானும் ஓரளவுக்கு ஆமோதிக்கிறேன். சர்க்கார் செய்திப் பட இலாக்காவின் கவனத்திற்கும் இதை விட்டிருக்கிறேன்.

மிஸ் ஜி. வி. எஸ். இந்திரா, நெல்லூர்

சிவாஜி கணேசனின் விலாசம் என்ன ?

44, யுனைடெட் காலனி, கோடம்பாக்கம், சென்னை – 26 என்று எழுதிப்போடும்.

டி. எ. பாலன், நாகூர்

சினிமாவில் நடிக்கும் அனைவரும் பெருத்து வருகிறார்கள். ஆனால் பிரண்ட் ராமசாமி, சாயிராம் ஆகியோர் ஏன் பெருக்கவில்லை ?

நாமும் இவர்களைப்போல் பெருக்கவில்லையே என்ற கவலையே ஒருக்கால் அவர்களது உடல் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கலாம் !

ஸ்டில் என்றால் என்ன ?

பத்திரிகைகளுக்கும் மற்றும் விளம்பர விஷயங்களுக்காக எடுக்கப்படும் ஒரு படத்தின் போட்டோதான் 'ஸ்டில்' எனப்படுவது.

இ. என். ராஜன், சென்னை

க. க.. கக் காதலிக்காக கஷாயம் சாப்பிடும் க...க. க்க் கணேசனுக்கு கல்யாணம் ஆகி விட்டதா ?

ஆ. ஆ. ஆ ஆகிவிட்டது !

எம். ஆர். வையாபுரி, வாரக்கா

என்னுடைய போட்டோவை அனுப்பினால் கலர் பண்ணி அனுப்ப முடியுமா ?

இது விஷயத்தை எங்கள் சைத்ரீகரிடம் நீங்களே எழுதிக் கேட்டுக் கொள்ளலாம். அவரது விலாசத்தை கீழே கொடுத்திருக்கிறேன். பி. எஸ். ராஜன், ஆர்டிஸ்ட், 22, அப்பு முதலி தெரு, சென்னை–4.

எஸ். கே. பால், பாளையங் கோட்டை

நர்கிஸின் விலாசம் என்ன?

நர்கிஸ் c/o ஆர். கே. ஸ்டூடியோஸ், செம்பூர், பம்பாய் என்று எழுதிப் போடும்.

தமிழ் நாட்டு நடிகைகளில் வயதில் இளையவர் யார்?

இதை நான் சொல்வதானல் பேபி சரஸ்வதிகூட என் மீது கோபித்துக் கொண்டு விடுவாளே!

ஆர். சஞ்சீவி ராவ், பூனு

படத்தில் ஒருவர் பாடுவது சொந்தக் குரலிலா அல்லது இரவல் குரலிலா என்பதை எப்படிக் கண்டு கொள்ள முடியும்?

வசனம் பேசப்படும் குரலுக்கும், பாடுபவரின் குரலுக்கும் உள்ள வித்தியாசத்தை வெகு நுணுக்கமாகக் கவனித்தால்—அதைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

தமிழில் வந்த முதல் டெக்னிகலர் படம் எது?

'ஆன்' 'தமிழ்ப்பட'மெனப் பட்டால், அது தான்!

என். ராஜரத்னம், மைசூர்

நடிகர் மகாலிங்கம் தற்போது எந்தப் படங்களில் நடித்து வருகிறார்?

ரேவதி ஸ்டூடியோவில் தயாராகி வரும் அவரது சொந்தப் படத்தில் நடிக்கிறார்.

இ. மங்களராஜன், கொழும்பு

பின்னணிப் பாடகர் ஏ. எம். ராஜாவின் விலாசத்தைத் தெரிவிக்க முடியுமா?

C/o ஜெமினி ஸ்டுடியோஸ், சென்னை—6 என்று எழுதுங்கள்.

கே. பரமசிவன், கண்டி

சந்திரலேகாவைவிட ஔவையார் சிறந்த படமென நான் நினைக்கிறேன். என் நண்பர் மறுக்கிறார். தங்கள் அபிப்பிராயம் என்ன?

கலைநுணுக்க விஷயத்தில் சந்திரலேகா சிறந்திருந்தாலும் ஔவையார் தான் கருத்தில் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை.

பி. கே. அமீர்ஹம்ஸா, சிலோன்

அண்ணாவின் சொர்க்க வாசல் எப்பொழுது திறக்கப்படும்?

வெள்ளித் திரையில், தணிக்கைப் பத்திரம் ஓடி மறைந்ததும்!

இலங்கை வானொலியைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

விஷயத்தை விட விளம்பரம் தான் அதிகம்!

பாகவதரின் புது வாழ்வை நாம் எப்போது பார்க்கலாம்?

நியூடோனிலிருந்து விடுதலை கிடைக்கும்போது!

து. பிச்சை, மோஹூர்

சந்திரலேகாவின் குகைக் காட்சிகளையும், கொள்ளைக் கூட்டத்தினர் தங்கியிருக்கும் காட்சிகளையும் எங்கே (வெளிப்புறக் காட்சி) பிடித்தார்கள்?

ஸ்டூடியோவுக்குள், ஸெட்டுகளை ஜோடித்து!

சென்னை ஆர்ட் கல்லூரியின் விலாசமென்ன?

பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10 என்பதாகும்.

எம். சிகாமணி, குருணக்கல்

......நடிகை அம்மா வேஷங்களுக்கே தகுதியானவர் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்?

அவரது நடிப்பைப் பார்க்கும்போது, அவர் ஒரு நடிகையாக இருப்பதற்கே அருகதையற்றவர் என்று தான் நான் முடிவு செய்திருக்கிறேன்.

ஆவாரா, ஆக் போன்ற படங்கள் மேலைநாடுகளில் திரையிடப்படும்போது நம் நாட்டின் உயர்ந்த பண்பாட்டை விளக்கும் ஔவையார், மீரா போன்ற தென்னிந்தியப் படங்களை ஏன் அங்கு திரையிடக் கூடாது?

ஔவையார் மேலைநாடுகளில் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மீரா விஷயத்தை தயாரிப்பாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

"நான் ரஸித்த காட்சி"



("சினிமா பார்க்கும் போது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிருர்கள். மாய ஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன" என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிருேம். ஜனங்கள் எதை ரஸிக்கிருர்கள்; எதைப் பாராட்டுகிருர்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

*மனிதனும் மிருகமும்

கந்தசாமி ஒரு கைதி; சிறைதப்பி வந்தவன். அதையறிந்த டாக்டர் கண்ணன் அவனுக்கு அடைக்கலம் தரத் தயங்குகிருர். எதிரே ஏசுவின் சிலை. "உன்னை ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு" என்ற போதனையின் மூலம் மன்னிப்பு என்ற மாண்பினை மக்களுக்கு உணர்த்திய ஏசு மகானின் சிலை அவர் மனதை இளகச் செய்கிறது. கந்தசாமிக்கு டாக்டர் அடைக்கலம் தரும் காட்சி அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

ந. சுப்பராவ்,
கோவை.

*வஞ்சம்

நாட்டை ஆளும் மன்னன் யோக நிஷ்டையில் ஆழ்வதால் அக்ரம்ஸிங் மக்களைக் கொள்ளையடித்துச் சர்வாதிகாரியாகிருன். அவன் நண்பன் சபாபதி அவனது ரகசியக் கடிதங்களைக் கொண்டே அவனைப் பயமுறுத்தி நல்வழிப்படுத்த முயற்சிக்கிருன். முடிவு? அவனையும் கத்தியால் குத்திவிடுகிருன் அக்ரம். ஆனல் பிரதாபின் நண்பன் அவனைக் காப்பாற்றி கடிதங்கள் இருக்குமிடமும் விபரமும் அறிகிருன். தன் நண்பன் மதுவிடம் பிரதாப் கடிதங்களைக் கொடுக்கிருன். அரண்மனையில் அரசரிடம் கடிதங்களைச் சேர்க்கச் செல்லும் மதுவை சேவகர்கள் அடித்துக் குற்றுயிராக்கி விடுகின்றனர். ஆனல் உயிரைத் திரணமாக மதித்த சிறுவன் மது அரசரை அடைந்து கடிதங்களைக் கொடுத்து உயிர் துறக்கிருன். உள்ளத்தைப் பிழிந்தெடுக்கிறது இந்தக் காட்சி.

எஸ். எஸ். ராகவன்,
சென்னை.

*அழகி

பெற்ற குழந்தையை இழந்த அழகம்மாள் தன் மாற்றுந் தாய் வீட்டிற்கு வருகிருள். அங்கே பெட்டைக்கோழி தன் குஞ்சுகளைப் பேணி வளர்க்கிறது. ஆட்டுக்குட்டி தாயிடம் பால் அருந்துகிறது. பறவைகளும் விலங்குகளும் தாய்மை உணர்ச்சியால் எழும் பேரின்பத்தை அனுபவிக்கின்றன. மானிடப் பிறவியான அழகம்மாள் 'அம்மா' என்று ஆசையாகக் கூப்பிட முடியாது கொடுமைப்படுகிருள். தன்னை பெற்றவளையும் தான் பெற்றதையும் இழந்த அவள் நிலை நம் மனத்தை நெகிழச் செய்கிறது.

ஜி. பொன்னுசாமி,
சிதம்பரம்.

/ மனிதனும் மிருகமும்

பூபதி மீனுட்சியை அடையத் தீர்மானித்து விட்டான். காமவெறியில், "நீ அதிருஷ்டக்காரி, இல்லா

---

* இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

விட்டால் என் மாளிகைக்குள் வந்திருக்க முடியாது. பெண் அழகாக இருந்தால் மட்டும் போதாது, அந்த அழகுக்குக் காணிக்கை செலுத்த ஒரு அன்பன் அருகில் வேண்டாமா? நான் பசி; பால்சோறு நீ ..'' என்று ஏதேதோ உளறி அவளைத் தழுவ முயற்சிக்கிறான். ஆனால் கற்பை அழிப்பதைவிட உயிரை விடுவது மேல் என்று தீர்மானித்த மீனாட்சி, மாடியிலிருந்து விழுந்துமாளுகிறாள். தமிழ்ப் பெண்ணின் பண்பை விளக்கும் இக்காட்சி இக்கால 'நாகரிக மங்கை'களுக்கு ஒரு சவுக்கடி.

எஸ். பி. சந்திரா,
சென்னை.

மாணவர் கூட்டத்தில் பேச ஆரம்பித்த சுந்தரத்தை அழைத்துச் செல்லுகிறாள் வாணி. பிறகு பேபி பேச ஆரம்பிக்கிறான். ஆனால் பூபதியின் பிள்ளையான அவன் எதைப் பேசுவதானாலும் ஏற்க மற்றவர்கள் தயாராக இல்லை. ஆகவே உட்காரும்படிக்கூறுகிறார்கள். ''நேர்மையாகச் சொல்லுகிறேன். கூர்மையாகக் கேளுங்கள்'' என்கிறான். ''எங்கப்பா ஒரு இரணியன். நான் ஒரு பிரஹலாதன்.'' என்று கத்தியும் கூட மாணவர்கள் கல்லாலடிக்கின்றனர். ''உங்களிஷ்டப்படியே நான் உட்கார்ந்துக்கறேன். அதற்காகக் கற்களை வீணாக்க வேண்டாம்'' என்று கூறுகிறான். வேடிக்கையாக இருக்கிறது இக்காட்சி.

பி. லோகநாதன்,
மதுரை.

தன் வாழ்வு சிதைவுற்று விட்டதாகக் கூறி மாதவனிடம் தன் நகைகளை கொடுத்த வாணி சொத்துகளின் விபரங்களையும் கூறுகிறாள். ஆனால், மாதவன் அவள் உள்ளத்தின் நிலையை அறிந்தவனாய் ''வாணி! உலகத்தில் நாமும் வாழத்தான் வேண்டும்'' என்கிறான். வாணி தன்னைச் சவக்குழியில் தள்ளிக் கொள்ள முயற்சித்ததாக கூறும்போது, அண்ணா மாதவன் ''வாணி! நான் இறந்த பிறகல்லவா நீ இந்த முடிவுக்கு வரவேண்டும்?'' என்கிறான். இனி தான் உயிர் வாழ்வதில் ஒரு பலனுமில்லை யென்று வாணி சொன்னவுடன், மாதவன் ''பெண்கள் கணவனுக்காக மட்டும் வாழ்வதில்லையம்மா! சகோதரனுக்காகக் கஷ்டப்படும் ஆயிரக் கணக்கான பெண்களும் உண்டென்பதை மறந்துவிட்டாய், வாணி! இந்தக் கொடிய விஷத்தின் மீது இருக்கும் நம்பிக்கை கூட என்மீது இல்லையா?'' என்று சொல்லுகிறான். இக்காட்சி ரத்தபாசத்தையும், உண்மை அன்பையும் ஒருங்கே விளக்குகின்றது.

வி. பத்மகுமார்,
திருச்சி.

அசந்தர்ப்ப விதமாக பூந்தோட்டத்தில் தன்னை சந்தித்த வாணியிடம், மாதவன் தனது திருமண

கணவன் : ஆமா, அந்த டைரக்டர் என்ன சொல்றார்?

மனைவி : ஸ்டுடியோவுக்கு நீங்களும் என்கூட வர்ரதாயிருந்தா எனக்கு நடிப்பே வராதாம்!

"ரெண்டு மூணு படத்துலே பார்த்துட்டேன். நம்பளைத்தான் கதா பாத்திரமா எழுதியிருக்கானுங்க!"

விஷயத்தைக் கூறுகிறான். திருமணச் செய்தியையறிந்த வாணி திடுக்கிடுகிறாள். "வாணி சுந்தரத்தின் செல்வம், மகா உத்தமராகிய தாங்கள் பிறர் செல்வத்தின் மீது ஆசைப்படுவது அவசியமில்லை அண்ணா' என்று தன் உள்ளக் கருத்தைக் கூறுகிறாள். மாதவன் மனத்திலே போராட்டம். அவனுக்கு யாரோ பேசுவது போன்ற பிரமை. பிரமை தெளிந்து நிலைவெய்திய போது "வாணி, என் அவசர புத்தியை மன்னித்துவிடு. உண்மை தெரியாமல் உளறிவிட்டேன். நாம் மனிதப் பிறவிகள். தவறுகளைத் திருத்திக் கொள்ளும் தன்மை படைத்தவர்கள். வருந்தாதே வாணி! இனி நீ என் சகோதரி. எனக்கு சொந்தமில்லாத ஆனந்தத்தை உனக்காக மீண்டும் அளிக்கிறேன் சகோதரி" என்று உண்மையை உணர்ந்து கூறும் சகோதரன் பாரிஸ்டர் மாதவனின் பண்பு, மனிதத் தன்மையைத் தெளிவுற சித்தரிக்கும் ஓர் உயரிய விளக்கம்.

வே. சு. சொக்கலிங்கம்,
வேலூர்.

சுந்தரத்திற்கு கோர்ட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. அதைக் கேட்டதும் அவன் குடும்பத்தினர் துக்கக் கடலில் மூழ்கி விடுகின்றனர்.

மகனுக்கு ஆயுள் தண்டனை என்பதைக் கேட்ட தாய் அங்கேயே உயிர் விடுகிறாள். உடனே தென்னை மரத்திலிருந்து ஒரு ஓலை வெட்டி வீழ்த்தப்படுகிறது. உலகை விட்டு ஒரு உயிர் போய்விட்ட தென்பதை மரத்தைவிட்டு ஒரு ஓலை வெட்டி வீழ்த்தப்பட்டதுடன் ஒப்பிட்டிருப்பது சீரிய காட்சியாகும்.

வே. தா. கோபாலகிருஷ்ணன்,
சென்னை-2.

மாதவன் வாணியின் மனதை அறியாமல், தாத்தாவின் வார்த்தைக் கிணங்கி, அவளை விவாகம் செய்து கொள்ள விரும்புகிறான். பிறகு அவளை தனியாக சந்தித்துப் பேசுகையில், வாணி சுந்தரத்தை நேசிக்கிறாள் என்பதை தெரிந்து கொண்டதும், 'எனக்கு உரிமையில்லாத இந்த அன்பை உனக்கே திருப்பி அளிக்கிறேன்' என்று கூறி அந்நிகழ்ச்சியை அத்துடன் மறக்கிறான். என்றாலும் அவன் மனம் படும் வேதனை, சிந்தனையலைகளை, அவன் முக பாவத்திலிருந்து நம்மால் அறிய முடிகிறது. மனச்சாட்சி, 'பெண் இன்பம் வேண்டுமா அமர வாழ்வு வேண்டுமா?' என்று வினவுகையில், அவன் உள்ளப் போராட்டத்தை, அவன் முகத்தில் கண்டு வியக்கிறோம். முகத்தில் வியர்வை தோன்ற, கண்ணீர் துளிகள் சிதற, மாது தன் முகத்தில் புதிய ஒளிவீச, மனிதனாக அமர வாழ்வு பெறத் தீர்மானித்து, தான் விரும்பிய பெண்ணை தியாகம் செய்கிறான். இக்காட்சி என்னால் என்றும் மறக்க முடியாதது.

ஆர். பாலு,
சென்னை-4.

காலேஜ் பிரின்ஸிபால் சேகர் பணத்துக்கோ, பகைக்கோ பயப்படாதவர். அடாது செய்ய மறுத்த அவர் தன் வேலையையே ராஜினமா செய்தும் விடுகிருர். அத்தோடு நில்லாமல் 'நெஞ்சில் உரமும் இன்றி' என்று சந்தோஷமாகப் பாடவும் செய்கிருர். இந்தப் பண்பாடு தமிழர்களின் பெருமையை நன்கு விளக்குகிறது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் நேர்மையை அசைக்க முடியாது என்பதை அறிவுறுத்துகிறது இக்காட்சி

டி. இராஜேஸ்வரி
சிதம்பரம்.

சுந்தரத்தை விடுதலை செய்து அவனுக்கே வாணியை மணமுடிக்கத் தீர்மானிக்கிருன் மாதவன். ஆனல் வாணி விஷமருந்தி மாள முயற்சிப்பதை யறிந்தபோது அவன் மனம் நெகிழுகிறது. "நீ விஷத்திடம் வைத்த நம்பிக்கைகூட என்னிடம் வைக்க வில்லையே? உங்கள் பிரிவால் நான் பைத்தியமாக அலையவேண்டுமா?" என்று மனமுருகிக் கூறுகிருன். அவனுடைய நேர்மையும் சகோதர வாஞ்சையும் நம் உள்ளத்தை உருக்குகின்றன.

எஸ். செங்கமலம்,
கரூர்.

பிரின்ஸிபால் சேகர் மனைவியையும் இழந்து மகன் சிறை சென்றதையும் கண்டு பைத்தியமாகி விடுகிருர். மனநோய் விடுதியிலே அவரை வாணியும் மாதவனும் சந்திக்கின்றனர். வாணியின் கைகளைப் பிடித்துக் கொண்டு 'வாணி-சுந்தரம் மேரியேஜ்' என்று கூறிச் சிரிக்கிருர். அவள் கண்ணிலே கண்ணீருடன் துடிக்கிருள். அவர் சிரிப்பது கண்டு நாமும் துடிக்கிரேம். உள்ளத்துணர்ச்சியைத் தூண்டிவிடும் உயரிய காட்சி இது.

எம். பி. மூர்த்தி,
பாளையங்கோட்டை.

குற்றவாளிக் கூண்டிலே சுந்தரம் நிற்கிருன். கோர்ட்டிலே சுந்தரின் தாய், தகப்பனர் சேகர், வாணி, வக்கீல் மாதவன் ஆகியோர் நிற்கின்றனர். தீர்ப்பு படிக்கிருர் நீதிபதி. சுந்தரம் குற்றவாளி என்று அவர் தீர்ப்பு கூறியதும் பெற்ற தாயின் இருதயம் நின்றுவிடுகிறது. நீதிஸ்தலத்தில் ஏற்பட்ட அநீதியைத் தாங்கும் சக்தியில்லாத அவள் மரணமடைகிருள்; வாணி துடிக்கிருள்; மாதவன் மனமுருகி நிற்கிருன்; சேகர் பைத்தியமாகி விடுகிருர். இந்தக் காட்சி நம்மைக் கலக்கி விடுகிறது.

சி. கே. டேவிட்,
மதுரை.

சுந்தரத்தை அடைவதில் நம்பிக்கை யிழந்த வாணி தற்கொலை செய்து கொள்ள முயற்சித்து, தன் சகல சொத்துக்களையும் ஏழைகளின் வாழ்வு வளம்பெறச் செலவிடும்படி கேட்டுக்கொள்ளுகிருள். ஏமாற்றம் காரணமாக அவசரப்பட்டு தற்கொலை செய்து கொள்வதைவிட நேர்மைக்கும் சத்தியத்திற்கும் போராடுவதுதான் சிறந்தது என்பதை எடுத்துக்கூறி வாணியின் மனதை மாற்றுகிருன் மாதவன். அவசர புத்திக்காரர்களுக்கு நல்வழி காட்டும் சீரிய காட்சி இது.

பாவாஜி ஷேக்தாவூது,
பண்டாரவாடை.

மாதவனின் காலை ஒடித்து விடுகிருன் சாமி என்கிற சண்டாளன். அப்போது அவனை வேலைக்காரன் தடுத்து அடிக்கப் போகிருன். ஆனல் சாமியை அடிக்க வேண்டாமென்று தன் வேலைக்காரனிடம் கூறி அத்துடன், "நீ யாரப்பா? உனக்கு என்ன தீங்குசெய்தேன்?" என்று மாதவன் கேட்கும் போது நமக்கு மாதவனிடம் ஒரு அலாதி மதிப்பு ஏற்படுகிறது. மன்னிக்கும் சுபாவமுள்ளவனே மனிதன் என்பதை அழகாகச் சித்தரிக்கிறது இக்காட்சி.

ஆர். நாராயணசாமி,
வேலூர்.

நீதிமன்றம்! சத்தியத்தை நிலைநாட்ட முடியாத அந்தக் கட்டிடம் சட்டத்தின் பெயரால் சதிகாரர்களின் பாசறையாகி விடுகிறது. நிரபராதியான சுந்தரம் கூண்டிலே நிற்கிருன். தீர்ப்பு நேர்மையற்றவனுக்குச் சார்பாகத்தான் இருந்தது

டைரக்டர்: ஏம்மா, வெட்கப்படற மாதிரி நடிக்கறதுக்கே வெட்கப் படறியே, எப்படியாறது?"

பெற்றவள் பிணமானுள்; பெற்றவன் பித்தனுனுன்; நண்பன் நச்சரவமாகத் தோன்றினுன்; காதலித்தவள் காமாந்தகாரியாகத் தோன்றினுள். இந்த நிலையிலே சிறைத் தண்டனைப் பெற்ற சுந்தரத்தின் மனுேநிலை தடுமாறியதைக் கூறவும் வேண்டுமா? ஒரு அரிய காட்சி இது.

ஆர். ஆர். சரோஜா,
காஞ்சிபுரம்.

பேபி ஒரு கோமாளி. இரண்டுங் கெட்டான் என்பார்களே அதைப் போல. அவனுக்கு வாணியை மணமுடிக்கத்திர்மானித்து வாணியின் தாத்தாவிடம் அழைத்துச் செல்கிருன் பூபதி. அவன் இட்லி கவி கட்டியவன். ''நானறிந்த உணவுகளில் இட்லியைப்போல் இனிதாவ தெங்கும் காணேம்! நாமமது ஸ்வீட் என்று நம்மை ஏய்த்து நாக்குகளை அறுப்பதால் என்னலாபம்? க்ஷேம முற சாப்பாடு செழிக்க வேண்டில் சேர்ந்தெல்லாம் இட்லிகளை ஆதரிப்போம்'' என்று பாடுகிருன். அத்துடனு? பரீட்சையைப் பற்றியும் அவன் அபிப்பிராயம் என்ன தெரியுமா? கணக்குப் பேப்பர் அன்று கண்வலி; சயின்ஸ் அன்று ஜலதோஷம்; தமிழ் அன்று தலைவலி. இந்தப் பரீக்ஷை என்ற பிசாசு ஒழிந்தால்தான் பாஸ் பண்ண முடியும் என்று ஆணித்தரமாகக் கூறும் அவனை வாழ்த்த ஆயிரமாயிரம் மாணவர்கள் இருக்கிருர்கள்! கவலையை மறந்து சிரிக்க இந்தக் காட்சி உதவுகிறது.

எஸ். வி. ராகவன்,
பம்பாய்.

சுந்தரம் ஒரு ஏழை. வாணி அவனைக் காதலிக்கிருள். ''வாணி! வானத்து நட்சத்திரம் எங்கே, மலைக்குகையின் இருட்டு எங்கே? இதோபார், வறுமைக் குடிசையில் விளக்கேற்ற உதய சூரியன் தேவையில்லை. சின்ன அகல் விளக்கே போதும். நான் வெறுங்கோயில்; நீ வானத்து முழுநிலா.'' என்று கூறுகிருன். ஆனுல் காதலைவிட பணம் பெரிதல்ல என்ற மனுேபாவமுள்ள வாணி இருவரையும் வானப் பருவ மழைக்கு உபமானம் காட்டி அவன் உள்ளங் குளிர்விக்கிருள்.

டி. எஸ். ஆர். சாமி,
கோவை.

டாக்டரிடம் வந்து பூபதியை டிஸ்சார்ஜ் செய்யும்படிக் கேட்கிருர் ராமானுஜம். ஆனுல் தவறு செய்ய விரும்பாத டாக்டர் ''நீங்கள் வாதாடும் வக்கீல்கள். நாங்கள் உயிர்காக்கும் டாக்டர்கள்'' என்று கூறி பூபதியை அனுப்ப மறுக்கிருர். நேர்மையுடன் நடக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துகிறது இக்காட்சி

பி. பி. சு. சுப்பிரமணியம்,
காரைக்குடி.

வஞ்சம்

தன் வாழ்வைக் காட்டிலும் தங்கை லக்ஷ்மியின் வாழ்வுதான் முக்கியம் என்று கருதும் பிரதாப் அவளுக்காகப் பொருள் சேகரிக்கிருன். ஆனுல் அக்ரமக்காரனுன அக்ரம் அதற்குள் லக்ஷ்மியைக் கற்பழித்து விடுகிருன். லக்ஷ்மி தற்கொலை செய்து கொள்ளுகிருள். உயிர் பிரியுமுன் அவளைக்கண்டு துடிக்கும் பிரதாபிடம், ''அண்ணு! சண்டாளன் கெடுத்து விட்டான்... பணக்காரன்.. பாம்புபோல் மார்பில் பச்சை'' என்று அடையாளம் கூறுகிருள். அந்த அடையாளக்காரனை

வஞ்சம் தீர்க்கத் தீர்மானிக்கிறான் பிரதாப். இக்காட்சி யாவரது உள்ளங்களிலேயும் உணர்ச்சி அலைகளை எழுப்புகிறது.

வே. பா. ஸ்ரீனிவாசன,
சென்னை.

சிங்கத்துக் குகையிலே சிறு நரி போல் அக்ரமின் அரண்மனையில் அடைபட்டாலும் லக்ஷ்மி, தன்னைக் கற்பழிக்க வரும் அக்ரமிடம் பெண்களின் கற்பு பற்றிக்கூறி வாதாடுவது தமிழ்ப் பெண்களின் மாண்பை விளக்குகிறது.

ஏ. கே. ராஜாமணி,
மாயூரம்.

நாட்டின் நலனுக்காக, உண்மையைக் காப்பதற்காக அக்ரமத்தை அழிக்க கங்கணம் கட்டிக் கொள்கிறான் மது. அரண்மனையில் புகுந்து அக்ரம சிங்கின் அக்ரம ஏடுகளை அரசனுக்குக் காண்பிக்க ஆவலாய் ஓடுகிறான். ஆனால் அவன் அரண்மனையில் பிடிபட்டுவிடுகிறான். இருந்தாலும் முயற்சி செய்து குற்றுயிராயிருக்கும் போது அரசனைக் கண்டுவிட்டான். அவரிடம் "நாட்டைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்ற வேண்டாம்" எனக்கூறி மடிகிறான் மது. உத்தமனுக்கு இம்மாதிரி முடிவா என்று ஏங்குகிறது நம் உள்ளம்,

கே. வி. கிருஷ்ணையன்,
அய்யம்பேட்டை.

அழகி

நடராஜனை நம்பிய அழகம்மா பின்பு அவனாலேயே வெறுக்கப்படுகிறாள். வண்டு மலருக்கு மலர் தாவினாலும் மலர் என்ன செய்ய முடியும்? அம்மலரைக் காப்பாற்றுகிறார் டாக்டர். காதலியாக இருந்து பணிப்பெண்ணாகி அதுவும்போய் டாக்டரால் ஆதரிக்கப்படுகிறாள் அழகி. நடராஜன் செய்வினையால் பார்வை யிழந்தபோது, நடக்க முடியாதிருந்துங்கூட அவனுக்குப் பணி செய்யத் துணிகிறாள். அந்தக் காட்சியில் நாம், வைர நெஞ்சம் படைத்தவர்களானாலும் கூட, கண்ணீர் விடத்தான் செய்கிறோம்.

வி. ஜெயராமன்,
கோயமுத்தூர்.

அழகம்மாள் ஒரு அழகி. பருவத்தின் பூரிப்பால் பதுமையைப் போன்றிருந்த அவளை நடராஜனின் கண்கள் கண்டு விட்டன. வேலைக்கு இரவு நேரத்தில் அவள் தகப்பனாரை மில்லுக்கு அனுப்பி விட்டு, அழகியை அனுபவிக்க அர்த்தராத்திரியில் போகிறான் காமாந்தகன் நடராஜன். வலையிலே மீன் சிக்கிற்று. சத்தியம் செய்து சடுதியிலே சென்றான் சதிகாரன். அன்பளிப்பு ஒரு சிசு. அவன் அவளை வாழவிடாத காரணத்தால், கண்ணிருந்தும் குருடனாய் இருந்ததால், கண்பார்வையையே இழந்து விட்டான். ஆனால் அழகி பின் வாங்கினாளா? தொட்டவனைத் தொட்டு அவனுக்குப் பணி செய்தாள். கலிகால தெய்வம் கண் மூடியல்ல என்பதை விளக்கும் இக்காட்சி மிகச் சிறந்ததாகும். அதே சமயம் பெண்களின் பெரும் பண்பையும் கடமையையும் அறிவிக்கிறது இக்காட்சி.

ஏ. எஸ். வீரராகவன்,
செங்கற்பட்டு.

"யாராவது நடந்து நம்பவூட்டுக்கு வந்தா இது குலைக்குதுங்க! காரிலே வந்து எறங்கினா வாலையாட்டிக்கிட்டு குழையுதுங்க. இஸ்டார் வூட்லே பழகின குட்டி போலிருக்குது."

மூக்கு கண்ணாடி: 'நாட்டு யானைகள்'னு ஒரு படம் பிடிக்கிறாங்களாம்.

கை கெடியாரம்: அதிலே நடிக்கப் போறேங்கறீங்களா?

கண்கள்

தன் கண்கள் குருடாகிவிட்டதென்பதையறிந்த சாரதா "இனி எதையும் நான் பார்க்க முடியாதா" என்று தன் கணவனிடம் புலம்புகிறாள். இதைக்கேட்ட சகோதரனும் கணவனும் திடுக்கிடுகின்றனர். அப்பொழுது அவள் நிலைமையைக் குறித்து எரிமலை காட்டப்படுகிறது. சாரதா கதறும் போது நம் உள்ளத்தைத் திடுக்கிடும்படி உணர்ச்சி ஊட்டிப் பிறகு புயலுக்குப் பின் அமைதி போல் ஆகி விடுகிறது. இது உள்ளம் உருக்கும் உயரிய காட்சி.

இன்பதாசன்,
காரைக்கால்.

"மறு கல்யாணம் செய்து கொள்ளுங்கள்" என்று வேண்டும் சாரதாவின் வேண்டுகோளை மறுத்த கணவன் டாக்டர் ஸ்ரீதரன் தான் கொடுத்த வாக்குறுதியையும் மறந்து பேதை சாரதாவை ஏமாற்றி விட்டு காரிலேறி மறைகிறான்.

மணமுடித்த ஹேமா சாரதாவின் கால்களில் விழுந்தபோது அவளை உயரத்தூக்கியபடியே, ஹேமாவின் கழுத்தில் தொங்கும் மலர்மாலையைக் கண்டு ஒருகணம் துணுக்குறுகிறாள் சாரதா. அப்படியிருந்தும் மனதை திடமாக்கிக்கொண்டு நூறு ஆண்டு காலம் வாழும்படி ஆசீர்வதிக்கிறாள். ஸ்ரீதரன்—சாரதா மனோபாவத்தை நன்கு சித்தரிக்கின்றன இவ்விரு காக்ஷிகளும்.

டி. எஸ். மணி,
திருப்பூர்.

நால்வர்

இன்ஸ்பெக்டர், வக்கீல், தொழிலாளர் தலைவன் மூன்று பிள்ளைகளும் தாய் தந்தையரைச் சுற்றி நின்று விவாதிக்கிறார்கள். தொழிலாளிகள் கஷ்டத்தைக் குறித்துஒரு பிரசங்கம் செய்கிறான் தலைவன். "சட்டத்துக்கு விரோதமானால் நான் கட்டாயம் கடமையைச் செய்வேன்" என்று கர்ஜிக்கிறான் இன்ஸ்பெக்டர். வக்கீலோ, "நீ உன்கடமையை செய்தால் அவனை நிரபராதி என்று நிரூபிக்க வாதாடுவேன்"என்று முழங்குகிறான். சந்தடி பொறுக்காத தகப்பனார் தலையில் கை வைத்துக் கொள்கிறார். நமக்கோ அடக்க முடியாத சிரிப்பு வருகிறது.

ராஜேஸ்வரி மாத்ருபூதம்,
சென்னை–4.

மனம்போல மாங்கல்யம்

காமாக்ஷி நடேசனின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டதும் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. அவனுக்கு தான் இத்தனை நாள் தண்டபிண்டம் கொட்டியதாக அவள் நினைக்கிறாள். மகளை அவனுடன் தாராளமாகப் பழக விட்டதையும் மறந்து வீட்டை விட்டு வெளியே துரத்துகிறாள். அப்போது அவள் தம்பி அனுமந்து நடேசன்-சுந்தர் இருவரும் ஒரே மாதிரி முகஜாடையுள்ளவர்களாயிருப்பதைப் பாராட்டுகிறான். அவனைக் கோபத்தோடு கண்டபடி திட்டி அடிக்க ஓடுகிறாள். அவள் விளக்கில் அடிபட்டு கண் பார்வையை இழக்கிறாள். தன் தவறை மறைத்து தப்பிக்க முயலும் அனுமந்துவைப் பார்த்தால் நமக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வருகிறது. பரிதாபமாகவும் இருக்கிறது.

கோமளி,
சென்னை.

தபால் பெட்டி

விஷ(ம)ப் பிரசாரம்

சமீபத்தில் ஒரு சினிமா இதழில் கண்கள் விமர்சனம் பார்த்தேன். ஆந்திரர்களின் பத்திரிகையான அது, அதே மொழிவாரி நடிகர் பிரிவினையில் இறங்கி, ஆந்திர நடிகர்களைத் தவிர மற்றவர்களைக் கண்டபடி எழுதியிருப்பதால் தமிழ் மக்கள் மனம் நொந்து விட்டிருக்கிறது. பத்திரிகைகள் கட்சி, மொழி மனோபாவம் கொள்ளக் கூடாது. கண்கள் படத்தில் சிறப்புற நடித்தவர்களைக் கண்டித்து எழுதிய இந்த இதழ், மட்டமாக நடிக்கும் முக 'வெட்டு' உள்ள நடிகையைப் பற்றியும் மற்ற தமிழ்க் கொலை புரியும் ஆந்திர நடிகர்களைப் பற்றியும் பாராட்டி எழுதுகிறதே! இது விஷ(ம)ப் பிரசாரமல்லவா?

மு. புரட்சிப்பித்தன்,
மதுரை.

ஒரு வேண்டுகோள்

நடிகர்களும் நடிகைகளும் ஆதரவு பெறுவது பெரும்பாலும் இளைஞர்களிடமிருந்தே. ஆனால் அவர்கள் கடிதமெழுதினால் பதில் கூட எழுதுவதில்லை பலரும். மற்ற நாடுகளில் —ஏன், வட இந்தியாவில் கூட நடிக நடிகைகள் தங்கள் விசிறிகள் ஆதரவாளர்களின் அபிப்பிராயங்களை அறிந்து அதன்படி நடக்க முயற்சிக்கின்றன. அப்படியில்லாமல் நம்மவரில் சிலர் அலக்ஷியமாயிருந்ததனால் ஏற்பட்ட முடிவை, இன்றைய பிரபல நடிகர்கள் அறிய வேண்டும். எங்களுடன் பழகி எங்களையும் புரிந்து கொள்ள வேண்டுகிறோமே தவிர இது எச்சரிக்கையல்ல.

அறிவழகன்,
காரைக்குடி.

திரையில் பிரசாரம்

திரை மூலம் பிரசாரம் செய்வது இப்போதெல்லாம் சகஜமாகி விட்டது. படத்தயாரிப்பாளர்களும் கட்சி மனோபாவமுள்ளவர்களும் இதைக் கலையோடு சம்பந்தப்படுத்தி விடவே கட்சிகள் இரண்டிற்கும் இடையே கலை நசுங்கிக் கொண்டிருக்கிறது. டால்டா வனஸ்பதி, சன் லைட், லைப் பாய், லக்ஸ் சோப்புகள் முதலியவர்கள் தனித்தனியாகப் படம் பிடித்து பிரசாரம் செய்கிறார்கள். கட்சியாளர்களும் அம்மாதிரித் துண்டுப் படங்களைக் காட்டவேண்டுமே அல்லாது, திரை மூலம் என்பதைத் தவறாக உணர்ந்து கலை மூலம் துர்ப்பிரசாரம் செய்வது வருந்தத்தக்கது. கட்சிக்காரர்கள் அரசாங்கத்தின் அனுமதியோடு கட்சிப் பிரசாரம் செய்வதன் மூலம் கலைக்கு இடைஞ்சல் செய்யாதிருக்க முயல வேண்டும்.

பி. ஏ. ஸ்ரீநிவாஸன்,
ஆத்தூர்.

ஹாஸ்யம் எது?

தமிழர்களாகிய நாம் பாக்கியசாலிகள். தமிழ்ப் படங்களிலே சிறந்த ஹாஸ்ய நடிகர்களை நாம் சந்தித்தோம். சந்தித்தும் வருகிறோம். ஹாஸ்யம் என்பது வசனத்தால் ஏற்படுவதல்ல. அனுபவித்துச் சிரிக்கும் ஹாஸ்யம் பாவத்திலிருந்து தான் வெளிப்பட வேண்டும். என். எஸ். கிருஷ்ணன், கே. சாரங்கபாணி, எல். நாராயண ராவ், டி. ஆர். ராமச்சந்திரன் போன்ற ஹாஸ்ய நடிகர்கள் நமக்குப் பெருமை தருபவர்கள். ஆந்திர ஹாஸ்ய நடிகர்கள் வெறும் கோணங்கிகள். அவர்களது ஹாஸ்யம் சகிக்க முடியாதது. ஆபாசமான வசனத்தாலும் கோணலான செய்கைகளினாலும் நம்மை பலவந்தமாகச்

சிரிக்க வைக்க முயற்சிக்கிறார்கள் இவர்கள். ஆனால் நம் ஹாஸ்ய நடிகர்களை விட அவர்களுக்கே ஆதரவு அதிகமாக இருக்கிறது. தமிழ் நாட்டின் தலைவிதி இது!

எஸ். கல்யாணி,
திருவனந்தபுரம்.

●

பாஷைகள் படம்

வர வர நமது படங்களில் பெரும்பாலானவை பல பாஷைப் படங்களாகவே தயாராகின்றன. முன்பெல்லாம் ஒரு படம் ஒரே பாஷையில் தயாராகி பணம் பெற்ற அளவில் பாதிகூட இந்த இரண்டு பாஷைப் படங்கள் பெறுவதில்லை. ஆந்திரர்கள் ஆந்திர நடிக நடிகையரைக் கொண்டு தமிழ்ப்படம் தயாரிக்கின்றனர். அவர்கள் இரண்டு பாஷைக்கும் பொதுவான பாஷையைப் பேசிவிட்டுப் போகின்றனர்! தமிழ் நடிகர்கள் அதேபோல தெலுங்கில் மாட்லாடுகிறார்கள். கேட்பதற்குச் சகிப்பதில்லை இது. பாஷைகளில் பரிச்சயம் பெற்றவர்களையாவது தயாரிப்பாளர்கள் தேடவேண்டும்.

ஸி. வெங்கடபதி,
சென்னை.

●

கட்டுப்பாடு தேவை

தமிழர்களுக்கு ஆதரவளிக்க யாரும் முன் வருவதில்லை. ஆனால் மற்றவர்களுக்கு இந்தத் தமிழ் நாட்டிலே அமோக ஆதரவு இருந்து வருகிறது. இந்நிலை எப்படி வந்தது? தமிழ்க் கலைஞர்களைவிட மற்ற பாஷைக் கலைஞர்களிடம் அதிக பரிவு காட்டுகின்றனர் முதலாளிகள். தமிழ்க் கலைஞர்களை அம்மாதிரி ஆந்திர முதலாளிகள் மதிக்கிறார்களா? அதுதான் இல்லை. அவர்கள் தயாரிக்கும் தமிழ்ப் படங்களில் கூட ஆந்திரர்கள் – அதுவும் அடியோடு தமிழ் தெரியாதவர் – தான் நடிப்பார்கள். முதலில் வாயசைப்பார்கள், பிறகு அதற்குக் குரல்தானம் – அதுவும் ஆந்திரரால்தான் நடக்கும்! அவர்களது அசட்டுத்தனம் எல்லாம் ஹாஸ்யம் என்று கருதப்படும். இந்த நிலை இருக்கும்வரை தமிழ் நடிகர்கள் முன்னணிக்கு வர சந்தர்ப்பம் ஏது?

தமிழிளைஞன்,
அண்ணாமலை நகர்.

●

ஒழுக்கம் வேண்டும்

பட உலகைப்பற்றி அறிஞர்கள் கூறுவது கேட்டால் கலைஞர்களுக்கு ஆத்திரம்தான் வருகிறது. ஆனால் தவறு யாருடையது? அறிஞர்களுக்கு அவசியமான தெல்லாம் நேர்மையும் நியாயமும்தான். அதில்லாத இடங்களைப்பற்றி கண்டிக்க அவர்கள் முற்படத்தான் செய்வார்கள். கலையிலே இன்று ஒழுக்கம் குறைந்துதான் இருக்கிறது. 'கன்னி' நடிகைகளுக்கு கனிபோல் குழந்தைகள் இருக்கின்றன. கலையுலகின் பொதுச் சொத்து என்ற பெயருடன் சீரழியாமல் ஒழுக்கத்தின் மூலம் கலைக்கு உயர்வளிக்க முயலுங்கள். உங்கள் குறிக்கோள் அதுவானால் கலையுலகம் நேர்மைப் பாதையில் போகும். அறிஞரின் ஆசியும் ஆதரவும் பெறும்.

வி. வி. எஸ்.,
கமுதி.

●

வரவேற்கிறோம்

ஜெமினி ஒளவையாருக்கு பொது மக்கள் பாராட்டு விழா ஒன்று நவம்பர் மாதம் 16–ம் தேதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை அண்ணாமலை மன்றத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. பேசியவர்களின் ஜாபிதாவில் முக்யமாக குறிப்பிட வேண்டியவர் ஸ்ரீ டி. கே. ஷண்முகம். "கார்ப்பரேஷன் மந்திரிமார்களுக்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதைப் போல் சினிமா கலைஞர்களுக்கும் இதே மாதிரி வாழ்த்துப் பத்திரம் வாசித்தல் நலம்" என்ற ஆலோசனையை எடுத்துரைத்தார் ஸ்ரீ டி. கே. ஷண்முகம். அவர் கூறியதை நான் மட்டுமல்ல, நம் சினிமா கலைஞர்கள் எல்லோரும் சந்தோஷமாக முழு மனதோடு வரவேற்கிறோம்.

"அம்பாரி"
சென்னை–26

கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்

கற்கோட்டை

காட்சிகள்

PSR

புரொட்யூசர், டைரக்டர், நடிகர் கெம்பராஜ் தனது இரண்டாவது தயாரிப்பான கற்கோட்டையின மூலம் பட உலகில் புரட்சியை ஏற்படுத்தப் போகிறார். பிரபல பிரெஞ்சு ஆசிரியர் அலெக்ஸாண்டர் டுமாஸின் "கவுண்ட் ஆப் மான்டி



கிரிஸ்டோ'' கதையைத் தழுவியது இப்படத்தின் கதையும்.

கெப்பராஜ் இந்தப் படத்தை டைரக்ட் செய்வதுடன் அவரே பிரதம பாகத்தில் நடித்தும் வருகிறார். இந்தப் படத்தில் அழகி கிருஷ்ணகுமாரி, பி, ஆர். பந்துலு,



கே. சாரங்கபாணி, புது முகம் வேதா முதலிய பல ரும் நடித்துவருகின்றனர். வித்யாவதியின் சகோதரி யான இந்தப் புதுமுகம் வேதா தன் முதல் படத் தின் மூலமே ரஸிகர்களைக் கவர்ந்து விடுவாராம்.



இளம் நடி கிருஷ்ண குமாரியுடன் கெம்பராஜ் கதாநாயகனுக காதல் கட்டங்களில் ஜமாய்த்திருக்கிருராம். இப்படம் கன்னட பாஷையிலும் "ஜல துர்க்கா" என்றபெயரில் தயாராகிறது.

வாழ்க சினிமா!

எஸ். டி. சுந்தரம்

மனிதர்களின் மூளை கலங்கரை விளக்கமாகவும் பயன்படும்; கொள்ளிக்கட்டையாகவும் வேலை செய்யும் என்று யாரோ ஒரு ஆங்கில விஞ்ஞானி கூறினனும், இதை எல்லா வகையிலும் மக்களுக்கு விளக்கிச் சொல்லும் முறையிலே தற்போதைய சினிமா உலகம் அமைந்திருக்கிறது. சினிமாவைப் பயன் படுத்தி ஒரு நாட்டை அழிக்கவும் முடியும். ஆக்கவும் முடியும். ஒரு கூட்டத்தைச் சீர்திருத்தி நாகரிகமாக்கலாம்; அல்லது அக்கூட்டத்தையே அநாகரிக மக்களாக்கிச் சீர்குலையவும் செய்யலாம். இவ்வாறு எல்லா வல்லமையும் பெற்ற பராசக்தியின் உறைவிடமாகத் திகழுவதுதான் சினிமா.

கடந்த இரண்டாவது உலகப் போரிலே ஹெர் அடால்ப் ஹிட்லர் இச்சினிமாவைக் கொண்டே பல நாடுகளை நடுங்கப் பண்ணி, தனக்கு அடிமையாக்கியதை உலக வரலாறு எதிர்கால மக்களுக்கு நன்கு விளக்கும் என்பதிலே ஐயமில்லை. போலந்தையும் பிரான்சையும் கைப்பற்ற, தான் கையாண்ட முறைகளை அப்படியே சினிமாவாகப் பிடித்தான் ஹிட்லர்.

அவைகளைத் தன் அண்டை நாடுகளிலே காட்டி அவர்களின் உள்ளத்தை நடுங்கச் செய்தான். தன்னை எதிர்த்தால் எங்ஙனம் திக்கெட்டும் தீ பரவும்; தேசம் பாழாகும் என்பதைச் சினிமா மூலம் அவர்களுக்கு விளக்கிச் சொல்லித் தனக்கு அடிமையாக்கினன். ஆயுதம் தாங்கிய போர் வீரர்கள் செய்ததைவிட, சினிமா ஹிட்லருக்கு மிக்க உதவியது என்பதை வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

அதே போர்க் காலத்தில் மக்களைப் போர் வீரர்களாகப் பயிற்றுவிப்பதற்கும் சினிமாவை எல்லா மேலை நாடுகளும் கைக்கொண்டன. போர் வீரனுகவும் போர்ப் பயிற்சி ஆசிரியனுகவும் விளங்கிய சினிமா இப்போது உலகம் முழுவதற்கும் கொள்ளிவைத்துக் கொண்டு வருவதாகச் சிலர் கருதுகின்றனர். இதை மறுக்க முடியா விட்டாலும் இதை மாற்ற முடியுமென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஹிட்லராக அழிவு வேலையில் ஈடுபட்டிருக்கும் சினிமாவை காந்தியைப்போல் ஆக்க வேலையிலும் நாம் ஈடுபடுத்துவோம். இருக்கின்ற சூழ்நிலையை நாம் கருத்தாகப் பயன் படுத்தினல் இவ்வுலகத்தை நாம் நல்லதோர் உலகமாக்கலாம். வல்லவர்களாக விளங்கும் மக்களை நல்லவர்களாக்கலாம். படிப்பில்லாதவர்களை படித்தவர்களாக்கலாம். அடிமைகளை மானமுள்ள மக்களாக மாற்றலாம். இன்னும் எவ்வளவோ செயற்கருஞ் செயல்களைச் செய்யலாம.

இன்று உலகத்திலே சர்வாதிகாரிகள் என்றும் நாட்டின் தலைவர்கள் என்றும் மதத்தின் தலைவர்கள் என்றும் பல பேர் இருக்கின்றனர். ஆனல் இவர்களை மக்கள் அனைவருக்கும் தெரியாது. சினிமாவில் நடிக்கும் நடிகரையோ, நடிகைகளையோ தெரிந்திருக்கும் அளவுக்கு மக்கள் இவர்களைப் பற்றி அறிந்து கொள்ளவில்லை. ஏன், கடவுளுக்குச் செய்யாத பூசையைச் சிலர் இந்தக் காலத்துச் சினிமா நடிகைகளுக்குச் செய்கின்றனர் என்று சொன்னல் அதுவும் உண்மைதான் என்று ஒத்துக் கொள்ள நம் நாட்டில் எண்ணற்றோர் உள்ளனர். நாட்டின் காவலர்களும், மதத்தின் தலைவர்களும், உலகத்தையே படைத்தவரும் செய்ய முடியாத சீர்திருத்தத்தை நாம் இச்சினிமா மக்களைக் கொண்டே செய்விக்கலாம்.

"ஓர் இரவில்" (It Happened One Night) என்ற ஆங்கிலப் படத்தில் கிளார்க் கேபிள் தன்னுடைய மேல் சட்டையைக் கழற்றுகிறார் உள்ளே பனியன் ஒன்றும் இல்லாமல் வெறும் உடம்புதான் காட்சி அளிக்கிறது. இதைக் கண்டனர் மக்கள். அந்த நாளிலிருந்து துணிக்கடைகளில் பனியன் வியாபாரம் மிகக் குறைந்து விட்டதாம்!

இந்த நிகழ்ச்சி ஒன்றிலிருந்து மக்கள் எங்ஙனம் சினிமாக்காரனைப் பின்பற்றுகிறார்கள் என்று தெரிகிறதல்லவா? அவ்வளவு தூரம் போவானேன்? நம் நாட்டுப் பெண்களையே பார்க்கலாமே. சினிமா நட்சத்திரங்களின் பின்னலும் உடையும், நடையும், ஸ்டைலும், நம்முடைய இளம் பெண்களின் நாகரிக உணர்ச்சியை எவ்வளவு தூரம் ஆட்சி செய்கின்றன!

வல்லமையுள்ள அரசாங்கத்தை விட இச்சினிமா, மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தி வருவதை அறிஞர்கள் நாளும் காண்கின்றனர். சினிமாவால் மக்கள் கெட்டுப் போகிறார்களே என்று வாய்விட்டுக் கூறுகின்றனர். இதை மாற்ற வழியில்லையோ என்று சித்தம் கலங்குகின்றனர். எவ்வாறு இத்தீமையைக் குறைப்பது?

இதற்கு முதன் முதலாகப் படம் எடுப்பவர்களின் உதவியும், ஒத்துழைப்பும் நமக்கு வேண்டும். ஆனால் முதலாளிகள் மட்டும் இருந்தால் அவர்களால் என்ன செய்ய முடியும்? அவர்களுடைய நல்ல மனத்தாலோ அல்லது உயர்ந்த உள்ளத்தாலோ அவர்களால் நல்ல படத்தை எவ்வாறு எடுக்க முடியும்? விளக்கை ஏற்றுவதற்குத் தீக்குச்சி வேண்டும். அதுபோல் முதலாளிகள் நல்ல படம் எடுப்பதற்கும் நல்ல எழுத்தாளர்கள் வேண்டும். நாட்டுக்கும், மக்களுக்கும் பயன்படும் வகையிலே நன்கு எழுதக் கூடிய கதை ஆசிரியர்கள் கிடைத்தாலொழிய நல்ல படம் வெளிவர முடியாது. இந்த உண்மையை இன்று நம் நாடு உணரவில்லை. படம் எடுக்கும் முதலாளிகள் தெரிந்து கொள்ளவில்லை. விளக்கு அழகாக இருக்க வேண்டும் என்பதுதான் இன்றைய பட முதலாளிகளின் பெருங் கவலையாக இருக்கிறது மக்கள் நலம் என்ற திரையைப் பற்றியோ, விளக்கை ஒளிர்விக்கும் எண்ணெய் போன்ற எழுத்தாளனைப் பற்றியோ, சம்பந்தப்பட்டவர்கள் சமீபத்தில் தான் எண்ணிப் பார்க்க ஆரம்பித்திருக்கின்றனர். எண்ணிப் பார்த்தாலும் அவ்வேளையில் விளக்கின் அழகு அவர்களை மயக்கி விடுகிறது.

விளக்கின் வெளித்தோற்றமே எல்லாம் என்று எண்ணாமல் விளக்குக்கு இன்றியமையாத எண்ணெய், திரி என்பவைகளைப் பற்றி நாம் முதலில் அக்கரை கொண்டால், விளக்கு நன்கு சுடர்விட்டு எரியும். அந்தச் சுடரின் ஒளியிலே விளக்கின் அழகு மேலும் அழகாக இருக்கும்.

நம்முடைய நாட்டு மக்களுக்கு இன்று நாம் செய்ய வேண்டிய தொண்டு யாது? மக்களை நாம் எத்துறையில் முன்னேற்ற வேண்டும்? என்றவைகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரிதான். ஆனால் முற்றிலும் எதிர்பார்ப்பது சரியா? "அரசாங்கமே அனைத்தும்" என்று சொல்லக்கூடிய சர்வாதிகார நாட்டில் அவ்வாறு அரசாங்கத்தை முற்றிலும் எதிர்பார்ப்பது சற்றும் தவறில்லை. ஆனால் தனி மனித உரிமையை நிறையப் பெற்றுள்ள நாட்டு மக்கள், அரசாங்கத்தையே முற்றிலும் எதிர்பார்த்தால் நாளடைவிலே குடியாட்சி மறைந்து விடும். தனி மனிதனின் ஆட்சிதான் தலை ஓங்கும்.

இப்பேருண்மையை இன்று நம் நாட்டில் உள்ள அனைவரும், குடியாட்சியில் பற்றுள்ள எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். பட முதலாளிகள் தங்களுக் கிருக்கும் வல்லமையை உணர்வதோடு, பொறுப்பையும் தெரிந்து கொண்டு. நல்ல எழுத்தாளர்களை அழைத்து நாட்டை உயர்த்தும் நற்பணியில் ஈடுபடட்டும். மக்களை உயர்த்தும் மாண்புடைய தொண்டில் அவர்கள் மனம் செல்லட்டும். அப்போதுதான் குடியாட்சி நிலைக்கும். "நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற தேன் பாட்டு, வாழ்வின் மெய்யாகும். வாழ்க சினிமா! வளர்க நல்லறம்!

1953 வருஷத்திய வெளியீடுகள்

என்வீடு (தமிழ்) நா இல்லு (தெலுங்கு)

தயாரிப்பு : அவர் இந்தியா
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : நாகய்யா
நடிகர்கள் : நாகய்யா, ராமசர்மா, பாலய்யா, டி. ஆர். ராஜகுமாரி, கிரிஜா, வித்யாவதி முதலியோர்.

ஜெனோவா (தமிழ், மலையாளம்)

தயாரிப்பு : சந்திரா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : நியூடோன்
டைரக்ஷன் : நாகூர்
நடிகர்கள் : பி. எஸ். சரோஜா, எம். ஜி. ராம்சந்தர் முதலியோர்.

அமரகவி (தெலுங்கு)

தயாரிப்பு : நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : நியூடோன்
டைரக்ஷன் : எப். நாகூர்
நடிகர்கள் : ராஜகுமாரி, பி. எஸ். சரோஜா, லலிதா, பத்மினி, பாகவதர், கிருஷ்ணன், மதுரம் முதலியோர்.

பூங்கோதை (தமிழ்), பரதேசி (தெலுங்கு)

தயாரிப்பு : அஞ்சலி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : பிரசாத்
நடிகர்கள் : அஞ்சலிதேவி, பண்டரிபாய், சிவாஜி கணேசன், நாகேஸ்வர ராவ் முதலியோர்.

திரும்பிப் பார் (தமிழ்)

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
ஸ்டுடியோ : மாடர்ன் தியேட்டர்ஸ்
டைரக்ஷன் : டி. ஆர். சுந்தரம்
நடிகர்கள் : பண்டரிபாய், கிருஷ்ணகுமாரி, கிரிஜா, சிவாஜி கணேசன் முதலியோர்.

பொன்னி (தமிழ்), ஒக தல்லி பில்லலு (தெலுங்கு)

தயாரிப்பு : பக்ஷிராஜா
ஸ்டுடியோ : பக்ஷிராஜா
டைரக்ஷன் : ஏ. எஸ். ஏ. சாமி
நடிகர்கள் : லலிதா, பத்மினி, சாந்தகுமாரி, ஸ்ரீராம், கௌசிக், டி. பாலசுப்ரமண்யம், துரைராஜ் முதலியோர்.

குமாஸ்தா (தமிழ், தெலுங்கு)

தயாரிப்பு : அருணா பில்ம்ஸ்
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : ஆர். எம். கிருஷ்ணசாமி
நடிகர்கள் : பண்டரிபாய், ஜெயம்மா, நாகய்யா, மனோஹர் முதலியோர்.

பெற்றதாய் (தமிழ்), கன்னதல்லி (தெலுங்கு)

தயாரிப்பு : பிரகாஷ்
ஸ்டுடியோ : பிரகாஷ்
டைரக்ஷன் : பிரகாஷ் ராவ்
நடிகர்கள் : ஜி. வரலக்ஷ்மி, டி. டி. வசந்தா, நாகேஸ்வரராவ், நம்பியார்.

அன்பு (தமிழ்)

தயாரிப்பு: நடேஷ் ஆர்ட்
ஸ்டுடியோ: நியூடோன்
டைரக்ஷன்: எம். நடேசன்
நடிகர்கள்: லலிதா, பத்மினி, டி. ஆர். ராஜகுமாரி, சிவாஜி கணேசன், பாலய்யா, துரைசாமி முதலியோர்.

வாழப் பிறந்தவள்? (தமிழ்)

தயாரிப்பு: ஆர். ஆர். பிக்சர்ஸ்
ஸ்டுடியோ: வாஹினி
டைரக்ஷன்: ராமண்ணு
நடிகர்கள்: டி. ஆர் ராஜகுமாரி, பி. எஸ். சரோஜா, ஸ்ரீராம், பாலய்யா, துரைசாமி முதலியோர்.

வேலைக்காரி மகள் (தமிழ்)

தயாரிப்பு: ராஜ்யம் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ: ரேவதி
டைரக்ஷன்: ரங்கநாத தாஸ்
நடிகர்கள்: என். டி. ராமராவ், வஸந்தா, ராஜ்யம், ரங்கராவ், சாந்தகுமாரி முதலியோர்.

சரியோ. தெற்றே?

தயாரிப்பு: மங்களா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ: உதயா
டைரக்ஷன்: திக்குரிசி
நடிகர்கள்: திக்குரிசி, குமாரி முதலியோர்.

தந்தை, (தமிழ்), அச்சன், (மலையாளம்)

தயாரிப்பு: எக்ஸெல் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ: உதயா
டைரக்ஷன்: எம். ஆர். எஸ். மணி
நடிகர்கள்: திக்குரிசி, பி. எஸ். சரோஜா, பிரேம் நஸீர், ஸி. ஆர். ராஜகுமாரி முதலியோர்.

மதனமோகினி

தயாரிப்பு: லிபர்டி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ: சிட்டடெல்
டைரக்ஷன்: எம். எல். பதி
நடிகர்கள்: ஸி. ஆர். ராஜகுமாரி, பொள்ளாச்சி கமலா, நரசிம்ம பாரதி முதலியோர்.

தன்றி (தெலுங்கு)

தயாரிப்பு: எக்ஸெல் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ: உதயா
டைரக்ஷன்: எம். ஆர். எஸ். மணி
நடிகர்கள்: பி. எஸ். சரோஜா, திக்குரிசி, பிரேம் நஸீர் முதலியோர்

பிரதுகு தெருவு (தெலுங்கு)

தயாரிப்பு: பாஸ்கர் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ: நரசு
டைரக்ஷன்: ராமகிருஷ்ணு
நடிகர்கள்: சாவித்திரி, நாகேஸ்வரராவ், ரங்காராவ் முதலியோர்

ஒய்யாரி பாமா (தெலுங்கு)

தயாரிப்பு: அஜந்தா
ஸ்டுடியோ: நரசு
டைரக்ஷன்: பி. ஏ. சுப்பராவ்
நடிகர்கள்: நாகேஸ்வர ராவ், எஸ் வரலக்ஷ்மி முதலியோர்.

பிச்சி புல்லய்யா

தயாரிப்பு: நேஷனல் ஆர்ட்
ஸ்டுடியோ: ரேவதி
டைரக்ஷன்: ?
நடிகர்கள்: என். டி. ராமராவ், சௌகார் ஜானகி முதலியோர்

பணக்காரி (தமிழ்)

தயாரிப்பு: உமா பிக்சர்ஸ் - ஓம் பிலிம்ஸ்
ஸ்டுடியோ: நியூடோன்
டைரக்ஷன்: கோபாலகிருஷ்ணன்
நடிகர்கள்: நாகய்யா, எம். ஜி. ராமச்சந்திரன், டி. ஆர். ராஜகுமாரி முதலியோர்.

நா செல்லலு (தெலுங்கு)

தயாரிப்பு: அசோகா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ: ரேவதி
டைரக்ஷன்: லியெச். நாராயண மூர்த்தி
நடிகர்கள்: ஜி. வரலக்ஷ்மி, சூர்யகலா, ராமசர்மா, அமர்நாத் முதலியோர்.

மங்கள கௌரி (கன்னடம்)

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
ஸ்டுடியோ : மாடர்ன் தியேட்டர்ஸ்
டைரக்ஷன் : டி. ஆர். சுந்தரம்
நடிகர்கள் : ஹரிணி முதலியார்.

சத்தியசோதனை (தமிழ்)

தயாரிப்பு : குப்பி கர்நாடகா புரொடக்ஷன்ஸ் & ஏவி. எம்.
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எச். எல். என். சிம்ஹா
நடிகர்கள் : பண்டரிபாய், கிருஷ்ணகுமாரி, பாலய்யா, ஹொன்னப்ப பாகவதர் முதலியோர்

மின்மினி (தமிழ்)

தயாரிப்பு : ஆர். ஏ. எல். டென்னகூன் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : (முடித்தவர்) டென்னகூன்
நடிகர்கள் : எஸ். மேனகா, விஜயகுமார், மங்களம் முதலியோர்.

முயற்சி (தமிழ்)

தயாரிப்பு : ஸி. ஸி. புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : நவஜோதி, (மைசூர்)
டைரக்ஷன் : ஜோசப் பள்ளி பாட்
நடிகர்கள் : ரேவதி, லக்ஷ்மிபிரபா, நரசிம்ம பாரதி, வி. கே. ராமசாமி முதலியோர்.

ஆசை மகன் (தமிழ்) ஆசாதீபம் (மலையாளம்)

தயாரிப்பு ; அசோசியேடட் புரொட்யூசர்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : ஜி. ஆர். ராவ்
நடிகர்கள் : பி. எஸ். சரோஜா, பத்மினி, கிரிஜா, ஆர். கணேஷ், பாலய்யா, பி. ஆர். பந்துலு முதலியோர்.

மனிதன் (தமிழ்)

தயாரிப்பு : ஜூபிடர் - லாவண்யா
ஸ்டுடியோ : நெப்டியூன்
டைரக்ஷன் : கே. ராம்னுத்
நடிகர்கள் : டி. கே. ஷண்முகம், பகவதி, ஸி. வி. வி. பந்துலு, மாதுரிதேவி, கிருஷ்ணகுமாரி, பண்டரிபாய் முதலியோர்.

நாம் (தமிழ்)

தயாரிப்பு : ஜூபிடர் - மேகலா
ஸ்டுடியோ : நெப்டியூன்
டைரக்ஷன் : காசிலிங்கம்
நடிகர்கள் : எம். ஜி. ராம்சந்தர், பி. கே. சரஸ்வதி, வி. என். ஜானகி, வீரப்பா, நம்பியார், சக்ரபாணி முதலியோர்.

இன்ஸ்பெக்டர் (தமிழ், தெலுங்கு)

தயாரிப்பு : ஜூபிடர் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : நெப்டியூன்
டைரக்ஷன் : ஆர். எஸ். மணி
நடிகர்கள் : அஞ்சலிதேவி, பி. கே. சரஸ்வதி, ஸி. கே. சரஸ்வதி, டி. கே. ஷண்முகம், பகவதி முதலியோர்.

மாமியார் (தமிழ்), கோடரீகம் (தெலுங்கு)

தயாரிப்பு : கஜானன
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : கே, வேம்பு
நடிகர்கள் : பி. ஆர். பந்துலு, சிவபாக்கியம், எஸ். வரலக்ஷ்மி, கிரிஜா, மனோஹர் முதலியோர்.

திரமாலா (மலையாளம்)

தயாரிப்பு : கலாசாகர் பில்ம்ஸ்
ஸ்டுடியோ ; மெர்ரிலாண்ட்
டைரக்ஷன் : பி. ஆர். எஸ். பிள்ளை, நிர்மல் குமார்
நடிகர்கள் : குமாரி தங்கம், சத்யன் முதலியோர்

சண்டிராணி (தமிழ் - ஹிந்தி - தெலுங்கு)

தயாரிப்பு : பரணி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ . பரணி
டைரக்ஷன் பானுமதி
நடிகர்கள் : பானுமதி, என். டி. ராமராவ், எஸ். வி. ரங்கராவ் முதலியோர்.

உலகம் (தமிழ்)

தயாரிப்பு : சொஸைடி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ஸ்டார் கம்பைன்ஸ்
டைரக்ஷன் : எல். எஸ். ராமச்சந்திரன்
நடிகர்கள் : எம். வி. ராஜம்மா. எஸ். எம். குமரேசன், பி. கே. சரஸ்வதி. நாகய்யா, டி. இ. வரதன் முதலியோர்.

பிரபஞ்சம் (தெலுங்கு)

தயாரிப்பு : சொஸைடி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ஸ்டார் கம்பைன்ஸ்
டைரக்ஷன் : எல். எஸ். ராமச்சந்திரன்
நடிகர்கள் : ஜி. வரலக்ஷ்மி, நாகய்யா, லக்ஷ்மிகாந்தம், ராம சர்மா முதலியோர்.

ஆனந்த மடம் (தமிழ்)

தயாரிப்பு : பில்ம்ஸ்தான்
ஸ்டுடியோ : பில்ம்ஸ்தான்
டைரக்ஷன் : ஹெமன் குப்தா
நடிகர்கள் : பிருதிவிராஜ், பரத் பூஷன், கீதாபலி முதலியோர்.

ரத்ன தீபம் (தமிழ்)

தயாரிப்பு : கிளிபாரத்
ஸ்டுடியோ : நியுதியேட்டர்ஸ், ராதா பில்ம்ஸ்
டைரக்ஷன் : தேவகி குமார் போஸ்
நடிகர்கள் : மஞ்சுடே, அனுபா குப்தா, அபிபட்டாசார்ஜி முதலியோர்.

ஆயிரம் விளக்கு (தமிழ்)

தயாரிப்பு : ஜெயந்த் தேசாய் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : பம்பாயில்
டைரக்ஷன் : ஜெயந்த் தேசாய்
நடிகர்கள் : ரேஹனு, கிஷோர் குமார் முதலியோர்.

அழகி (தமிழ்)

தயாரிப்பு : ஜூபிடர்
ஸ்டுடியோ : நெப்டியூன்
டைரக்ஷன் : சுந்தர்ராவ் நட்கர்ணி
நடிகர்கள் : கிருஷ்ணகுமாரி, ரேவதி, எஸ். ஏ. நடராஜன், வி. கே. ராமசாமி முதலியோர்.

பழிக்குப்பழி (தமிழ்)

தயாரிப்பு : ஜே. ஆர்தர் ராங்க்
ஸ்டுடியோ : கெய்ன்ஸ்பரோ (லண்டன்)
டைரக்ஷன் : ஆர்தர் க்ராப்ரி
நடிகர்கள் : ஸ்டீவர்ட் கிரேஞ்சர் முதலியோர்.

மனம் போல மாங்கல்யம் (தமிழ்)

தயாரிப்பு : நாராயணன் கம்பெனி
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : பி. புல்லய்யா
நடிகர்கள் : சாவித்திரி, சுரபி பால சரஸ்வதி, கணேஷ், கே. சாரங்க பாணி முதலியோர்.

கண்கள் (தமிழ்)

தயாரிப்பு : எம். பி. டீ.
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : கிருஷ்ணன் பஞ்சு
நடிகர்கள் : பண்டரிபாய், மைனுவதி, ஸஹஸ்ரநாமம், சிவாஜி கணேசன் முதலியோர்.

ஔவையார் (தமிழ்)

தயாரிப்பு : ஜெமினி
ஸ்டுடியோ : ஜெமினி
டைரக்ஷன் : கொத்தமங்கலம் சுப்பு
நடிகர்கள் : கே. பி. சுந்தராம்பாள், குமாரி வனஜா, கொத்தமங்கலம் சுப்பு, எம். கே. ராதா முதலியோர்.

பெம்புடு கொடுகு (தெலுங்கு)

தயாரிப்பு : பிரசாத் ஆர்ட் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : பிரசாத்
நடிகர்கள் : புஷ்பவல்லி, சாவித்திரி, ராமசர்மா முதலியோர்.

ரோஹிணி (தமிழ், தெலுங்கு)

தயாரிப்பு : மெட்ராஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : கமால் கோஷ்
நடிகர்கள் : மாதுரிதேவி, ஜி. வரலக்ஷ்மி, சகஸ்ரநாமம், எஸ். ஏ. நடராஜன் முதலியோர்.

பரோபகாரம்
(தமிழ், தெலுங்கு)

தயாரிப்பு : ஷோபா பிலிம்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : கமால்கோஷ்
நடிகர்கள் : சாவித்திரி, ஜி. வரலக்ஷ்மி, ராமசர்மா, முக்காமல முதலியோர்.

லட்கி (ஹிந்தி)

தயாரிப்பு : ஏவி. எம்.
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எம். வி. ராமன்
நடிகர்கள் : வைஜயந்திமாலா, அஞ்சலிதேவி, பரத்பூஷன், கிஷோர் குமார் முதலியோர்.

வஞ்சம் (தமிழ்), பிரதிக்ஞா (தெலுங்கு)

தயாரிப்பு : ரோஹிணி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ரோஹிணி
டைரக்ஷன் : ஒய். ஆர். ஸ்வாமி
நடிகர்கள்: சாவித்திரி, காந்தாராவ், ராஜனுல முதலியோர்.

மருமகள் (தமிழ்), அம்மலக்கலு (தெலுங்கு)

தயாரிப்பு : கிருஷ்ணு பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ஸ்டார் கம்பைன்ஸ் & ரேவதி
டைரக்ஷன் : யோகானந்த்
நடிகர்கள் : லலிதா, பத்மினி, சுரபி பாலசரஸ்வதி, பி. ஆர். பந்துலு, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர்.

அவன் (தமிழ்)

தயாரிப்பு : ஆர். கே. பிலிம்ஸ்
ஸ்டுடியோ : ஆர். கே. பிலிம்ஸ்
டைரக்ஷன் : ராஜா நவாதே
நடிகர்கள் : நர்கீஸ், விஜயலக்ஷ்மி, ராஜ்கபூர், பிராண் முதலியோர்

நால்வர் (தமிழ்)

தயாரிப்பு : சங்கீதா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : சென்டிரல்
டைரக்ஷன் : வி. கிருஷ்ணன்
நடிகர்கள் : குமாரி தங்கம், முத்துலக்ஷ்மி, ஏ. பி, நாகராஜன், கண்ணப்பா முதலியோர்.

மனிதனும் மிருகமும் (தமிழ்)

தயாரிப்பு : ரேவதி
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : கே. வேம்பு, எஸ். டி. சுந்தரம்
நடிகர்கள் : மாதுரிதேவி, ராஜம், குமாரி கமலா, சிவாஜி கணேசன், என். என். கண்ணப்பா, டி. ஆர். ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி முதலியோர்.

லக்ஷ்மி (தமிழ், தெலுங்கு)

தயாரிப்பு : ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பிலிம் கம்பெனி
ஸ்டுடியோ : ஜெமினி
டைரக்ஷன் : கே பி நாகபூஷணம்
நடிகர்கள் : குமாரி வனஜா, கண்ணும்பா, எம். சரோஜா, மனோஹர், எல் நாராயணராவ், சாயிராம், டி. கே. ராமச்சந்திரன் முதலியோர்.

ஜாதகம் (தமிழ், கன்னடம்)

தயாரிப்பு : ஆர். என். ஆர். பிக்சர்ஸ்
ஸ்டுடியோ ; ஏவி. எம்.
டைரக்ஷன் : ஆர். நாகேந்திரராவ்
நடிகர்கள் : சூர்யகலா, கே. ஆர். செல்லம், ஆர். நாகேந்திரராவ், கே. சாரங்கபாணி, டி. கே. பாலசந்திரன் முதலியோர்.

தேவதாஸ் (தமிழ், தெலுங்கு)

தயாரிப்பு : வினோதா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : நரசு
டைரக்ஷன் : வேதாந்தம் ராகவய்யா
நடிகர்கள் : லலிதா, சாவித்திரி, நாகேஸ்வரராவ், நம்பியார், ரங்கராவ் முதலியோர்.

மஞ்சரி (தெலுங்கு)

தயாரிப்பு : வருநா பிலிம்ஸ்
ஸ்டுடியோ : ஸ்டார் கம்பைன்ஸ்
டைரக்ஷன் : ஒய். வி. ராவ்
நடிகர்கள் : குமாரி ருக்மணி, வி. யெச். நாராயணராவ் முதலியோர்.

செய்திச்சுருள்
பார்க்கவும்

'பேசும் படம்' டைரி

குறிப்புகள் :

த-தமிழ்
தெ-தெலுங்கு
ம-மலையாளம்
க-கன்னடம்
ஹி-ஹிந்தி
சி-சிங்களம்

எங்கெங்கே என்னென்ன படங்கள் தயாராகின்றன என்பதை இந்த டைரி காட்டும். முழு விவரங்கள் தெரியாத இடங்களில் கேள்விக் குறி காணப்படும்.

படப்பெயர் (தயாரிப்போர்)	டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
ஜெமினி			
புரொடக்ஷன் — 19 (ஜெமினி) [த]	கே. ஜே. மகாதேவன்	ஸ்ரீரஞ்சனி, ஸ்ரீராம், டி. ஆர். ராமச்சந்திரன், எஸ். வி. ரங்கராவ் முதலியோர்	ஜனவரி வெளியீடு
,, .. [தெ]	..	,,	..
பஹுத் தின் ஹுயே (ஜெமினி) [ஹி]	எஸ். எஸ். வாஸன்	மதுபாலா, சாவித்திரி, சூர்யப்ரபா, எம். கே. ராதா, லலிதா பவர் முதலியோர்	பிப்ரவரி மாதம் திரையிடப்படும்
கட்டபொம்மன் (ஜெமினி) [த]	?	?	ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன

ஏவி. எம்.

பெண் (ஏவி. எம்.) [த]	எம். வி. ராமன்	அஞ்சலிதேவி, வைஜயந்திமாலா, வி. நாகய்யா, கணேஷ், எஸ். பாலசந்தர் முதலியோர்	முடிவடையும் தறுவாயி லிருக்கிறது
பில்லா .. [தெ]	..	..	..
ஒரு நாள் .. [த]	எஸ். பாலசந்தர்	பண்டரிபாய், சூர்யகலா, எஸ். மேனகா, சிவாஜி கணேசன், பாலசந்திரன், பி. டி. சம்பந்தம் முதலியோர்	திரையிடத் தயார்
செல்லப்பிள்ளை .. [த]	எம். வி. ராமன்	சாவித்திரி, பண்டரிபாய், கே. ஆர். ராமசாமி, எஸ். வி. சஹஸ்ரநாமம் முதலியோர்	படப்பிடிப்பு நடை பெற்று வருகிறது
வத்ஹீனு .. [தெ]	..	..	..
பேடர கண்ணப்பா (குப்பி கர்நாடகா) [க]	எச். எல். என். ஸிம்ஹா	பண்டரிபாய், ஸந்தியா, ஜி. வி. அய்யர், முதுராஜ், நரஸிம்ஹ ராஜ் முதலியோர்	படப்பிடிப்பு நடந்து வருகிறது
பராசக்தி (நேஷனல்) [தெ]	கிருஷ்ணன்–பஞ்சு	சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சனி முதலியோர்	துரித முன்னேற்றம்

வாஹினி

சந்திரஹாரம் (விஜயா) [த]	கே. காமேஸ்வர ராவ்	ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி, என். டி. ராமராவ், எஸ். வி. ரங்காராவ், ரேலங்கி முதலியோர்	பொங்கல் ரிலீஸ்
,, .. [தெ]	..	..	..

படப்பெயர் (தயாரிப்போர்)	டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
பொன் வயல் (ஜெயந்தி) [த]	ஏ. டி. கே.	அஞ்சலிதேவி, மைனுவதி, முத்துலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன், மனோஹர், கே. சாரங்கபாணி, தங்கவேலு முதலியோர்	ஜனவரி வெளியீடு
பங்காரு பூமி .. [தெ]	..	..	..
புதுயுகம் (ஸ்ரீ ஸாயி கானும்ருதா) [த]	டி. ஆர். கோபு & சுந்தர்	கிருஷ்ணகுமாரி, விமலா, எம். எஸ். திரௌபதி, எஸ். ஏ. நடராஜன், நரசிம்ம பாரதி, முத்து கிருஷ்ணன் முதலியோர்	பாதிக்கு மேல் பூர்த்தியாகி விட்டது
ஜோதி (நவயுகா) [த]	ஸ்ரீதர்	ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி, ஸ்ரீராமமூர்த்தி, காஷ்யப் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
.. .. [தெ]	..	..	..
ராஜூ பேடா (பி. ஏ. எஸ். புல் புரொடக்ஷன்ஸ்) [தெ]	பி. ஏ. சுப்பா ராவ்	என். டி. ராமராவ், ரங்கராவ், லக்ஷமி ராஜ்யம் முதலியோர்	தொடர்ந்து சுடப்பட்டு வருகிறது
கற்கோட்டை (கெம்பராஜ்) [த]	கெம்பராஜ்	கிருஷ்ணகுமாரி, கெம்பராஜ், பி. ஆர். பந்துலு முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
ஜலதுர்க்கா .. [க]	..	..	..
நம் குழந்தை (ஓம்-விண்ஸர்) [த]	கே. எஸ். கோபாலகிருஷ்ணன்	மனோஹர், எஸ். வரலக்ஷ்மி முதலியோர்	படப்பிடிப்பு சென்ற மாதம் ஆரம்பமாகியது
தோடு தொங்கலு (நேஷனல் ஆர்ட்) [தெ]	யோகானந்த்	என். டி. ராமராவ் முதலியோர்	..

ஸ்டார் கம்பைன்ஸ்

நண்பன் (எம். டி. வி.) [த]	பி. எஸ். ஸ்ரீநிவாஸராவ்	பி. கே. சரஸ்வதி, நாகய்யா, மனோஹர், பாலய்யா, டி. கே. ராமச்சந்திரன் முதலியோர்	பாதிக்கு மேல் வளர்ந்திருக்கிறது.

நல்லவன் (ஸன்ரைஸ்)	[த]	திருவேங்கடம்	பி. கே. சரஸ்வதி, எம். என். நம்பியார், தங்கவேலு, ஸாயிராம், வி. கே. ராமசாமி முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.
ஜீவக சிந்தாமணி (கந்தன் பிலிம்ஸ்)	[த]	ஸி. வி. ராஜா	மாதுரிதேவி, எம். சரோஜா, ஹொன்னப்ப பாகவதர், டி. எஸ். பாலய்யா, எஸ். ஏ. நடராஜன் முதலியோர்.	பட்டப்பிடிப்பு நடந்து வருகிறது.
,, ,,	[க]	,,	,,	,,
பாசவலை (சௌந்தர்யா பிக்சர்ஸ்)	[த]	பாஸ்கர்	கிருஷ்ணகுமாரி, டி. ஆர். ராதா, கே. சாரங்கபாணி முதலியோர்	படப்பிடிப்பு நடந்து வருகிறது
பிரேம ஜாலமு ,,	[தெ]	,,	,,	,,
வீர சுந்தரி (சுந்தரி பிக்சர்ஸ்)	[த]	விஸ்வநாத் எம். ஜிங்காடே	கே. பி. ஜே. சுந்தராம்பாள், குமாரி ராஜம், சந்திரா, கே. பி. ஜானகிராம், முதலியோர்	திரையிடத் தயார்
நடசேகரா (ஜெயராஜ் பிலிம்ஸ்)	[க]	ஸி. வி. ராஜு	?	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது

ரேவதி

தோழன் (ஏ.டி. எம்.)	[த]	பி. வி. கிருஷ்ணன்	மாதுரிதேவி, விமலா, மனோஹர், நரசிம்ம பாரதி முதலியோர்	துரித முன்னேற்றம்
மனைவியின் மகன் (ஜம்பு)	[த]	எம். வி. ராமன்	எம். வி. ராஜம்மா, வைஜயந்திமாலா, சஹஸ்ரநாமம்	படப்பிடிப்பு நடந்து வருகிறது
சோஹாகன் ,,	[ஹி]	,,	வைஜயந்திமாலா, அசோக்குமார், லலிதா பவர் முதலியோர்	,,
கனவு (கே. ஆர். கே.–ரேவதி)	[த]	,,	லலிதா, வி. கே. ராமசாமி, ஸாயிராம், முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
பெத்த மனுஷ்யுலு (வாஹினி)	[தெ]	கே. வி. ரெட்டி	ஸ்ரீரஞ்சனி முதலியோர்	திரையிடத் தயார்

படப்பெயர் (தயாரிப்போர்)	டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
தூக்குத் தூக்கி (அருணா) [த]	ஆர். எம். கிருஷ்ண சாமி	லலிதா, பத்மினி, சிவாஜி கணேசன் முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
கூண்டுக்கிளி (ஆர். ஆர். பிக்சர்ஸ்) [த]	ராமண்ணா	பி. எஸ். சரோஜா, எம். ஜி. ராமசந்தர், சிவாஜி கணேசன், சாரங்கபாணி முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.
கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி (பத்மினி பிக்சர்ஸ்) [த]	ப. நீலகண்டன்	லலிதா, பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு முதலியோர்	முக்கால் பாகத்திற்கு மேல் வளர்ந்திருக்கிறது.
காவேரி (கிருஷ்ணா பிக்சர்ஸ்) [த]	யோகானந்த்	லலிதா, பத்மினி, என். டி. ராமராவ் முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.
விஜயதுர்க்கா .. [தெ]	..	..	..
கள்வனின் காதலி (ரேவதி) [த]	வி. எஸ். ராகவன்	சிவாஜி கணேசன், சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன்	ஜனவரி முதல் படப்பிடிப்பு ஆரம்பமாகும்
புரொடக்ஷன்–10 (பிரதிபா) [தெ]	பி. புல்லய்யா	அஞ்சலிதேவி, ராமராவ் முதலியோர்	சில ஆயிரம் அடிகள் வளர்ந்திருக்கின்றன
நிரு பேதலு (கோகுல் பிக்சர்ஸ்) [தெ]	பிரகாஷ் ராவ்	நாகேஸ்வரராவ், சுரபி பால சரஸ்வதி முதலியோர்	ஜனவரி வெளியீடு
அன்னதாதா (அஸ்வ ராஜ் புரொடக்ஷன்ஸ்) [தெ]	வேதாந்தம் ராகவய்யா	அஞ்சலிதேவி, நாகேஸ்வரராவ், ரங்கராவ் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
புரொடக்ஷன்–2 (அசோகா பிக்சர்ஸ்) [த]	கே. வி. ஆர். ஆசார்யா எம். கே. ஆர். நம்பியார்	எஸ். வரலக்ஷ்மி, நம்பியார், ரஞ்சன் முதலியோர்	சமீபத்தில் படப்பிடிப்பு ஆரம்பமாகியது

? (ஸ்ரீ சுகுமார புரொடக்ஷன்ஸ்)	[த]	ரகுநாத்	குமாரி கமலா, சௌகார் ஜானகி, மகாலிங்கம், பி. ஆர். பந்துலு முதலியோர்	படப்பிடிப்பு சமீபத்தில் ஆரம்பமாகியது

நெப்டியூன்

ரத்தபாசம் (ஔவை - ஜுபிடர்)	[த]	ஆர். எஸ். மணி	அஞ்சலிதேவி, வித்யாவதி, டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, டி. எஸ். பாலய்யா முதலியோர்	முடிவடையும் தறுவாயி லிருக்கிறது
மனோஹரா (மனோஹர் பிக்சர்ஸ்)	[த]	பிரஸாத்	டி. ஆர். ராஜகுமாரி, பி. கண்ணம்பா, கிரிஜா, சிவாஜி கணேசன், எஸ். ஏ. நடராஜன் முதலியோர்	முடிவடையும் தறுவாயி லிருக்கிறது
மனோஹரா ,,	[தெ]	,,	,,	,,
மனோஹர் ,,	[ஹி]	,,	,,	,,
சொர்க்கவாசல் (பரிமளம்)	[த]	காசிலிங்கம்	அஞ்சலிதேவி, பத்மினி, கே. ஆர். ராமசாமி, வீரப்பா முதலியோர்	,,
,, ,,	[தெ]	,,	,,	,,
குடும்பம் (ஜம்பனு - நந்தி)	[த]	ஜம்பனு	சாவித்திரி, ஸ்ரீராம் முதலியோர்	,,
மேனரீகம் ,,	[தெ]	,,	சாவித்திரி, ஜி. வரலக்ஷ்மி, ராமசர்மா முதலியோர்	,,
புரொடக்ஷன்–1 (பிரின்ஸிபல் பிக்சர்ஸ்)	[த]	ஜோஸப் பள்ளி பாட்	பத்மினி, எஸ். வரலக்ஷ்மி, பாலய்யா, பந்துலு, கே. ராமசாமி, ஸ்டண்ட் சோமு, முதலியோர்	சில பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
புரொடக்ஷன்-1 (யூனிடி பிக்சர்ஸ்)	[த]	நாராயணமூர்த்தி	பத்மினி, சிவாஜி கணேசன்	சென்ற மாதம் பூஜை போடப்பட்டது
? (சாந்தி கலா நிகேதன்)	[சி]	சாந்திகுமார்	சிங்கள நடிகர்கள்	படப்பிடிப்பு சமீபத்தில் ஆரம்பமாகியது

பிலிம் சென்டர்

விடுதலை (நியூ எரா)	[த]	கே. ராம்நாத்	கிருஷ்ணகுமாரி, விமலா, நாகய்யா, மனோஹர் முதலியோர்	ஜனவரி வெளியீடு
? ,,	[ஹி]	,,	,,	திரையிடத் தயார்
பேப்பர் பாய் (ஜெயா புரொடக்ஷன்ஸ்)	[த]	வரதன், சம்பத்	ஜி. சகுந்தலா, மனோஹர், சேது முதலியோர்	படப்பிடிப்பு நடந்து வருகிறது

ரோஹிணி

ஏழையின் ஆஸ்தி (ரோஹிணி)	[த]	டி. எல். ராமச்சந்தர்	ஜக்கய்யா, சூர்யகாந்தம் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
லௌகளி ,,	[தெ]	,,	,,	,,
வேண்டாத செல்வம் (ரோஹிணி)	[த]	ஒய். ஆர். ஸ்வாமி	ஜமுனா, சௌகார் ஜானகி, என். டி. ராமராவ் முதலியோர்	,,
ஒத்தண்டே டப்பு (ரோஹிணி)	[தெ]	,,	,,	,,

நியூடோன்

புது வாழ்வு (சர்வோதயா பிக்சர்ஸ்)	[த]	பாகவதா	மாதுரிதேவி, லலிதா, குமாரி துளசி, பாகவதர், பாலய்யா முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
சிவகாமி (உமா)	[த]	?	?	அறிவிக்கப்பட்டிருக்கிறது
சந்தேஹி (நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸ்)	[த]	எப். நாகூர்	எம். வி. ராஜம்மா முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
,, ,,	[தெ]	,,	,,	,,
,, ,,	[ம]	,,	,,	,,

சிட்டடெல்

நல்ல காலம் (ஜெய்சக்தி)	[த]	எம். எல். பதி	பண்டரிபாய், ருஷ்யேந்திரமணி, ரகுவீர், பாலய்யா, எம். எல். பதி முதலியோர்	படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது

நரசு

புரொடக்ஷன்-1 (நரசு)	[த]	ஏ. எஸ். ஏ. சாமி	கிருஷ்ணகுமாரி, பி. கே. சரஸ்வதி, கே. ஆர். ராமசாமி, ரங்காராவ், முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
,, ,,	[தெ]	,,	,,	,,
ரத்தக்கண்ணீர் (நேஷனல் பிக்சர்ஸ்)	[த]	கிருஷ்ணன் பஞ்சு	ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம், எம். ஆர். ராதா	,,

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
பரணி				
சக்ரபாணி (பரணி)	[தெ]	ராமகிருஷ்ணா	பானுமதி, ரேலங்கி முதலியோர்	படப்பிடிப்பு நடை பெற்று வருகிறது
பிரகாஷ்				
மறுமலர்ச்சி (ஆனந்தா புரொடக்ஷன்ஸ்)	[த]	பிரகாஷ் ராவ்	ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம் முதலியோர்	முடிவடையும் தறுவாயி லிருக்கிறது
மீது கொலுபு ..	[தெ]	,,	..	..
பாலா நந்தம் (பிரகாஷ்)	[தெ]	ஏ. வி. சுப்பாராவ்	மாஸ்டர் ரேலங்கி, குந்து, விஜய லக்ஷ்மி, பேபி மல்லிகா முதலி யோர்	ஜனவரி வெளியிடாக இருக்கலாம்
சியாமளா				
பள்ளி படசு (சியாமளா-யு. டி. ஏ.)	[தெ]	போலோ சுப்பாராவ்	கிருஷ்ணகுமாரி, ராமசர்மா, ஸி. எஸ். ஆர். முக்காமல முதலி யோர்	முடிவடையும் தறுவாயி லிருக்கிறது.
புரொடக்ஷன்-4 (சியாமளா)	[த]	டி. ஆர். கோபு	சரஸ்வதி, என். என். கண்ணப்பா, செருகளத்தூர் சாமா முதலி யோர்	படப்பிடிப்பு நடை பெற்று வருகிறது
சகோதரி (சியாமளா)	[த]	ஆர். பிரகாஷ் ராவ்	கண்ணாம்பா, விஸ்வநாதன்	சில ஆயிரம் அடிகள் சுடப்பட்டிருக்கின்றன
.. ,,	[தெ]	,,	,,	..

மாடர்ன் தியேட்டர்ஸ்

இல்லற ஜோதி (மாடர்ன் தியேட்டர்ஸ்)	[த]	டி. ஆர். சுந்தரம்	பத்மினி, ஸ்ரீரஞ்சனி, சிவாஜி கணேசன், தங்கவேலு முதலியோர்	தமிழப் புத்தாண்டு தினம் வெளிவரலாம்
தேவகன்னிகா ..	[க]	ஜி. ஆர். ராவ்	சௌகார் ஜானகி, லக்ஷ்மிதேவி, ராமாதேவி, இந்து சேகர் முதலியோர்	பாதி முடிந்து விட்டது

சென்டிரல்

பத்மினி (அசோகா புரொடக்ஷன்ஸ்)	[த]	வேல்சாமி கவி	எம். எஸ். திரௌபதி, எஸ். ஆர். ஜானகி, பி. எஸ். கோவிந்தன், மனோஹர் முதலியோர்	அறுபது சத வீதம் முடிந்திருக்கிறது
மனச்சாட்சி (ஈஸ்வர் புரொடக்ஷன்ஸ்)	[ம]	ஜி. விஸ்வநாத்	ஓமனா, சுலோசனா, எஸ். எம். குமரேசன் முதலியோர்	பாதிக்கு மேல் வளர்ந்து விட்டது
மாங்கல்யம் (எம். ஏ. வி. பிக்சர்ஸ்)	[த]	கே. சோமு	பி. எஸ். சரோஜா, சுலோசனா, ஸி. டி. ராஜகாந்தம், ஏ. பி. நாகராஜன், நம்பியார், எஸ். ஏ. நடராஜன் முதலியோர்	துரித முன்னேற்றம்

பக்ஷிராஜா

மரகதம் (பக்ஷிராஜா)	[த]	?	?	ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன
.. ..	[தெ]	?	?	..

பம்பாய் படங்கள்

அஜந்தா (ஆர். கே. பிலிம்ஸ்)	[த]	ராஜ்கபூர்	ராஜ்கபூர், நர்கிஸ்	ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன
.. ..	[தெ]	..	,,	,,
உலன்-க-டௌலா (ஸன்னி - நௌஷத்)	[த]	ஸன்னி	நிம்மி, சூர்யகுமாரி முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது

★ தமிழ்நாடு ... சென்னை-600 008 ★
89678

'அவன் ?' (தொடர்ச்சி)

சந் : சிர் யூ! டாடா! சிர் யூ மா! பை பை! லீலா!

சிவ : லீலா! என்ன இது?

(ராஜூவிடமிருந்து வந்த கடிதத்தைப் பார்த்து விட்டு பதிலெழுத உட்காருகிறாள் லீலா.)

''சந்திரா!

நானிருப்பது ஒரு வனாந்திரப் பிரதேசம். பட்டணங்களின் போலி நாகரீகம் இங்கில்லை. உயரமான குன்றுகள், அலை வீசும் ஏரிகள், இரவிலே வானப்போர்வைப்போர்த்துத் தூங்குகின்றன. சந்திரக் கிரணங்கள் சந்தோஷமாகவிளையாடுகின்றன இதைப் பார்த்து நட்சத்திரங்கள் எல்லாம் கண் சிமிட்டிச் சிரிக்கின்றன. இந்த இயற்கை உலகம் உனக்குப் பிடிக்காதென்றே நினைக்கிறேன். நீ இதை விரும்பத்தான் வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. ஆனால் யாராவது ஒருவர் இங்கு வந்து இந்த சுவர்க்கத்திலே என்னோடு வாழ வேண்டுமென்று விரும்புகிறேன்.

ராஜூ''

(லீலா எழுத ஆரம்பிக்கிறாள்)

லீலா : ''அன்பே.....''

கடிதத்தை தபாலில் சேர்த்த லீலா பதிலுக்காகக்காத்திருக்கிறாள். தபால்காரன் வருகிறான்,

லீலா : சந்திராவுக்கு ஏதாவது லெட்டர் இருக்கா...?

தபால்காரன் அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறான்,

லீலா : தாங்க்ஸ்!

லீலா கடிதத்தை வாங்கிப் படிக்க முயற்சிக்கும்போது கடிதம் சந்திராவுக்கு; தனக்கல்ல என்பதைத் தெரிந்து கொள்கிறாள். ஆனாலும்...?

லீலா : சந்திரா...!

(அங்கே சந்திரா வருகிறாள்.)

சந்திரா : என்ன இது? எனக்கு வந்த லெட்டரை நீ எதுக்காகப் பார்த்தே?

லீலா : இல்லை இது என் கடிதம்.

சந் : உன் கடிதம் என் பேருக்கு வருமா என்ன?

லீலா : ஆமாம்! நான்தான்... உன் பெயரை எழுதினேன்... நீதானே என்னை எழுதச் சொன்னாய்?

சந் : ஓகோ... புரிஞ்சது! சரி உன் கடிதத்தை நீயே எடுத்துக் கொள்... (வெளியேறுகிறாள்).

ராஜூ ஒரே நாளில் இரண்டு கடிதங்கள் எழுதினான். ஒன்று லீலாவுக்கு. மற்றது அவன் அப்பாவுக்கு. ஆனால் அவற்றின் கவர்கள் மாறி விட்டன.

லீலா கடிதத்தைப் படிக்கிறாள் அப்பாவுக்கு அனுப்ப வேண்டிய கணக்கு வழக்குகளைக் கொண்ட கடிதத்தை அவளுக்கு அனுப்பி விட்டிருந்தான் ராஜூ.

''இந்த மாதம் இரண்டாயிரம தொழிலாளர்கள் தேவை. அறுவடை காலமானதால், ஆட்கள் கிடைக்கவில்லை. பதினைந்து லட்சம் செங்கல தேவை. ஐநூறு டன் சிமெண்ட உடனே வேண்டும். இரும்பு சாமான் இன்னும் வரவில்லை''

லீலா : இரும்பு சாமான்களா!

காட்சி 3

அப்பாவிடம், சந்திராவுக்கு தான் எழுதிய காதல் கடிதம் சிக்கியதை அறிந்து போஸ்டாபிஸுக்கு ஓடு கிறன் ராஜு. (ராஜுவிடம் போஸ்ட்மாஸ்டர் கூறுகிருர்.)

போ. மாஸ் : தபால்லெ போட றத்துக்கு முநதியே எந்த லெட்டரை எந்த கவர்லே போடறேம்னு நல்லா பார்திருக்கனும்பா! இப்பெ வருத் தப்பட்டு என்ன பிரயோஜனம்? பூனை ஏப்பம் விட்ட பிறகு புருவைத் தேடிப் பிரயோஜனம்?

ராஜ : கோவிந்தா கோவிந்தா!

போ. மஸ் : உன் நிலைக்கு மிகவும் பரிதாபப்படுகிறேன் ராஜு!

ராஜ் : என்ன பரிதாபம்? நல்லா பரிதாபப் படுங்க. இதுக்காகத்தான். நூறு மைல் ஓடிவந்தேனுக்கும்? வணக் கம போஸ்ட் மாஸ்டர்!

காட்சி 4

லீலா ராஜுவைச் சந்திக்க வீட் டுக்குத் தெரியாமல் கிளம்பி விடு கிருள் அப்பா போலீசுக்குத் தக வல் கொடுக்கவே அலகாபாத்தில் தொலைந்த பெண்ணை பஸ்களில் தேடுகின்றனர் போலீஸார். அவள் போகும் பஸ் நிறுத்தப் படுகிறது.

டிரைவர் : என்ன விஷயம் சார்?

போலீஸ் : அலகாபாத்திலே காணுமல் போன ஒரு பொம்பளை யைத் தேடறேம்.

டிரை : நல்லாயிருக்கு சார்.....! பொம்பளை காணுமற் போனது அலகா பாத்லே. நீங்க தேடறது இங்கே... பேஷ்...

போலீ : (லீலாவிடம்) ஏய் எங்கே போறெ?

லீலா : எங்கே... அந்தக் கார்?

போலீ : உன் பேரென்ன?

லீலா : புஷ்பா.

யாருடையது என்றறியாமல் ராஜுவின் காரில் ஏறிப்படுத்து விடு கிருள் லீலா. அவன் வந்து அவளி டம் விசாரிக்கிருன்.

ராஜ் : (லீலாவிடம்) நீ யார்? ஆகாசத்திலே இருந்து குதிச்சியா? இல்லெ, பாதாளத்திலே இருந்து பறந்து வந்தியா?

லீலா : அதெல்லாம் எனக்குத் தெரியாது.

ராஜ்: உனக்கே தெரியாதா? ரொம்ப சரி.

லீலா : நான் இப்போ எங்கே இருக்கேன்?

ராஜ் : நரகத்திலே...

லீலா : ரொம்ப நல்ல இடமா யிருக்கே?

ராஜ் : இதோ பார்! என் பொறுமையோட விளையாடாதே! நான் ரொம்பப் பொல்லாதபயல். யார் நீ? எங்கே யிருந்து வந்தெ? எதுக் காக வந்தெ? உன் புரோக்ராம் என்ன?

லீலா : எனக்குத் தெரியாது.

ராஜ் : ஆல்ரைட் மேடம்! உன் டிக்கட இத்தோட காலாவதி ஆயி டிச்சு. இறங்கு. போலீஸ் உன்னைத் தேடி வந்தாடுவாங்க. (லீலா போகி ருள்.)

ராஜ் : என்னை என்ன முட்டாள் பயன்னு நெனைச்சியா?

ராஜ்: (லீலாவிடம்)... இதோ பார்... நானும் ஒரு பெரிய மனுஷன் தான்...அது உனக்கே புரிஞ்சிருக் கும்...

லீலா ; உம்...

ராஜ் : இப்போதாவது சொல் லேன .. நீ எங்கே போகனும்...?

லீலா : நான் மொதல்லியே சொல்லலல்லே? எனக்குத் தெரியாது.

ராஜ்: சத்தம்போடாதே அம்மா! நீ... யாருனனு நல்லா தெரிஞ்சுட் டுது. உன் கதை என்னுனனும் புரிஞ்சுட்டுது.

லீலா : என்ன கதை...?

ராஜ்: புதுசா ஒண்ணுமில்லே. தினமும், சினிமாவிலே பார்க்கற கதை தான்... ஒரு காலேஜ் பெண் – ஒருத்தனைக் காதலித்தாள் அம்மா, அப்பா இன்னொரு முட்டாளைக் கொண்டு வந்தாங்க—பெண் வீட்டை விட்டு ஓடிட்டா... அந்த எழவெடுத்த காதல் நெருப்பு நான்கே நாளில் அணைஞ்சுட்டது... பெண் திரும்பியும் வந்துவிட்டாள் .. வேறு வழியில்லே... அப்பா பார்த்த அந்த முட்டாள் பயலேயே கலியாணம் பண்ணிகிட்டா. சில வருஷங்கள் பறந்தன..

ராஜ்: அந்த தம்பதிகள் பல குழந்தைகளைப் பாரத மாதாவுக்காகப் பெற்றெடுத்தனர். கோவிந்தா... கோவிந்தா...

லீலா : அந்த முதல் காதலனின் கதி ?

ராஜ்: இதயம் வெடிச்சு செத்துப் போயிட்டான்... நான் பெண்ணின் கதையைத் தானே, உனக்குச் சொன்னேன்.

லீலா : பாவம்... பரிதாபமான கதை.

ராஜ்: அதனால்தான் சொல்றேன். வீட்டுக்குத் திரும்பிப் போயிடுன்னு... வாலிபக் கனவுகள் - வாழ்க்கைக்கு உதவாது. சத்தியமாச் சொல்றேன் உன்னை பத்திரமா உன் வீட்டுக்கு கொண்டுபோய் விட்றேன் .. சொல்!

லீலா : போதும்... சும்மா பிரசங்கம் பண்ண வேண்டாம்.

(கார் டயர் வெடித்து விடுகிறது)

லீலா : காத்து இறங்கிடுத்தா?

ராஜ் : இல்லெ — பர்ஸ்டாயிடிச்சு. கிட்டெ யிருக்கற தபால் ஆபீஸுக்கு போயி தந்தி கொடுக்கணும்.

லீலா : தபால் ஆபீஸா?

ராஜ் : ஆமாம், ஏன் ?

லீலா : நான் ஒரு லெட்டர் போஸ்ட் பண்ணணும்.

ராஜ் : இதோ பாரும்மா, தபால் ஆபீஸ் அஞ்சு மைல் தூர மிருக்கு. உன்னை நான் சுமந்தூட்டுப் போக முடியாது.

லீலா : வேண்டாம். என்னால் நடந்தே போகமுடியும். உங்களுக்குப் பயமாயிருந்தால் தந்தியைக்கொடுங்க நானே அனுப்பறேன்.

ராஜு : அந்த மடப்பயல் மகா மந்திரவாதியாகத்தான் இருக்கணும்.

லீலா : யார்?

ராஜ்: யாரா? எவன் கடிதத்தை தபாலலே போட அஞ்சு மைல் நடக்கறேன்னு சொல்றியோ அந்த மனுஷன்.

நடக்க ஆரம்பிக்கின்றனர்.

ராஜ் : களைப்பா இருக்கா? ஊர் கிட்டெ வந்தாட்டோம்.

ராஜு : (வாராவதியை பார்த்து) உலகத்திலே ரொம்ப பேர் அதிர்ஷ்ட சாலிகளாகவே பிறக்கறுங்க.

லீலா : என்ன ?

ராஜ்: ஆமாம். உன்னைப் போலத் தான்.

லீலா : ஆமாம் உன் அதிர்ஷ்டந்தான் இப்படி பாலத்தை உடச்சிருக்கு. உம் சரி. வாங்க.

ராஜ்: உனக்கு நீந்தத் தெரியுமா?

லீலா : நீந்தத் தெரியாது. சந்தர்ப்பம் வந்தா முழுகத் தெரியும்.

ராஜ் : இப்போ ரொம்ப நல்லா புரியுது.

லீலா : என்ன ?

ராஜ் : அந்த மடையன் மந்திர வாதிங்கறது நிச்சயமாப் புரியுது. உம், சரி நீ உன் விதியோட விளையாடு போ, நான் வேடிக்கை பார்க்கறேன்.

லீலா நீரில் இறங்கி நடக்க ஆரம்பித்தவள் ஆழத்தில் அழுந்திவிடவே அவளைத் தோளில் தூக்கிக்கொண்டு நடக்கிறுன் ராஜு. அவள் அவன் தோளில் குதிக்கிருள்.

ராஜ் : என்னம்மா இது?

லீலா : சவாரி நல்லாத்தானிருக்கு.

ராஜ் : சரிதான் இந்த காலத்லே உபகாரம் செய்யறதே ஆபத்து.

லீலா : ஏன் ?

ராஜ் : ஏனு ..! உபகாரம் பண்றவன் மேலே உலகம் சவாரி செய்யுதும்மா...

ராஜுவும் லீலாவும் போஸ்டாபிஸை அடைகிறுர்கள்.

லீலா : நீங்களும் ஒரு கடிதம் எழுதணும்னு சொல்லலே?

ராஜ் : இப்போ மனசு மாறிட்டது.

லீலா : ஏன்...? உங்க இருதய வீட்லே இருந்தவர்கள் இடம் மாறி விட்டார்களா...?

ராஜ் : ஆமாம்... விடுன்னு சொனனதும நினைவு வருது.

லீலா : என்ன ?

ராஜ் : நீ உன் வீட்டுக்கு எப்படி போகப் போறே ?

லீலா : வந்த வழியாத்தான் போகணும்.

ராஜ் : முடியாதம்மா... ஓடையிலே வெள்ளம் அதிகமா யிருக்கும். இராத்திரி முழுக்க இந்த கிராமத்திலேதான் இருக்கணும் அட ராமச்சந்திரா...! என்னென்ன சிரமண்டா எனக்கு வருது...

லீலா : நான் இருக்கறது உங்களுக்கு சிரமம்னு நினைச்சா இதோ... இப்போதே போயிடறேன்.

ராஜ் : பொறும்மா பொறு... நான் போஸ்ட்மாஸ்டர் கிட்டெ கேட்டுப் பார்க்கறேன். அவர் உனக்கு தனியா ஒரு அறை கொடுப்பார்.

போஸ்ட் மாஸ்டர் ஒரு அறைக்கு அழைத்துச் செல்கிறுர்.

போஸ்ட் மாஸ்டர் : (ராஜுவிடம்) ஏதோ ஏழைக் குடிசைதானுங்க... எப்படியும் நீங்க இந்த ராத்திரி இருக்கறதுக்கு வசதி பண்ணித் தரேனுங்க...

ராஜ் : அருமையான இடம் சார். இதுவும் இல்லேன்னு... ராத்திரி முழுக்க நடு ரோடுதான். நம்ம பங்களாவா யிருந்திருக்கும்.

போ. மா. : அடேடே... இரண்டு பேரும் மழையிலே நனைஞ்சுட்டிங்களே...!

ராஜு: பரவாயில்லே சார். நாங்க பாத்துக்கறோம். ரொம்ப தேங்க்ஸ் சார் (போஸ்ட் மாஸ்டர் வெளியேறுகிறார்.)

லீலா: (ராஜுடம்) ரொம்ப பெருமையா பேசி அவரை அனுப்பிச்சுட்டிங்க. இப்பொ மாத்திக்கொள்ள துணிகூட இல்லையே... என்ன பண்றதாம்...?

ராஜ்: இந்தா இதை உடுத்திக்கொள். இல்லாவிட்டா உனக்கு குளிர்ஜுரம் வந்துடும் "சீ" சின்னு தும்முவே... அப்புறம் நான் நர்ஸா மாறணும்.

அறைக்கு வெளியே போய் ஒரு நகர டப்பாவுக்குள் புகுந்து கொள்ளுகிறான் ராஜு.

ராஜ்: இன்னும் தூங்கலையா?

லீலா: தூக்கம் வரல்லெ.

ராஜ்: அந்த முட்டாளையே நினைச்சிட்டிருந்தா தூக்கம் எப்படி வரும்?

லீலா: உம்.... நீங்கள் யாரையுமே காதலித்ததில்லையா?

ராஜ்: உண்டும்மா உண்டு.

லீலா: அது யார்?

ராஜ்: ஆனால் உன்னைப் போல வீடு வாசலை மறந்து ...

லீலா: யார் பின்னாலும் ஓடினதில்லே. அப்படித்தானே?

ராஜ்: ஓடியிருக்கிறேன். குழந்தைப் பருவத்திலே இருந்து ஓடியலைகிறேன். குளிர்ந்த சந்திரனோடு கொஞ்சி விளையாட ஆசைப்பட்டேன் ஆனால் இதுவரைக்கும் முடியல்லெ. சரி சரி. நீ கதவைத்தாள் போட்டுட்டு பேசாமல் தூங்கு.

மறுநாள் காலை எழுந்திருக்கும் போது ராஜு லீலாவின் அறையை வெளிப்பக்கம் தாளிட்டு விட்டுப் போய் விடுகிறான். கதவைத் தட்டுகிறாள் அவள்.

லீலா: கதவைத் திறங்க கதவைத் திறங்க.

போஸ்ட் மாஸ்டர் கதவைத் திறக்கிறார்.

லீலா: கதவை யார் தாள் போட்டது?

போ. மா: அவர்தாம்மா. வெளியே போயிருக்கார்.

லீலா: வெளியே போயிட்டாரா? எங்கே?

போ. மா: ஆமாம்மா...ஆனால உங்களுக்கு வேண்டிய ஏற்பாட்டை யெல்லாம் செய்தூட்டுதான் போயிருக்கார்.

லீலா: ஏற்பாடா, என்ன ஏற்பாடு?

போ. மா: நடு ராத்திரிலே என்னை எழுப்பினார். அலகாபாத் போலீஸுக்கு ஒரு தந்தி கொடுத்தார் ஒரு பெண் தனியா ஓடிவந்தூட்டுது வந்து அழைச்சுகிட்டுப்போங்கன்னு.கொஞ்ச நேரத்திலே வந்துடுவாங்க.

லீலா: அந்த ஆள் யார் இப்படிச் செய்ய?

போ. மா: அவரும் இப்படியே தாம்மா கேட்டார். நான் அந்தப் பெண்ணுக்கு உறவாயிருந்தால், காதைப் பிடிச்சு கொண்டு போய் வீட்டிலே விட்டிருப்பேன்னு சொன்னார்.

அங்கிருந்து லீலா வீடு திரும்புகிறாள். வீட்டிலே அவள் தன்னுடன் சண்டை போட்டுக் கொண்டு போனதாக சந்திரா கூறியிருந்தாள். மீண்டும் தபாலாபீஸில் ராஜை சந்திக்கிறாள் லீலா.

அங்கே ஒரே குழப்பமாகி விடவே ஓடிவிடுகின்றனர் இருவரும். ராஜு சும்மா போகாமல் நன்கு உதை வாங்கிக் கொண்டு போகிறான்.

காட்சி 5

ராஜு லீலாவிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்துப் பதில் எழுதுகிறான்.

''நீ என்னைச் சந்திக்க வேண்டுமானால், இந்த காட்டுக்குத்தான் வர வேண்டும். வரும் நேரம் தெரிந்தால், ஸ்ரீபுரம் ஸ்டேஷனுக்கு வருகிறேன். நீ என்னை எப்படி அடையாளம் தெரிந்து கொள்வாய்? நான் என் கோட்டில் ஒரு ரோஜாப் பூவை அணிந்து வருகிறேன். அதுதான் அடையாளம்''

லீலா: (ராஜூ கடிதத்தைப் படித்து முடிந்ததும்) இந்தக் குழப்பத்துக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அவரிருக்கும் இடத்தை வெறுப்பது நானல்ல. சந்திராதான் என்பதை அவருக்கு நேரில் சொல்லத்தான் வேண்டும்.

லீலா ஸ்ரீபுரம் வருகிருள். சந்திராவை எதிர்பார்த்த ராஜூ லீலாவைக் கண்டு ரோஜாப் பூவை எறிந்து விடுகிருன்.

லீலா: யார்! நீங்களா?

ராஜ்: நான்தான். என்னைச் சந்திப்பதற்கு எவ்வளவு கஷ்டப் பட்டு வந்திருக்கிருய்?

லீலா: உங்களைச் சந்திப்பதா?

ராஜ்: நான் என்ன அவ்வளவு கேவலமா? நான் ரொம்ப—ரொம்ப அழகா இருக்கேன்னு எல்லோருமே சொல்ருங்க.

லீலா: அவங்க குருட்டுப் பசங்க போலிருக்கு!

ராஜ்: இருக்கலாம்.

லீலா புஷ்பத்தை எடுத்து விட்டெறிவதைப் பார்க்கிருன் ராஜூ.

ராஜ்: என்ன அது?

லீலா: போதும்! பேச வேண்டாம். முகத்தைப் பார், முயல்குட்டி மாதிரி.

ராஜ்: ஓ புரிஞ்சுது! அந்த முட்டாள் பயல் உன்னை வரவேற்க வந்திருக்கான் போலிருக்கு. நம்மைப் பார்த்ததும் கோபமா திரும்பிப் போருன். சேச்சே! இந்த உலகமே ஒரு பொருமைக் காடு.

லீலா: உங்களை என்ன பண்ணணும் தெரியுமா?

ராஜூ: ஆகா தெரியுமே. அன்னிக்கு போஸ்ட் ஆபீஸிலேயே, நடந்திருக்க வேண்டியது. உம் நடக்கட்டும். ஒரு வேளை, அந்த முட்டாப் பயலும், அணை கட்ற இடத்திலே தான் வேலை செய்யருனே என்னவோ? சரி நானும் அங்கேதான் போறேன். வா போகலாம். கார் ரெடி.

லீலா: எனக்கு கால் இருக்கு. நடந்தே போறேன். உன்னோட ஒரு அடி கூட வரமாட்டேன்.

தானாகவே இயங்கும் பிஸ்டல்
(ஆறு ரவை கொண்டது)



தானாகவே இயங்கும் விசையுடன் கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல்.

விலை ரூ. 8-8-0. வி. பி. செலவு ரூ. 1-12-0 தனி. 12 ரவைகள் இனம். அதிகப்படி ரவைகள் டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 1-4-0. பிஸ்டல் பெட்டி ரூ. 2-8-0. கடிதங்களை ஆங்கிலத்தில் மட்டும் எழுதவும்.

வீட்டு சினிமா புரொஜக்டர்



35. மி. மீ. டார்ச் அல்லது எலக்ட்ரிக் பல்பில் இயங்கும். விலை 3 அடி பிலிம்களுடன் ரூ. 12—8—0 வி. பி. செலவு ரூ. 3/. தனி.

பிரத்யேக பிலிம் சுருளுக்கு கெஜம் 1-க்கு அணு 8.

Lucky Co (P. M.) Katra, ALIGARH.

ராஜ் : ஜாக்கிரதை! மறுபடியும் அலகாபாத போலீஸைக் கூப்பிடு வேன்.

லீலா : கூப்பிடுங்க. இப்பொ எனக்குப் பயமில்லே. இந்த உலகத்தி லிருந்து ரொம்ப தூரம் வந்தட் டேன்.

காட்சி 6

காரில் வரும்படி அவளை அழைக் கிருன் ராஜு. கார் அவளருகில் செல்கிறது.

ராஜ் : எ;ன்னோட சண்டை போடம்மா. உன்னோடவே நீ சண்டை போட்டுப் பிரயோஜனம்? வா போகலாம்.

காட்சி 7

வேலைக்கார ரங்கனிடம், 'மலைச் சாரலில் ராஜு காத்திருப்பதாக வரும் பெண்ணிடம் சொல்!' என்று கூறி மலைச்சாரலுக்குச் செல்லுகி ருன் ராஜு. லீலா வருகிருள்.

ராஜ் : என்னம்மா! அந்த முட் டாப்பயலைப் பார்த்தாச்சா?

லீலா : நீ.. நீ...நீ...நீயா...

ராஜ : ஆமா...ஆ...ம.. மா......நான் தான்...

லீலா : உங்களை ரொம்ப கேட் டுக்கறேன். தயவு செய்து போயி டுங்க. ஸ்டேஷன்லே அவர் நம் மைப் பார்த்துட்டுப் போயிட்டார். நான் அவரைப் பார்க்க எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்திருக்கேன் உங்களுக்கு கொஞ்சம் கூட இரக்க மில்லையா?

ராஜ் : ஒரு நிமிஷம் நான்தான் அந்த முட்டாளாயிருக்கேனே. வா. இப்படி உட்கார், பார் இந்தக் காட்சி யை. அவன் வந்ததும் நான் ஓடிப் போயிடுவேன்.

லீலா : முடியாது..முடியாது முடி யாது! ஒரு விநாடி கூட இருக்கமாட் டேன். இதோ நான் இந்த ஏரி யிலே விழுந்து சாகப் போறேன்.

ராஜ்: சரி எனக்கும் இங்கே வேலையில்லே அலை வீசும் ஏரிகள் இரவெனும் போர்வையில் இனிமை யாகத் தூங்குகின்றன. சந்திரக் கிர ணங்கள் சந்தோஷமாக விளையாடு கின்றன. நட்சத்திரங்கள்...

லீலா : (ராஜுவிடம்) ஓ ராஜு!

ராஜ் : நட்சத்திரங்கள் எல்லாம் கண் சிமிட்டிச் சிரிக்கின்றன. இந்த இயற்கை உலகம் உனக்குப் பிடிக் காது நீ விரும்பத்தான் வேண்டு மென வற்புறுத்தவில்லை ஆனால் யாராவது இந்த ஸ்வர்க்கத்திலே என் னோடு வாழ வேண்டும்.

லீலா : ராஜு!

குறைந்த விலையில்
சிறந்த ஸ்டவ்!

அமெரிக்கன் புதுமாதிரி ஸ்டவ். உங்கள் தினசரி உபயோகத்திற்குச் சிறந்த சாதனம். சிற்றுண்டிகள். வெந்நீர், தேநீர் தயாரிக்க எளிய முறையில் இதை உபயோகிக்கலாம். விலை ரூ. 6/ தபால் செலவு ரூ. 1-8-0 தனி.

பாக்கெட் பிரிண்டிங்
பிரஸ்

இதன் மூலம் விலாசங்களையும், பில் விஸிடிங் கார்டு இவைகளை லகுவில் அச்சடித்துக் கொள்ள லாம் அச்சடிக்கும் மையுடன் சேர்ந்து இதன் விலை ரூ. 5/- பாக்கிங்கும், தபால் செலவுக்கும் ரூ. 1-8-0 தனி. கடிதப் போக்கு வரத்து ஆங்கிலத்தில்தான் வைத்துக் கொள்ளப்படும்.

GLOBE TRADING CO;(P.M.)
ALIGARH. U. P.

ராஜ் : சந்திரா! நீ அந்த மடையனை நேரில் பார்த்தால் கட்டாயம் வெறுப்பாய் என்று நான் முதலிலேயே சொல்லலேலே?

லீலா : நீங்கள் எண்ணுகிறபடியுள்ள பெண் நானல்ல ராஜு!

ராஜ் : உன்னைப்பற்றி நான் ஒன்றும் நினைக்கவில்லை சந்திரா! நீ என்னருகில் இருந்தால் போதும்.

லீலா : ஒரு விஷயம்.

ராஜ் : பேசவேண்டாம் சந்திரா! பார்த்தாலே போதும். இதோ பார்.

ஒரு வயதானவன் தம்பதிகளை அழைத்து வருகிறான்.

வயோதிகன : எஜமான்! இவங்களுக்கு இன்னிக்குததான் கலியாணம் ஆச்சு. ஆசிர்வாதம் பண்ணுங்க.

ராஜ் : மங்களம் உண்டாகட்டும். உலகத்து சந்தோஷமெல்லாம் உங்களுக்கே சொந்தமாகட்டும்.

(சந்திராவிடம் ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து) சந்திரா நீயும் ஆசிர்வாதம் பண்ணு.

லீலா : நானு!

ராஜ் : ஆமாம் நீ தான், இந்த டிபார்ட்மெண்ட் எல்லாம் உன்னது தான்.

லீலா : அந்தப் பொண்ணு எவ்வளவு அழகாயிருக்கா தங்கப் பொம்மை மாதிரி!

ராஜ் : ஆமாம். இப்போ மாப்பிள்ளை வைரப் பொம்மையுடன் விளையாடப் போகிறான், அதோ அந்த ஆசிரமத்தில்... அவனாலேயே கட்டப்பட்டது. நீயும் பார்க்கிறாயா?

லீலா : உம் எங்கே?

ராஜ் : அதோ! அந்த மலைச்சாரலில்...

லீலா : ரொம்ப அழகா இருக்கு... அதுசரி...நான் உங்கள் சந்திரா இல்லை என்றால் என்ன செய்வீர்கள்?

ராஜ் : இல்லை என்றாலா...? என் இன்ப மாளிகை தகர்க்கப்படும்... உன் வரவால் வஸந்தம் வந்தது. நீ பிரிந்தால் எல்லாம் வறண்டுவிடும்...

லீலா : ராஜு! நீங்களே ஒருதடவை சொல்லியிருக்கீங்க, வாலிபக் கனவுகள் வாழ்க்கைக்கு உதவாதுன்னு...

ராஜ் : நம் கனவு பலிக்கணும்னு நீ நினைச்சா நாளைக்கே எங்கப்பாவிடம் இதைப்பற்றிப் பேசறேன் சந்திரா!

லீலா : ராஜு!

ராஜுவை மணக்க முடியாது என்று மறுக்கிறாள் சந்திரா. லீலாவை சந்திரா என்று நினைத்த ராஜு இதை நேரில் அறிய சந்திராவின் வீட்டுக்கு வருகிறான். யாரும் உள்ளே அனுமதிக்க மறுக்கவே மனமொடிந்து போகிறான்.

காட்சி 8

லீலா கதவைத் திறக்கச் சொல்லுகிறாள்.

லீலா : (சந்திரா) இது அநியாயம். நான் கதவைத் திறக்கத் தான் போறேன்.

சந் : லீலா!

லீலா : கொஞ்சம் பொறுமையாயிரு அக்கா.

சந் : ஜாக்கிரதை. என் சொந்த விஷயத்தில் நீ தலையிடாதே!

லீலாவின் மனம் பேசுகிறது.

லீலா : பயப்படாதே லீலா... ராஜுவிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடு. அவர் உன்னைக் கோபிக்கலாம். பரவாயில்லை. அவர் உண்மையை அறிந்தால் போதும்.

லீலா : ராஜு ..!

ராஜுவிடம் போகிறாள் அவள்.

லீலா : ராஜு!

ராஜ் : சந்திரா! எங்கு வந்தாய்? என் உயிர் இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்துகொள்ள வந்தாயா? எரியும் மனத்திலே எண்ணெயைக் கொட்ட வந்தாயா? ஊசலாடும் உயிரை உன்னுடன் கொண்டு போக வந்தாயா?

லீலா: இல்லே ராஜு'(பாதத்தைத் தொட்டு) மன்னிப்பு கேட்க வந்தேன்.

ராஜ்: சந்திரா!

லீலா: நான் சந்திரா இல்லே ராஜு! அவள் தங்கை லீலா. சந்திரா உங்கள் முதல் கடிதத்தைக் கண்ட அன்றே உங்களே வெறுத்து விட்டாள். அந்தக் கடிதங்களே யெல்லாம் நான்தான் உங்களுக்கு எழுதினேன். பெயர்தான் அவளுடையது. கடிதம் என்னுடையது.

ராஜ்: லீலா!

லீலா: சொல்லுங்கள் என்னை மன்னிப்பீர்களா?

ராஜ்: உஸ், பேசவேண்டாம் லீலா! இதோ பார். இந்தப் பசுமலேகள் என்ன பேசுகின்றன? நீல ஏரிகள் எதை நினைக்கின்றன? சந்திரக் கிரணங்கள் என்ன பதில் சொல்கின்றன? உன் அப்பாவைப் பார்க்க நான் நாளை மறுநாள் வருகிறேன். அப்போது என்னை தடை செய்வாயா?

லீலா: நோ!

ராஜ்: சந்திரா...

ரா. வெற்றிச்செல்வன்

தென்னிந்திய புகழ் நாடக கலாநிதி, சாஹித்ய பூஷணம் எப். ஜி. நடேசய்யர் அவர்களுடன் 'பிரஹ்லாதனுக' நடித்து 'இலட்சிய பிரஹ்லாதன்' என்று பொதுமக்களால் சிறப்பிக்கப்பட்டவன்.

பல பொதுமேடைகளில் தமிழில் சொற்பொழிவாற்றி 'இளம் விவேகானந்தன்' என்று பாராட்டப் பெற்றவன்.

அகில இந்திய ரேடியோ-திருச்சி, நாடகங்களுக்கு சிறுவன் பாத்திரமேற்க அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவன்.

இச்செல்வனேப் படவுலகமும் தேர்ந்தெடுத்து அவனுடைய கலே உணர்ச்சியை வளர்க்குமென எதிர்பார்க்கிரேம். செல்வனின் வயது எட்டு. தாய்மொழி தமிழ். ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம் இவற்றில் ஞானமுண்டு. திருவாசகம், திருக்குறள் முதலியவற்றில் சிறந்த பயிற்சி உண்டு.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

The boy will be an asset to any film concern seeking a fine boy-actor and I strongly recommend him to producers and directors of film.

(Sd) F. G. NATESA IYER, Retd. D. T. S. S. I. Ry. 'Nataka Kalanidhi'

விலாசம்: பண்டிட் தெ. இராதாகிருஷ்ணன்
கட்டில்பாறை வீதி, மலேக்கோட்டை, திருச்சி.

லீலா : ஹோ

ராஜ் : நீ...

லீலா : ராஜு! இதென்ன ஜுரமா?

ராஜ் : ஜுரமா... எனக்கா... சேச்சே இது அன்பின் அதிர்ச்சி லீலா! உன்னைக் கண்டதும் இதயம் கொதிக்கிறது.

லீலா மகிழ்ச்சியோடு வீடு திரும்புகிருள்.

சந் : யாரை அழிப்பதற்கு இந்த அலங்காரம் லீலா?

லீலா : கொஞ்ச நேரத்தில் தெரியும்.

சந் : அந்த மடையன் யார்?

லீலா : கொஞ்சம் பொறு தெரியும்.

சந் : அப்பாவைப் பார்க்க வருகிருனு?

லீலா : ஆமாம்.

கதவு தட்டப்படுகிறது.

லீலா : நில் நானே திறக்கிறேன்.
ரேடியோ மெக்கானிக் : (லீலாவிடம்) இந்தாம்மா! உங்க ரேடியோ ரிப்பேர் ஆயிடிச்சு, இனிமே நல்லா வேலே செய்யும்.

சிவதாஸ் : (சந்திராவிடம்) யாரம்மா அவன்?

சந் : கடவுளுக்குத்தான் தெரியும், லீலாவோ ஊமை மாதிரி ஆயிட்டா அவன் பேரு ஊரு எதுவுமே, எனக்குத் தெரியாது!

காட்சி 9

லீலாவை மணக்கும் மகிழ்ச்சியிலிருக்கும் ராஜுவிடம் அவன நண்பன் டாக்டர் கைலாஸ் அவனுக்கு க்ஷயரோகம் என்று கூறவே, லீலாவின் வாழ்வைப் பாழ்படுத்த விரும்பாது, அவள் தன்னை வெறுக்க வேண்டும் என்பதற்காக சந்திராவுடனேயே கொஞ்ச ஆரம்பிக்கிருன்.

சந் : அவன் யார்?

டாண்டி : அவன் தான் ராஜூ. கோடீஸ்வரன் கோபால்தாஸின் ஒரே மகன்.

சந் : ஓ...

ராஜ் : (கைலாஸிடம்) கைலாஸ்! அந்தப் பெண் யார்? நீலப் புடவைக்காரி.

கைலா : லீலாவின் சகோதரி

ராஜ் : ஓ...

கைலா : என்னப்பா அது? ஓ. !

ராஜ் : (சந்திராவிடம்) மே ஐ ஹாவ் தி பிளெஷர் ஆப் டான்ஸ் வித் யூ?

சந் : எக்ஸ்யூஸ் மி!

ராஜ் : நீதான் சந்திராவா?

சந் : நீங்கள் யார்? விநோத மனுஷராயிருக்கிறீர்?

ராஜ் : நானு? நான்கு கால்கள் ஆறு கொம்பு...

சந் : அப்படியெல்லாம் இல்லே.

ராஜ் : அதுமாதிரின்னு நினைச்சுக் கோபயன்.

சந் : உங்களுக்கு. காடு—மலே—ஏரி—இதெல்லாம் ரொம்பப் பிடிக்குமா?

ராஜ் : ஆமாம், அந்த இடந்தான் என் ஸ்வர்க்கம். ஆனல் உனக்காக அந்த ஸ்வர்க்கத்தைக் கூட தியாகம் செய்து விட்டேன்.

சந் : எத்தனை நாளைக்கு இங்கு இருக்கப் போறீங்க?

ராஜ் : அது உன் விருப்பத்தைப் பொறுத்தது.

சந் : நாளைக்கு நம் வீட்டிலே விருந்து. அவசியம் வரணும். மறக்க மாட்டீங்களே.

ராஜ் : நிச்சயமாக வருவேன்

காட்சி 10

சந் : (லீலாவிடம்) கிளப்பிலே யாரைப் பார்த்தேன்னு உனக்குத் தெரியுமா?

லீலா : உம்.

சங் : ராஜூ . அன்று அவரைப் பார்க்காமலே ஏதேதோ பேசினேன், ஆனால் பேசிப் பார்த்த பிறகேதான் தெரிந்தது. ராஜூ ஒரு அபூர்வ மனிதன்.

லீலா : என்ன?

சங் : வேண்டாமென்று எறிந்த ரத்திரனம் திரும்பியும் இடைத்தால் எவ்வளவு ஆனந்தம் வருமோ, அவ்வளவு ஆனந்தம் அடைந்தேன் ராஜூவைப் பார்த்து. இது என் அதிர்ஷ்டந்தான்.

லீலா : அவர் என்ன பேசினார்?

சங் : எனக்காக அவர் அந்த வனவாசத்தை விட்டு விட்டாராம். எத்தனை நாள் இருப்பீர்கள் என்று கேட்கேட்டேன். அதுவும் என்னிஷ்டம் என்று சொன்னார்.

லீலா : வேறு விஷயம் ஏதாவது இருக்கலாம்.

சங் : என்ன வேறு விஷயம்?

லீலா : ஒன்றுமில்லை அக்கா.. என்னவோ நினைத்து ஏதோ பேசி விட்டேன்.

சங் : எல்லாம் தெரியும் லீலா! இதையெல்லாம் உன்னிடம் சொல்லவே கூடாது.

லீலா : எதையெல்லாம்?

சங் : நானும் அவரும் பேசியதைதான். வருததப்படாதே லீலா. ஒரு தடவை நான் பெறத்தவறிய செல்வம் எனக்குக் கிடைத்தது. அதேபோல் உன் காதலனும் உன்னைத் தேடி வருவார்.

லீலா : உஹூம்! இனி அவர் வரமாட்டார்.

சங்: அவசியம் ராஜூ வருவார் லீலா! நம் விட்டில் நாளை விருந்து. லீலா! இதோ இங்கே அப்பா; இங்கே அம்மா; அங்கே நீ; இதோ இந்த சேர்லே நான்; அந்த சேர்லெ ராஜூ; அவர் என் எதிரில் தான் உட்காருவார். ஒருவரை யொருவர் பார்த்தபடியே இருப்போம். எப்படி ஏற்பாடு?

லீலா : ரொம்ப அழகாயிருக்கு

கதவு தட்டப்படுகிறது.

சங் : நீயிரு லீலா, நான்தான் திறப்பேன்.

கதவைத் திறக்கிருள்.

சங் : வெல்கம் ஸார்! சொன்னபடியே வத்தூட்டிங்களே!

ராஜ் : சொன்ன வார்த்தை தவற மாட்டேன். நீ அழைத்து நான் வராமலிருக்க முடியுமா?

சங் : வாங்க உள்ளே. இதோ இதுதான் என் தங்கை லீலா.

ராஜ் : உங்களைப் பார்த்து ரொமப சந்தோஷம்.

சங் : இவரை உனக்குத் தெரியுமா லீலா?

ராஜ் : ஒரு முறை எங்கோ பார்தத ஞாபகம்.

சங் : கனவிலா?

லீலா போய் விடுகிருள்.

ராஜ் : உம், என் வாழ்வே ஒரு இன்பக் கனவு. பார்த்தியா! உன் சகோதரிக்கு சங்கடமா யிருக்கு.. நான் வந்தது பிடிக்கவில்லை போலிருக்கு.

சங் : அதுவல்ல விஷயம். லீலாவும் ஒரு அன்பரை நேசித்தாள். அவா யாரிடமும் சொலலாமல் எங்கோ போய் விட்டார். அந்த துயரம் தாங்கவில்லை. மாதக் கணக்காக இப்படியே இருக்கிருள். பாவம், அவளுக்கும் சந்தோஷமில்லை. பிறர் சந்தோஷத்தையும் அவள் சகிக்க மாட்டாள்.

ராஜ் : அந்த மனுஷன் யார்?

சங் : யாருக்குத் தெரியும்? லீலாவும் சொல்லுவதில்லை.

ராஜ் : அடாடா! அப்படியா? நான் இதை கேட்டிருக்கவே கூடாது. பாவம், உன் தங்கையின் துயரத்துக்கு தூபம் போட்டு விட்டேன்.

சங் : வேண்டுமென்று நீங்கள் ஒன்றும் செய்ய வில்லையே!

ராஜ் : ஆமாம் எனக்கு எதவுமே தெரியாது.

அவள் அப்பா வருகிறார்.

சிவ : வாங்க உள்ளே போகலாம்.

ராஜ் : (லீலாவிடம்) நீ உட்காரம்மா. நீ சந்திராவின் சகோதரி, நாமிருவரும் இன்னும் நன்றாக நம்மைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சந் : உட்காரேன் லீலா !

ராஜ் : (சந்திராவிடம்) ஆகா ! என் வாழ்விலே ஒரு இன்ப நாள் இது. அந்தப் பாழும் காட்டிலே வாழ்ந்து இதைப்போன்ற சுகங்களையெல்லாம் மறந்திருந்தேன். விழியின் அசைவிலேதான் எத்தனை வினோதம்!

சந் : கவிஞர் போல் பேசுகிறீர்கள்?

ராஜ் : கவிமட்டுமல்ல, கைரேகை கூட பார்ப்பேன். (லீலாவிடம்) எங்கே உன் கை. பார்க்கலாம்.

லீலா : போதும்.

சந் : பார்க்கட்டுமே லீலா !

ராஜ் : ஆகா மகா பிரமாதம். இந்தப் பெண் ஒரு மகாராணி ஆவாள். இதுதான் இதய ரேகை.

லீலா : வீண் வேடிக்கை வேண்டாம்.

ராஜ் : விளையாட்டல்லம்மா! அவ்வளவும் உண்மை. உன் இதயத்தில் இருப்பவன் ஒரு வேஷக்காரன். அவன் சொன்ன ஒரு வார்த்தைக்காக, உன் வாழ்வையே அர்ப்பணித்து விட்டாய்.

சந் : போதும் என் கையைப் பாருங்க...

ராஜ் : உன் கையை எதுக்காக பார்க்கணும்...? என் விதி உன் கையிலே இருக்கு...

பாடச் சொல்லுகிறாள் சந்திரா.

சந் : (லீலாவிடம்) சீ பைத்தியம் அழாதே கண்ணு ! ராஜு, என்ன நினைப்பார்? நீ ரொம்பவும் நல்லா பாடுவேன்னு சொல்லியிருக்கேன்...

பொங்கல்

புது வருஷத்தில் குதூகலத்துடன் விஜயம் செய்யுங்கள்

எமது எவர்சில்வர் பாத்திரங்கள்

வீட்டு உபயோகத்திற்கான நீடித்த உழைப்பும், உறுதியும், நம்பிக்கையும், நீண்டகால உத்திரவாதமும் உள்ளவை.

திருமணங்களில் பெருமனத்துடன் சீர்வரிசை கொடுக்கவும், வெகுமதியாக வெவ்வேறு வகைகளில் பரிசளிக்கவும் மிகப் பொருத்தமானவை

M. A. E N. கிரௌன் & சூரியன் மார்க்கு அலுமினியப் பாத்திரங்களும் உத்திரவாதத்துடன் மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. A. எத்திராஜுலு நாயுடு,

(டெலிபோன் நெ. 4106)

7/4, ஈவினிங் பஜார், மதராஸ்-3.

லீலா : இனி என்னால் பாட முடியாது அக்கா.

ராஜ் : வீட்டுக்கு வந்தது விரோதியானாலும் வரவேற்கணும்! நான் விருந்தாளி, அது மட்டுமா? கைகூட பார்த்தேன். எனக்காக, ஒரு பாட்டு பாடக்கூடாதா?

லீலா பாடுகிறாள்.

ராஜ் : சபாஷ்–சபாஷ்–பியூடிபுல்.

தாயார் : லீலா! என்னடியம்மா?

லீலா : ஒன்றுமில்லையம்மா! கொஞ்சம் தலைவலி.

ராஜ்: நான் வருகிறேன், நாளைக்கு நீ அணைக்கட்டுக்கு வருகிறாயா? லீலாவையும் அழைத்துவா. கொஞ்சமாவது நிம்மதியாக இருக்கட்டும்.

சந்திராவும் லீலாவும் போகின்றனர்.

ராஜ் : (சந்திராவிடம்) நான் காண்பதை உன்னால் காண முடிகிறதா சந்திரா?

சங் : ஏன் முடியாது?

ராஜ் : என்ன பார்த்தாய், சொல் பார்ப்போம்.

சங் : வெறும் மலை, பரந்த ஏரி.

ராஜ் : தவறு. வெறும் மலையல்ல சந்திரா! அதுதான் என் இன்ப மாளிகை. இதுதான் அதன் வாசல். இங்கிருந்து உள்ளே போகிறோம், இரு பக்கமும் இனிய சோலைகள். வளமான வண்ண மலர்கள் தாமரை, அல்லி, மல்லிகை, ரோஜா, பன்னீர்! வா. உன் தலையில் சூட்டுகிறேன்.

சங் : (லீலாவிடம்) லீலா! லீலா!

காட்சி 11

ராஜுவின் செய்கையைக் கண்டு மனமொடிந்த, லீலா கைலாசை மணக்கச் சம்மதித்து விடுகிறாள் இச்செய்தி சந்திராவுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

சங் : இது உண்மையா லீலா?

லீலா : ஆமாம்...

சங் : ஏன்?

லீலா : ஏன்! நான் கலியாணம் செய்து கொள்ளக்கூடாதா?

சங் : எனக்காக ..நீ...

லீலா : இல்லை அக்கா. நான் உனக்கு ரொம்ப சிரமம் கொடுத்து விட்டேன். ராஜு எல்லாவற்றையும் சொன்னார். உன் மங்களத் திலகத்தை அபகரித்து நான் அணிந்து கொள்ள இருந்தேன். என்னை மன்னித்து விடு அக்கா...

சங் : லீலா!

லீலாவின் திருமணத்திற்குக் கிளம்புகிறான் ராஜு. மரணப் படுக்கையிலிருக்கும் அவன் ரீவாவுக்குப் பிரயாணம் செய்வது ஆபத்து என்று டாக்டர் யூசப் கூறியும் அவன் மறுத்து கிளம்புகிறான். அதற்கு முன் அவன் தன் வேலையாள் ரங்கனிடம் ஒரு கடிதத்தைத் தபாலில் சேர்க்கும்படிக் கூறுகிறான். சந்திராவுக்கு ராஜு எழுதிய கடிதம் அது. உள்ளத்து உணர்ச்சிகளை எழுத்துக்களாக வடித்து அவன் எழுதிய கடிதம் அது. அதை அவனே ஒருமுறை படிக்கிறான் சந்திரா.

மாங்கல்யத்தோடு வாழ வேண்டிய லீலாவின் கழுத்தில், மரணக்கயிற்றைக்கட்டக்கூடாது என்பதற்காகவே உன்னோடு காதல் நாடகம் நடத்தினேன். இதுதான் ரகசியம். என் தந்தை டாக்டர் கைலாஸ், ரங்கன் இம்மூவரைத் தவிர, வேறெவருக்கும் இது தெரியாது. இப்போது நான் காவதாக உனக்குச் சொல்லுகிறேன். இந்த சோக முடிவை, எக்காரணத்தைக் கொண்டும் நீ லீலாவுக்கு சொல்லக் கூடாது. ஆமாம்.. இந்த வாக்குறுதியை நீ நிறைவேற்ற வேண்டும். நான் ஒரு மோசக்காரன்; மகா கொடியவன் என்று அடிக்கடி நீ லீலாவிடம் சொல்ல வேண்டும். இதைக்கேட்டு லீலா, என்னைப் பூரணமாக மறக்க வேண்டும்.

ரயிலில் கிளம்பும் அவனோடு டாக்டரும் ரங்கனும் செல்கின்றனர்.

ராஜ் : (வேலையாள் ரங்கனிடம்) ரங்கா! சத்னா ஸ்டேஷன் வந்திட்டுதா?

ரங் : இன்னும் நேரமிருக்குங்க எஜமான்.

ராஜ் : உன் கலியாணத்தைக் காணுமல் நான் சாகமாட்டேன் லீலா! கட்டாயம் உன் கல்யாணத்தைக் காண்பேன் லீலா! என் வாக்கைக் காப்பாற்றியே தீருவேன். நான் உன்னைக்காண ஓடி வருகிறேன். மரணம் என்னை விழுங்க ஓடிவருகிறது. அருமையான பந்தயம். பார்ப்போம்... ஜெயிக்கப் போவது யார் என்று... நானு அல்லது மரணமா?

ரங் : (டாக்டர் யூசப்பிடம்) டாக்டர் சார்! எஜமான் தூங்கிட்டாருங்களா?

டாக். யூச : ஆமாம் தூக்கம் வர இன்ஜக்ஷன் செய்தேன்.

ரங் : அலகாபாத் போற வரையிலும் ஆபத்து ஒண்ணும் இல்லீங்களே?

டாக். யூச : மரணத்தைப் பற்றி மனிதன் முடிவு கட்ட முடியாதப்பா! நீ ராஜுவின் அப்பாவுக்கு தந்தி கொடுத்திருக்க வேண்டும் ரங்கா!

ரங் : எப்படிங்க கொடுக்கறது? அவருக்கோ, இருதய வியாதி! தந்தியைப் பார்த்த அதிர்ச்சியிலே அவருக்கும் ஆபத்து வந்துட்டா?

டாக். யூச : நீ ரொம்ப காளா இவங்க வீட்டிலே இருக்கிருயா அப்பா?

ரங் : ஆமாங்க. எஜமான் ராஜுவைக் குழந்தையிலே இருந்து கொஞ்சி வளத்தவனுங்க விடு போற வரையிலுமாவது இருப்பாருங்களா?

டாக். யூச : சொல்ல முடியாது ரங்கா. வீட்டுக்குப் போறவரையிலும் காப்பாத்திடலாம். ராஜு வீட்டுக்குப் போகிருரா, அல்லது சத்னுவுக்குப் போகிருரான்னு பார்ப்போம். ஆனல், நேற்று முழுக்க ரீவா ரீவா என்று சொல்லிக் கொண்டிருந்தாரே!

ரங் : ரீவாவுக்குப் போக சத்னு ஸ்டேஷன்லேதானுங்க இறங்கணும். அந்த ஸ்டேஷன் எப்பொ வரும்னு எஜமான்கிட்டெ சொல்லக் கூடாதுங்க. நீங்க படுத்துக்கோங்க, நான் பார்த்துக்கிறேன். அந்த ஸ்டேஷன் வர்ற நேரம் எஜமானுக்குத் தெரியவே தெரியாதுங்க.

டாக். பூச : இந்த லீலாங்கறது யாரப்பா?

ரங் : அது ஒரு பெரிய கதைங்க. உம் படுத்துக்கோங்க...

காட்சி 12

ரயிலிலிருந்து டாக்டர், ரங்கன் இருவருக்கும் தெரியாமல் இறங்கிப் போய் விடுகிறான் ராஜு.

ராஜ் : லீலா.. லீலா...

ராஜ் : (ஒரு வண்டிக்காரனிடம்) ரீவாவுக்கு வர்ரியாப்பா. என்னப்பா ரீவாவுக்கு வர்ரியா?

வ. கா : என்னங்க?

ராஜ் : ரீவாவுக்கு வர்ரியா அப்பா?

வ. கா : இந்த நேரத்திலேங்களா?

ராஜ் : ஆமாம்.

வ. கா : உங்களுக்கென்ன பைத்தியமா?

89678

ராஜ் : ஏன்?

வ. கா : பதினறு மைலும் ஒரே காட்டு வழி சாமி! ராத்திரிலே நரியெல்லாம் நடமாடுமுங்க. வெய்டிங் ரூமுலே இருங்க. விடிஞ்சு வண்டி கட்டறேன்.

ராஜ் : தாமதிக்க நேரமில்லே யப்பா! வேண்டிய பணம் கொடுக்கிறேன்.

வ. கா : நீங்க பணம் கொடுத்துடுவீங்க சாமி! வழியிலே எமன் வந்து என்னை மிரட்டுவானுங்களே!

ராஜ் : எமனு? அவன் சதா என்னுடனேயே இருக்கிருன் அப்பா!

வ. கா : என்னுங்க சாமி சொல்றீங்க?

ராஜ் : வரமுடியுமா முடியாதா?

ஐநூறு ருபாய் கொடுக்கிருன் ராஜு.

வ. கா : ஆயுஸ் முழுக்கக் கூட உங்களுக்கு அடிமையா இருப்பேனுங்க. (தனக்குள்) பைத்தியம் போலிருக்கு. ஏதோ கொடுத்துட்டான். ஊர் போய்ச் சேர்ந்ததும் திருப்பிக் கேக்காமல் இருக்கணும்.

ராஜ் : பயப்படாதே! திருப்பிக் கேட்கமாட்டேன். உட்காரலாமா?

வ. கா : உங்களுக்குக் கேட்டுட்டுதா எஜமான்?

ராஜ் : உம் கேட்டதப்பா. நான் பைத்யமாகவே இருக்கலாம். ஆனல், இந்தப் பைத்யத்துக்கு ரீவாவிலே ஒரு முக்யமான வேலே இருக்குப்பா. இப்போது உன் மரணபயம் போய் விட்டதா அப்பா!

வ. கா : சாமி ஐநூறு ரூபாய் கொடுத்தூட்டிங்க. சிலபேர் அஞ்சணு கொடுத்தூட்டு உயிரை எடுத்தூட்ருங்க. கவலேப்படாதீங்க. காத்து போல பறக்கறேனுங்க சாமி! யாரைப் பார்க்க போறீங்க?

ராஜ் : ரொம்ப வேண்டிய ஒருவர். நீ சீக்கிரமாகப் போனல், ஆயுள் முழுக்க உன்னே மறக்க மாட்டேன் அப்பா!

காட்சி 13

லீலா மணப்பந்தலிலே இருக்கிருள். சந்திரா ராஜுவின் கடிதத்தைக் கண்டு அவளிடமே ஒடிப் போய்க் கொடுத்து விடுகிருள். உண்மையறிந்த லீலா ராஜுவைக் காண ஒடுகிருள். அவளோடு கைலாஸ், சந்திரா. மற்றும் அவள் குடும்பத்தினரும் போகின்றனர். ராஜு வரும் வண்டி விழுந்து காரை நிறுத்திப் பார்க்கிருர்கள் அவர்கள். லீலா திடுக்கிடுகிருள். அவன் எதிரே ராஜு. அதுவும் மரணப் பிடியில்.

லீலா : ராஜ்!

டாக். கை : ராஜ்!

ராஜ் : என்னே மன்னிக்கணும் லீலா! முகூர்த்தத்துக்கு வர முடியல்லே. நேரமாயிட்டது. இதோ உன் மலர்.

அவனுடைய நெற்றியில் குங்குமத்தை இட்ட லீலா கருகிய மலரை தான் எடுத்துக் கொள்கிருள். ராஜு புனர் வாழ்வு பெறவே இருவரும் மணந்து மகிழுகின்றனர். ★


ஒரு மர்மம் கேளுங்கள்!
ஸம்பத்: டேய்! வீட்டுக் கணக்கைப் போடல்லேடா. இன்னிக்கு மட்டம் அடிச்சுடட்டுமா?
ஸாரதி: கணக்கு வாத்தியார் காதை திருகிடுவாரே. நாளைக்கு வரும்போது அரையணுவுக்கு N. V. ஷண்முகம் பொடி வாங்கிண்டுவா!
(மறுநாள்)
ஸம்பத்: நீ சொன்னபடி N.V. ஷண்முகம்பொடி வாங்கிண்டு வந்து அவர் கிட்டே கொடுத்தேன். கணக்கைப் போட்டியான்னு கூட கேக்கல்லேடா.
N.V. ஷண்முகம் கம்பெனியார்
த. பெ. 555. வண்ணாரப்பேட்டை, மதராஸ்.
NVS

REGD. NO. M. 4523

PESUM P

அழகிய ஆபரணங்களுக்கு

P.A. ராஜா செட்டியா

& பிரதர்

கோயமுத்தூர்

தந்தி : ராஜா · போன் : ௨௬௮ · தபால்பெட்டி : 15